திருக்கோயில்

ஆகஸ்டு 1977 ரூ. 1

R.R. 163/55/77 "P"
(120)
COMMISSIONER OF TAMIL NADU
ARCHIVES AND HISTORICAL RESEARCH
23 செப் 1977
56
EGMORE, MADRAS-8.



திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலின் ஊழியர் குடியிருப்பை, தமிழக ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் திறந்து வைத்தல்.

ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதசுவாமி திருக்கோயிலின் புதிய திருப்பணிக் குழுவை, திரு. டி எம். நாராயணசாமி பிள்ளை, M.A.,B.L., அவர்கள் தலைமையில், அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S., அவர்கள் துவக்கி வைத்தல் (14-7-77).

ஸ்ரீரங்கம் மிராசு நாவிதர்கள், ஆலயப் பணிக்கு இலவசமாக இடங்கொடுத்ததற்காகப் பாராட்டப் பெறுதல்.

முகப்பு :

திருப்பனந்தாள் அருள்மிகு செஞ்சடையப்பர் திருக்கோயில்.

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

THIRUKKOIL

மாலை : 20 | பிங்கள ஆண்டு—ஆவணித் திங்கள் ஆகஸ்ட்டு—1977 | மணி : 11

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள் !

'திருக்கோயில்'' திங்கள் இதழின் 'சந்தாதாரர்' னாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

'திரு ஆணையர் அவர்கள்,

அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600 034''

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ளகாலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 12/– உடன் இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ.1/- வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் சந்தாதாரர் ஆகலாம்.

தனிப்பட்ட சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவருமல் தெரிவித்து உதவினுல்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவுசெய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9-60 ஆகின்றது, ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. 15/-ல் இருந்து ரூ. 20/ ஆக ஜனவரி 77 முதல் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொருளடக்கம்

அம்பிகையின் அழகுவெள்ளம்
—திரு. ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல

திருச்சிற்றம்பலக்கோவையார்
—ஆசிரியர்

சிவலிங்க வழிபாடு
—திரு. ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல

சிவப்பிரகாசர் கவிச்சுவை
—திரு. மு. முத்துக்கிருஷ்ணன் எம். ஏ., பி., டி.

பழநிமலை வெண்பா
—திரு. இளங்கம்பன்

இளங்கோ அடிகளும், சிலப்பதிகாரமும்
—திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ. ஏ. எஸ்

திருவள்ளுவரும் அருணகிரிநாதரும்
—திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

தலைமலைநாதன்
—தேவானூர் திரு. பெ. இராமாநுஜன்

தமிழ் எழுத்துக்கள்
திரு. இரா. நாகசாமி, எம்.ஏ.

சேவலங்கொடியோன்
—ஆசிரியர்

திருமுழிக்களத்து விளக்கு
டாக்டர் திரு. என். சுப்புரெட்டியார் எம்.ஏ.பி.எச்.டி

திருச்சிராப்பள்ளி அருள்மிகு தாயுமான சுவாமி திருக்கோயில்
—திரு. ந. ரா. முருகவேள், எம். ஏ., எம்.ஓ.எல்.

அம்பிகை வழிபாடு
—திரு. ந. ரா. முருகவேள், எம். ஏ., எம் ஓ.எல்.

பெரியாழ்வார்
திரு. உ, வே, டி. இராமசுவாமி ஐயங்கார்பி.ஏ.பி.எல்.,

ஆசார்ய சுவாமிகளின் அருளுரை

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

“என் கடன் பணி செய்து கிடப்பதே”

அம்பிகையின் அழகுவெள்ளம்

ந.ரா. முருகவேள், எம்.ஓ.எல்.

158631

O2ஞ 211, N58
N77. 19.11

(முற்றொடர்ச்சி)

76) நீலஉரோம ரேகை.

அம்பிகை எல்லாப் பொருட்கும் மூலகாரணமாக விளங்குகின்றாள். அவளுடைய கணவராகிய சிவபெருமான், ஒரு சமயம் காமதேவனைக் கோபித்தார். அக்கோபம் ஒரு பெரிய நெருப்பைப் போல விளங்குகின்றது. அந்நெருப்பின் வெம்மையைப் பொறுக்க மாட்டாமல், காமதேவன் அழகிய பெரிய ஒரு மடுவில் விழுந்து குளித்தான். அம்மடு, அம்பிகையின் நாபியாகிய கொப்பூழ்போல உள்ளது. அம்மடுவில் காமன் விழுந்து குளித்தபோது, அவனைப் பற்றிய நெருப்பின் வெம்மையானது புகைக் கோடுகளாக மேலெழுந்தன. அப்புகைக் கோடுகளைத்தான் அம்பிகையின் திருவயிற்றிலுள்ள நீலநிறம் பொருந்திய மயிர்ஒழுங்கு என்று உலகத்திலுள்ளார் கூறுகின்றனர் போலும்!

மூலமே! நின் மகிழ்நர் கோப
　　முதுகனற் பொறாது. வேள்
கோல நாபி மடுவினிற்
　　குளிப்ப, அந்த வெம்மையால
மேல வாவு தூம ரேகை
　　வேர்எழும் கொழுந்தையோ?
நீல ரோம ரேகை என்று,
　　நீள்நிலம் குறிப்பதே!

அம்பிகையின் நாபியாகிய கொப்பூழ் ஒரு மடுவைப் போல உள்ளது என்றும்; அவளது திருவயிற்றின் மேல் எழுந்து ஓங்கிப் படர்ந்துள்ள உரோம ரேகையாகிய மயிரொழுங்கு, நெருப்பினின்று எழும் புகைக் கொடி போல உள்ளது என்றும்; ஆசிரியர் தற்குறிப் பேற்றமாகக் குறிப்பிடுகின்றார். அம்பிகையின உரோம ரேகையின் அழகுக்குத் தூமரேகை ஈடாகாது என்பார் "தூமரேகை வேர் எழும் கொழுந்தையோ, நீல ரோம ரேகை என்று நீள் நிலம் குறிப்பது?" என்று மறுத்தார். அதனால் இச்செய்யுள் தற்குறிப்பேற்ற அவநுதி என்னும் அணியாகும். உரோம ரேகையை தூமரேகை போல்வது என்று, ஒருவாற்றால் குறிப்பிடுவதற்கு ஏற்றபடி, சிவபெருமான் காமனைக் கோபித்தார் என்றும், அக்கோப வெப்பம் தாங்காமல் மடுவில் விழுந்தான் என்றும், அதுபோது அவன் உடலைப் பற்றிய வெப்பம் மடுவின்நீரில் புகைக் கொடிகளாக வெளிப்பட்டன என்றும்; கற்பனை நலை பொலிய ஆசிரியர் அருளிச் செய்தார். மூலம்–மூல காரணம். மகிழ்நர்-கணவர், சிவபெருமான். முதுகனல்-பெருநெருப்பு. பொறாது–பொறுக்கமுடியாமல். வேள்–காமன், மன்மதன். கோலம்-அழகு. நாபி-உந்தி, கொப்பூழ். தூமம்-புகை ரேகை–கோடு. உரோம ரேகை-மெல்லிய மயிர்ஒழுங்கு. 'மேல' என்பதனுள் அகரம்சாரியை. வாவுதல்–தாவுதல்.மேற்படருதல் ஒகாரம்-வினா

(77) யமுனை நீவு சிறுதரங்கம்

அம்பிகை, அடியார்களின் உள்ளமாகிய தாமரை மலரில் எழுந்தருளி வீற்றிருக்கின்றாள். அவளுடைய தனங்கள் பெருத்து, ஒன்றுடன் ஒன்று நெருக்குண்டு இருக்கின்றன. அதனால் அவற்றிற்கு நடுவே நின்ற காற்றானது, தனக்கு இடமின்றி வெளியின் வழியே நீலநிறமாக ஓடி, உந்தியாகிய விரிந்த குகையின் உள்ளே நுழைந்து மறைகின்றது. அங்ஙனம் மறைவதனையே உலகம் அம்பிகையின் கரிய உரோமரேகை என்றும், அது கருமை நிறம் வாய்ந்த யமுனையாற்றின் நீரில் எழுகின்ற அலைகளைப் போன்றுள்ளது என்றும், உலகம் மயங்கிக் கூறுகின்றது.

முளரி மாது! உன் முலையி னோடு
　　முலைநெருக்க இடையில் வான்
வெளியில் நீலம் ஓடி, உந்த
　　வியன் முழைக்குள் நுழையவே.
தெளியும் நீரில் யமுனை நீவு
　　சிறு தரங்கம் அனைய பேர்
ஒளியில் ஞாலம் மருளும்: ஈது
　　உரோம ரேகை என்னவே

அடியார்களின் உள்ளமாகிய தாமரை மலரில் அம்பிகை எழுந்தருளியிருத்தலின், "முளரி மாது" என்றார். முளரி-தாமரை. 'ஈர்க்கிடை போகா ஏர் இளவன முலை' எனக் கவிஞர்கள் பாடுவராதலின் "முலையினோடு முலை நெருக்க" என்றார். அம்பிகையின் திருவுந்தியினின்று எழும் அழகிய மெல்லிய மயிரொழுங்கின் இயல்பினை, "இடையில் வான்வெளியில் நீலம் ஓடி, உந்தி வியன் முழைக்குள் நுழைவது" என்றும்; "தெளியும் நீரில் யமுனை நீவு சிறுதரங்கம்"

போல உளது என்றும் கூறினார். இதுவும் தற்குறிப்பேற்ற அவநுதி என்னும் அணியாகும். இடை இல்வான்–நடுவே நின்ற காற்றானது. நீலம்ஒடி-நீலநிறமாக வெளியேறி. முழை–குகை, பள்ளம். யமுனை-யமுனை ஆறு. தரங்கம்–அலை. மருளும்–மயங்கிக் கூறும். இவ்விரண்டு செய்யுட்களாலும், அம்பிகையின் உரோம ரேகையின் சிறப்புக் கூறப்பெற்றது.

(78) திருவுந்தியின் புனைந்துரை :

அம்பிகை மலமற்றவள், தன்னை வழிபடும் அடியவர்களின் மலங்களைப் போக்கி அருள்பவள். அதனால் அவளுக்கு விமலை என்று ஒரு சிறப்புப் பெயர் வழங்கும். அவளது திருவுந்தியானது, கங்கையாற்றின்கண் ஒருபொழுதும் நீங்காமல் நிலைபெற்றுள்ள சுழியையும், அதுவும் அன்றி அவளது தனங்களாகிய மொட்டுக்களைத் தாங்குவதற்கு உரிய உரோம ரேகையாகிய கொடி வளரும் பாத்தியையும், எல்லோருக்கும் காம நோயைத் தரும் காமனுடைய தீ அரும்பும் ஓம குண்டத்தையும், அம்பிகையின் கணவராகிய சிவபெருமானின் கண்களாகிய தாமரை மலர் இடைவிடாது பொருந்துகின்ற சிறந்த மடுவையும் போன்று விளங்கும். இங்ஙனம் அல்லாமல் வேறுவகையாகக் கூறுதல் அம்பிகையின் திருவுந்திக்கு ஒப்புமையும் பொருத்தமும் உடையனவாகா !

தூய கங்கை நிலை படைத்த
சுழி ; தனத்து முகையினால்
அரிய துங்க ரோம வல்லி
ஆல வாலம் ; விரகவேள்
தீ அரும்பும் ஓம குண்டம் ;
இறைவர் செங்கண் இடைவிடா
மேய கஞ்ச மடு, உன் உந்தி ;
வேறு உரைத்துஎன் ? விமலையே

அம்பிகையின் கொப்பூழ் ஆனது, சுழித்த நிலையில் அழகுற விளங்குதலின் அதனைத் 'தூய கங்கை நிலை படைத்த சுழி' என்றார். அம்பிகையின் தனங்களைத் தாமரை முகை' என்றும், திருவுந்தியினின்று மேலோங்கி எழுந்து வளர்ந்துள்ள அழகிய உரோம ரேகையைத் 'தாமரைக் கொடி' என்றும், உந்தியை அக்கொடி வளர்தற்கு இடமாக இருத்தலால் 'பாத்தி' என்றும், இயைபு உருவகம் செய்து 'தனத்து முகையினால் அரிய துங்க ரோம வல்லி ஆலவாலம்" என்றார். முகை–அரும்பு, இங்குத் தாமரை மொட்டைக் குறித்தது. துங்க–உயர்ந்த. வல்லி–கொடி. ஆலவாலம்–பயிர் அல்லது கொடி வளரும் பாத்தி. அம்பிகையின் திருவுந்தியினின்றே எல்லா உயிர்களும் தோன்றுதலின், அதனை மன்மதனின் 'ஓமகுண்டம்' என்று சிறப்பித்தார். சிவபெருமானின் திருக்கண்களாகிய தாமரைகள், அத்திருவுந்தியின் அழகை இடையறாது நோக்குதலின், அதனைத் தாமரைகள் மலரும் மடு என்னும் குறிப்பில் "இறைவன் செங்கண் இடைவிடாது மேய கஞ்சமடு உன் உந்தி" என்றார். கஞ்சம்—தாமரை மலர். உந்தி—கொப்பூழ்.

உந்தி எனும் சொல் ஒன்றே சுழி, ஆலவாலம், ஓம குண்டம், கஞ்சமடு என்று உருவகம் செய்யப்பெற்று அவற்றுடன் தனித்தனியே சென்று இயைதலால் இச்செய்யுள் 'உருவக தீவகம்' எனப்படும். எல்லோரையும் வெற்றி கொள்ளுதற்காக, மன்மதன் வேள்வி செய்து வழிபட்டு ஆகுதி பண்ணும் ஓமகுண்டம் போலக் குழிந்து ஆழ்ந்து வட்டமாக விளங்குதலின் "விரக வேள் தீ அரும்பும் ஓமகுண்டம்" என்றார். விரகம்–காமவேதனை. வேள்–கருவேள், மன்மதன் காமநோய் வயப்பட்டார் உடல் வெப்பம் உறுதலால் அவ்வுணர்வைத் தீ என்று உருவகித்தார். இச்செய்யுள் அம்பிகையின் திருவுந்தியைப் புகழ்ந்தது.

(79) திருமருங்குல் :

அம்பிகை, நிலமடந்தையால் பரவப்படுகின்றவள் மங்கைப் பருவத்தை உடையவள். அவளது கொங்கைகள் பெரியனவாய், பரியனவாய் விளங்குகின்றன எனவே அவற்றைச் சுமக்கமாட்டாமல், அம்பிகையின் இடை வளைந்து சிறுகி நெளிகின்றது, எங்கே விரைவில் ஒடிந்துவிடுமோ என்று எண்ணும்படி, வரை வரையாய் மூன்று கோடுகள் அதன்கண் தோன்றுகின்றன. வெள்ளம் பெருகுங்கால் இடிந்து சிதையும் ஆற்றங்கரையின்கண் வாழ்கின்ற மரத்தைப்போல தனங்களைத் தாங்கமாட்டாமல், வளைந்து நெளிகின்ற இடையின் நிலை உள்ளது. அம்பிகை என்றும் இறவாதவள் என்று வேதாகமங்கள் முழங்குகின்றன ஆயினும், இவ் இடையின் நிலையைக் காணும்போது அவ் வேதாகம மொழிகளும்கூட, ஒருகால் அழிவெய்திவிடுமோ என்னும் ஐயப்பாடு எழுகின்றது. ஆதலால் அம்மொழிகள் அழிவு எய்தும் முன்னரே, தனக்கு ஓர் உறுதியைத் தேடிக் கொள்ள அவ் இடையானது கருதுகின்றது.

தரை மடந்தை பரவும் மங்கை !
தன தடம் பொறாது, நின்
திரு மருங்குல் அற வளைந்து,
சிறுகி, மூ இரேகையாய்,
வரை பிளந்து ஓர் இடிகரைக்கு
வாழ் மரத்தொடு ஒத்ததால் ;
உரை கடந்து விடுமுன், மற்று ஓர்
உறுதி தேட எண்ணுமே !

ஒரு பெண்ணின் இடைக்கு இயல்பு, வளைதலும், சிறுகுதலும், முக்கோடுகள் தோன்றப் பெறுதலும், மெல்லியதாக இருத்தலும் ஆகும். அவ்வியல்புகள் அனைத்தும் அம்பிகையின் இடைக்கு உண்டு என்பார் "திருமருங்குல், அறவளைந்து, சிறுகி, மூ இரேகையாய் வரைபிளந்து, ஓர் இடி கரைக்கண் வாழ் மரத்தொடு ஒத்தது" என்றார். மருங்குல்–இடை. ரேகை—கோடு. சிறுகி–நுணுகி. வரைபிளந்து–வரை வரையாய்க் கோடுகள் அமைந்து. தனங்களின் சுமை தாங்க மாட்டாமல் வளைந்து நெளியும் அம்பிகையின் மெல்லிய சிறிய இடைக்கு, ஆற்றுவெள்ளம் மோதுதலால் இடிந்துவிழும் நிலையிலுள்ள ஆற்றங்கரையில்

வாழ்மரத்தை உவமையாகக் கூறி "உரைகடந்து விடுமுன், மற்றுஓர் உறுதி தேட எண்ணும்" என்று, ஆசிரியர் தம் குறிப்பை ஏற்றிக் கூறியதனுல், இச் செய்யுள் உவமைத் தற்குறிப்பேற்றம் என்னும் அணியாகும். "இடிகரைக்கு" என்னும் தொடரில் ஏழன் உருபிற்கு நான்கன் உருபு வந்தது. ஒரு கொம்பானது ஒடிய வளையும் அளவில். அதன் அரையில் இரேகை ரேகையாகக் கோடுகள் படரும் ஆதலின் 'மூ இரேகையாய் வரைபிளந்து' என்ருர்.

(80) உலகமோ தெளிவது? உமையே :

உமையம்மையாகிய அம்பிகையின் தனங்கள், இறுகியவை; அடிகனத்தவை; மேற்கட்டப்பட்டிருக்கும் கச்சைக் கிழித்து உதறியவை; இளகி அசையும் பக்கங்களை உடையவை; ஒன்றுடன் ஒன்று நெருங்கி வளர்பவை; யானையின் பெரிய மத்தகத்தையும் மதத்தையும் உடையவை. இத்தகைய அம்பிகையின் தனங்களை, இடை சுமக்க முடியாது என்று அஞ்சிப் பிரமதேவன், அவைகளை மேலும் வளரவொட்டாமல் பூண்கள் இட்டு அழுந்தச் செய்தாற்போல அம்பிகையின் திருமார்பில் மூன்று கோடுகள் உள்ளன. அக் கோடுகளைக் கண்டு முனிவர்களும், தேவர்களும்கூட, அவற்றின் தன்மையை உணர்ந்து கொள்ள இயலாமல் மருட்சியுறுவார்கள் என்ருல், அவற்றின் இயல்பினை இம்மண்ணுலகில் உள்ள மனிதர்கள் தெளிதல் இயலுமோ!

வம்பைத் தொலைத்து, உதறி இறுகிக் கனத்து இளகி
வருபுடை நெருக்கி வளர்மாக்
கும்பக் கடாக் களிற்றினை அனைய உனதுமுலை
கொடிது கொடிது என்று வெருவா
அம்பொற் றனிக்கமல இறை பொருது இடைஎன
அழுத்துபூண் என முனிவரோடு
உம்பர்க்கும் உளம்மருள ஒளிகெழும் இரேகை, மூன்று
உலகமோ தெளிவது? உமையே!

இச்செய்யுள், அம்பிகையினுடைய தனங்களின் சிறப்பையும், இடையின் இயல்பையும் புனைந்துரைத்தது. "வம்பைத் தொலைத்து உதறி, இறுகி, கனத்து, இளகி, வருபுடை நெருக்கி, வளர்மாக் கும்பக் கடாக் களிற்றினை அனைய முலை" என்று அம்பிகையின் தனங்கள் புகழப்பெற்றன. இடையின்கண் அமைந்துள்ள முக்கோடுகளை "முலை கொடிது கொடிதென்று வெருவா, அம்பொன் தனிக்கமல இறை இடை பொருது என அழுத்து பூண்" என்ருர். வெருவா—அஞ்சி. கமல இறை—தாமரை மலரிலுள்ள பிரமன். பொருது—தாங்க முடியாது. இடை—இடுப்பு. உம்பர்க்கும். என்பதில் உம்மை சிறப்பு. 'உலகமோ தெளிவது, என்பதில் ஓகாரம் எதிர்மறை; தெளியாது என்பது குறிப்பு. உமை—உமாதேவியார். ஒளிகெழுமி—பிரகாசம் பொருந்தி. உம்பர்—தேவர்கள். உளம்மருள—மனம் மயங்கி நிற்க. 'கமல இறை என்பதற்குத் திருமகள் எனப் பொருள் கொள்ளினும் பொருந்தும். களிறு, தோற்றப் பொலிவினுல் முலைக்கு உவமையாயிற்று. இச்செய்யுளில் தொழிலதிசயம் என்னும் அணியும், திரிவு அதிசயம் என்னும் அணியும் அமைத்துள்ளன. இவ் இரண்டு பாடல்களும் இடையின் சிறப்பைப் புனைந்தது.

(81) சேம நிதி :

அம்பிகை இனிய அமிழ்தம் போன்றவள். கொத்துக் கொத்தாக விரிகின்ற மலர்கள் பொருந்திய சோலைகளை உடையது இமயமலை. அதற்குத் தலைவன் இமயமலையரசன். அம்மலையே அவனுக்கு உடம்பாக உள்ளது. அங்ஙனம் இமவானுக்கு உடம்பாகத் திகழும் குலமலையாகிய இமயத்தின் பக்கங்கள், மிகுந்த விரிவும் நிறைந்த பாரமும் உடையன. அவற்றைப் போன்ற விரிவும் பாரமும் பொருந்தித் திகழ்வது அம்பிகையின் நிதம்பம். எத்தனை பெரிய உலகங்கள் அற்று அழிந்தாலும், தனக்கு அழிவில்லாமல், அப் புவனங்களுக்கெல்லாம் இருப்பிடமாய், சேமநிதி வைக்கும் பெட்டகம்போல விளங்குவது அம்பிகையின் நிதம்பம். அதன் பரப்பும் விரிவும் கனமும், உலகங்களைத் தன்பாற் பொதிந்து கொண்டு போற்றிப் பாதுகாப்பதற்குக் காரணமாக விளங்கும்.

கொத்துவிரி அலர்சோலை இமையவெற் பரசன், மெய்க
குலமலைப் பக்கம் எனவாழ்
அத்தனை விரிந்த அகலத்தொடு பெரும்பாரம்
அடைய, உன் நிதம்ப இடையே
எத்தனை பெரும்புவனம் இற்ருலும் அழிவிலை
இதற்குஎனச் சேமநிதி போல்
வைத்தது பரந்து இடங்கொண்டு உலகைஇடம்தர
வருத்தவோ! மதுர அமுதே!

அம்பிகையின் அருள்நலத்தை வியந்து "மதுர அமுதே" எனப் புகழ்ந்தார். சோலையைக் "கொத்துவிரி அலர்சோலை" என்றும்; இமயத்தை "இமய வெற்பு அரசன்" என்றும் சிறப்பித்துக் குறிப்பிட்டார். அம்பிகையின் நிதம்பம் விரிவும் அகலமும் பாரமும் உடையது என்பார். "குலமலைப் பக்கம் என வாழ் அத்தனை விரிந்த அகலத்தொடு பெரும்பாரம் அடைய, உன் நிதம்பம்" என்ருர். அடைய—முழுதும். "வருத்தவோ' என்பதில் ஒகாரம் எதிர்மறை வினு; வருத்துதற்கன்று, வாழ்வித்தற்கு என்னும் பொருளை உணர்த்தும். இச்செய்புள் பொருளதிசயம் என்னும் அணியாகும். இதனுல் நிதம்ப வருணனை கூறப்பெற்றது.

(82) நித்தர் தோல்உரித்துஉடுத்த நேயம் :

சிவபெருமான் முன்ஒருகால் யானையின் தோலை உரித்து, அதனைத் தமக்குப் போர்வையாக அணிந்து கொண்டார். அதற்கு உரிய காரணம் எதுவாக இருத்தல் கூடும் என்பதனை ஐயுற்று, இச்செய்யுள் வியந்து வினவுகின்றது. அம்பிகையின் தொடைகள் பொன்மயமாய், வாழைத்தண்டைப்போல விளங்குகின்றன. யானையின் துதிக்கை அவற்றின் அழகிற்குத் தோல்வியுறுகின்றது. அம்பிகையின் முழந்தாள் யானையின் மத்தகத்தைப் போன்று, அதனினும் மிக்க சிறப்பும்

அழகும் வாய்ந்து விளங்குகின்றது. அவளுடைய பருத்த நகில்கள், யானையின் தந்தங்களை வெற்றி கொண்டு, தம்மை அவைகள் வணங்குமாறு செய்கின்றன. இங்ஙனம் தனது தொடைகளுக்கும், முழங்கால்களுக்கும், முலைகளுக்கும் ஒரோவழி உவமையாகக் கூறத்தக்க நிலையில் உள்ள யானையைச் சினந்து, அதன் துதிக்கையைத் தனது தொடையினாலும், அதன் மத்தகத்தை முழந்தாளாலும், மருப்பைமுலைகளினாலும் முறையே அடக்கி வெற்றி கொண்டும், யானையின்மீது அம்பிகைக்குச் சீற்றம் தணியவில்லை. இச்சீற்றத்தைத் தணித்தற்பொருட்டோ, அல்லது தமது துணைவியின் உறுப்புகளுக்கு உவமையாகக் கூறப்பெறும் உயர்வும் சிறப்பும் இந்த யானைக்கோ அமைவது என்னும் கருத்துப் பற்றியோதான், சிவபெருமான் யானையின் தோலை உரித்துப் போத்துக் கொண்டனர் ஆதல் வேண்டும்.

பொற்கதலி புறங்காட்டும் குறங்கால் வேழப்
புழைக்கை தடிந்தும், சிவனைப் பணிந்துதேய்ந்த
வற்கடின முழந்தாளிற் கும்பம் சாய்த்தும்,
மணிமருப்பைக் கனதனத்தால் வளைத்தும், அம்மே
நிற்கடின கோபம் அமராமை கண்டோ ?
நித்தர் அதன் தொக்குஉரித்து அதுஉடுத்தநயம
நற்கருதி இவர் உறுப்போடு உவமைவீறு
பெற்றதுஇது என்னும்இந்தப் பெருமைகண்டோ?

அம்பிகையின் அழகிய தொடையின் சிறப்பைக் கூறுவார் "பொற்கதலி புறங்காட்டும் குலங்கு" என்றார். குறங்கு–தொடை. கதலி - வாழை. புறங்காட்டுதல்–தோல்வி புறுதல். அம்பிகையின் தொடைக்குச் சாதாரண வாழை உவமையாதல் கூடாமையின், பொற்கதலி' என்று சிறப்பித்தார். யானையின் துதிக்கையைப் பெண்களின் தொடைகளுக்கு உவமையாகக் கூறுதல் கவிதை மரபு. ஆயினும் அம்பிகையின் தொடைகளுக்கு அஃது உவமையாக இயலாது என்பார். 'குறங்கால் வேழ்ப்புழைக்கை தடிந்து' என்றார். வேழம்–யானை. புழைக்கை–துளையை உடைய துதிக்கை. தடிந்து–தோல்வியடையச் செய்து, உத்தம மனைவியர்க்கு இயல்பு தம் கணவரை நித்தமும் பணிதல் ஆதலால் "சிவனைப் பணிந்து" என்றார். அம்பிகையினது முழந்தாளின் இயல்பைக் கணவராகிய சிவபிரானைப் "பணிந்து தேய்ந்த வல்கடின முழந்தாள்" என்று சிறப்பித்தார், பிற பெண்களின் முழந்தாளுக்கு யானையின் மத்தகம் உவமையாகுமாயினும். அம்பிகையின் முழந்தாளுக்கு அஃது உவமையாக வல்லததன்று என்பார், "முழந்தாளில் கும்பம் சாய்த்து" என்றார். கும்பம்–யானையின் மத்தகம். சாய்த்தல்–அழித்தல். பெண்களின் தனங்களுக்கு யானையின் தந்தங்களை உவமை யாகக் கூறுவது மரபு. அதனை மறுத்து "அணிமருப்பைக் கனதனத்தால் வளைத்து" என்றார். பகைவரை வெல்லுங்கால் மருங்கு அறச்சாய்த்து அழித்து வெல்லுதல் வேண்டுமாதலின், தனது துடையால் துதிக்கையையும், முழந்தாளால் மத்தகத்தையும், கனதனத்தால் மருப்பையும் அடக்கி வென்றும், அம்பிகையின் சினம் தணிந்திலது என்பார். "நின் கடின கோபம் அமராமை கண்டோ ?" என்றார். அமராமை–தணியாதிருத்தல். 'நின் கடின' என்னும் தொடர் 'நிற்கடின' என எதுகை நோக்கி வலித்தல் விகாரமாயிற்று. சிவபெருமான் யானைத் தோலை உரித்தற்கு, அம்பிகையின் சினத்தைத் தணிவித்தலும், தம் துணைவியின் உறுப்புக்களுக்கு உவமையாகும் உறுப்புக்களை 'இதுவா பெறுவது?" என்னும் கருத்துமே காரணமாதல் வேண்டுமென ஆசிரியர் தற்குறிப்பேற்றமாகப் பாடினர். ஆதலால் இது தற்குறிப்பேற்றம் என்னும் அணியாகும். கும்பம்–குடம், இது உவமையாகு பெயராய்க் குடம் போன்ற யானையின் மத்தகத்தைக் குறித்தது. நித்தர்–சிவபெருமான், தொக்கு–துவக்கு, தோல். உரித்து.

உம்பர்தொழும் தொறும்மகுடச் சானை தீட்டி
ஒளிரும் நக நுனைக்கணைஓர் ஐந்தும் ஐந்தும்,
செம்பொன்மணிக் கணைக்காலாம் இணைப்பொற் றூணி
சேர்த்தன்றோ? சிவன்பகை, வேள்தீருகின்றான் ;
அம்பு ஒருபத்து அளித்தனை இன்று; அன்று போல
ஐங்கணைதொட்டு அழியின்,அது பழுதுஎன்று
—அன்றோ ?
வம்புஅமரும் கனதனப்பொற் றிருவே! உன்றன்
மனவிரகின் செயல்ஒருவர் மதிப்பது அன்றே!

—தொடரும்

திருச்சிற்றம்பலக் கோவையார்

[கருத்துரைத் தொகுப்புச் சுருக்கம்]

(முற்றொடர்ச்சி)

(15) ஒருவழித்தணத்தல் :

[தலைவனும் தலைவியும் கலந்து பழகுதல் கண்டு, அயலார் அம்பலும் அலரும் நிகழ்த்துதலைத் தோழி தலைவனுக்குக் கூற, தலைவன் ஒருசில நாட்கள் பிரிந்துறைதல்.]

தோழி : தலைவனே! ஒருவனுக்குப் புகழ் ஏற்பட்டாலும், அவற்றிற்கு ஏதேனும் ஒரு காரணம் இருக்கும். அக் காரணம் வளர வளர அதன் காரியமாகிய புகழ் அல்லது பழி என்பதும் வளர்ந்து பெருகி நிற்கும். அக் காரணங்களை ஒழிப்பின், அவற்றின் பயனாகிய புகழும் பழியும்கூட. அழிந்து ஒழிந்துபோம். தலைவியை நீ அடிக்கடி சந்தித்தலால், தலைவியைக் குறித்து ஊரில் அலரும் அம்பலும் ஆகிய பழிச்சொற்கள் ஏற்பட்டுள்ளன. அப்பழிச் சொற்கள் ஒழிதற் பொருட்டு நீ சில காலம் தலைவியைப் பிரிந்திருத்தல் நல்லது, அங்ஙனம் நீ சிலகாலம் பிரிந்திருப்பின், தில்லையம்பலவனின் திருவடிகளைத் தலைமேற் சூடிய பெரியோர்களின் பிறவித் துன்பம் அழிந்தொழிவது போல, நின்னால் தலைவிக்கு ஏற்பட்டுள்ள பழியும் அறவே அற்று நீங்கி ஒழியும். (181)

தலைவி : புலியூர்ப் புனிதனாகிய சிவபிரானின் அம்பர் என்னும் தலத்தைச் சூழ்ந்து, அலைகளால் கரையை மோதி, மிகவும் ஒலிக்கின்ற, வரம்பு கடவாத கடலே ; முத்துக்கள் பரவி, அலைகள் மோதுகின்ற கடல் நீரானது, மேகத்தையும் விண்மீன்களையும் தன்னிடம் பரப்பி நிற்கும் வானத்தைப்போல, ஒளிவிட்டு விளங்கும் துறையை உடைய நம் தலைவர், தம்மை விட்டுப் பிரிந்து சென்றார். அவர் மீண்டு வரும் செய்தியை எனக்குக் கூறிற்றிலர்; உனக்காயினும் கூறிச் சென்றனரா? கூறுக.

[கடல் வானத்தையும், அலைகள் மேகத்தையும், மீன்கள் விண்மீன்களையும் ஒத்துள்ளன என்பது நல்லகற்பனை.] (182)

கொடிய அரவங்களை அணிகலன்களாகக் கொண்ட சிவபிரானின் புலியூரைச் சூழ்ந்துள்ள, அலைகள் மோதுகின்ற கடலே ; வண்டினங்கள் பாணர்களைப் போல இசை பாட, புன்னை மரங்களாகிய வள்ளல்கள் அவ் இசையைக் கேட்டுப் பரிசு வழங்குவது போன்று, தமது தாதாகிய பசும்பொன்னை, மலராகிய வெண்கிழியில் பொதிந்து, தமது திருவோலக்கமாகிய சோலைகளிலிருந்து கொண்டு கொடுக்கின்ற செழிப்பு மிகுந்த துறைகளையுடைய சேர்ப்பராகிய நம் தலைவர், திங்களை போலும் ஒளியையுடைய என் வெள்வளைகளைக் கவர்ந்துகொண்டு சென்றார். அவர்தம் இத்தகைய இயல்பு குறித்து, நீ எமக்கு ஏதும் கூறுகின்றிலை இங்ஙனம் நீ கூறாது ஒழிந்தது என்னை !

["போர்க்கடல்" என்றும் " ஊர்சுற்றும் கடல் " என்றும், தலைவி இழிவு தோன்றக் கூறினள். வெள்வளை-சங்கினாற் செய்த வளைகள். 'வெள்வளை கொண்டு அகன்றார்' என்றது, உன் பொருளும் என் பொருளும் ஒருசேரக் கவர்ந்து சென்ற கள்வர்' என்றற்கு நின் துறைக்கண் உள்ள. புன்னைகள், பாடிவரும் வண்டிற்குப் பொற்கிழி தரும் வள்ளன்மையுடையனவாய் விளங்கவும், நினக்கு அக்குணம் அமைந்திலதே என்னும் குறிப்பில், தலைவி 'பாண் நிகர் வண்டினப் பாட, பைம்பொன்தரு வெண்கிழி தம் சேண்நிகர் காவின் வழங்கும் புன்னை என்றாள். வண்டுகள் பாணராகவும், புன்னை மரங்கள் வள்ளல்களாகவும், வண்டின் இசை பாடலாகவும் தாதுகள் பசும்பொன்னாகவும், போதுகள் வெண்கிழியாகவும், சோலைகள் திருவோலக்கமாகவும் உருவகம் செய்துள்ள திறன், பெரிதும் போற்றத்தக்கது.] (183)

பகன் என்னும் சூரியனின் தாமரைமலர் போன்ற கண்களைத், தக்கனின் வேள்வியில் அழித்த சிவபெருமானின், புலியூரைச் சூழ்ந்த பழனத்தின்கண் மலரும் தாமரைகளில் வாழும் அன்னமே! வண்டு ஆகிய நீலமணியை அணிந்து, தாது ஆகிய செம்பொன்னையும், அரும்பு ஆகிய முத்தையும் அணிந்த தனது முகத்தின்கண் தாழ்ந்து தொங்குகின்ற, தளிர் ஆகிய குழைகளையுடைய புன்னைமரம் ஆகிய பெண்ணானவள், தலைவர் என்னைப் பிரிந்து சென்ற இந்நிலையிலும், எனக்குச் செய்தி ஏதும் சொல்லுகின்றிலள் பிரிந்தவர் பிரிந்தவர்தாமோ? மீண்டும் இத்துறைக்கு வருவரோ? யான் அறிகின்றிலேன், நீ அறிந்திருப்பின், எனக்குக் கூறுக. (184)

பறவைகளும் அலைகளும் தமக்குள் பொருதுகொள்ள சங்குகள் ஒலிக்கின்ற கரையில் சென்று, மோதுகின்ற கடலே ; உள்ளம் உருகி, மெய்ம் மயிர் சிலிர்க்கும்படி உடையவனாகிய சிவபெருமான், தான் ஆட்கொள்ளும் தன் அடியவர்களுள்ளே, எமக்கும் ஒரு கூட்டத்தைத் தந்தான். அத்தகைய சிவபெருமான் நின்று கூத்தாடுகின்ற புலியூரை விட்டு நீங்கும்வண்ணம் சென்ற, எம் தலைவரது பெரிய தேர் ஓடிய வழியினை, நீ நின் அலைகளால் தூர்த்துவிடாதே! இனி எம் உயிர்க்குப் பற்றுக்கோடு இதுவேயாகும்! (185)

கூடல் தெய்வமே! ஆழி சூழ்ந்த, உலகம் முழுவதை யும் திருத்தும் புலியூரை உடைய சிவபெருமானது அருள்போல, இன்பம் மிக அளித்து, கடல்நீர் வந்து மோதித் திருத்துகின்ற மணற்குன்றின்கண், என்னை நீத்து அகன்ற தலைவர் வருதல் வேண்டும் என்று, கூடல் இழைத்தும், சுழிக்கணக்குச் சொல்லியும் யான் வருந்தாமல், எம் தலைவனின் உள்ளத்தை நெகிழ் வித்து, அவனை ஈண்டு மீண்டும் கொணர்ந்து நீ சேர்க்கவல்லையோ? வல்லையேல், அங்ஙனம் செய்தருளுமாறு யான் நின்னைப் பணிந்து இறைஞ்சு கின்றேன்.

[தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவியர், தம் கண்ணை மூடிக்கொண்டு, தரையில் வட்டமாக ஒரு கோட்டைக் கீறி, பின்னர்க் கண்திறந்து பார்த்து, அக்கோடு தொடங்கிய இடத்தில் வந்து கூடியிருப்பின், தலைவன் திரும்ப வந்து கூடுவான் என்றும்; விலகியே இருப் பின் தலைவனும் விலகியே இருப்பன் என்றும் அறிந்து கொள்ளுவர். இச்செயல் அகப்பொருள் நூல்களில் 'கூடல் இழைத்தல்" எனப்படும். இங்ஙனம் தலைவனைப் பிரிந்த தலைவி, தலைவன் வரவை அறி தற்குச் செய்வதாகக் கூறுதல், பண்டைக்கால நூல களின் வழக்கு, "மாடநீள் மருகற் பெருமான் வரிற் கூடுநீ என்று கூடல் இழைக்குமே" என்னும்; திருநாவுக்கரசர் தேவாரமும் ஈண்டுக் கருதியுணர்தற் குரியது.] (186)

மாலைநேரத்து மறைகின்ற சூரியனே! கருமை நிற முடைய அலைகளும், அவ்வலைகளால் முன்னும் பின்னு மாக ஈர்த்து அலைக்கப்படும் தோணிகளும், சுறு மீன் களும், மீன் பிடிப்பவர்களும், கடலும், முறையே போர் நிகழ்ச்சிக்குரிய உறுப்புக்களையும், போர்க்களத்தையும் போன்று விளங்குகின்ற துறையை உடைய தலைவனின் பிரிவும்; சிறந்த தூயோராகிய பிரமன் திருமால் ஆகிய வர்களின் என்புமாலையை அணிந்த, சிவபெருமானின் தில்லையின் எல்லைக்கண் உள்ள, பல பூஞ்சோலைகளின் கண், நின்னைவிட்டுப் பிரியேன் என்று, அத் தலைவர் சொல்லிய வஞ்சமும், என் உடம்பை நோயுற்றார் உடம்பு போலப் பெரிதும் வருந்தச் செய்கின்றன. யான் இனி உய்யும் நெறி எதுவோ? கூறுவாயாக!

[கடல், போர்க்களம்–அலைகள், குதிரைகள்–தோணி கள், தேர்கள்–சுறுமீன்கள், யானைகள்–மீன்பிடிப்போர், காலாட்கள் போல விளங்குவதாகச் செய்துள்ள கற்பனைத் திறம் போற்றுதற்குரியது.] (187)

சூரியன் மறைந்துவிட்டான். இம் மாலைக் காலத்து வரும் துன்பத்தை நீக்கி. நம்மைக் காப்பதற்குரிய தலைவர், எங்கோ தொலைவில் இருக்கின்றார். அது மட்டுமன்றி, புலன்களிற் பற்றற்றவர்க்குப் புகலிடமாக உள்ளவனும், தன்பால் அடைக்கலம் புகுந்தவர்கள் பின்னர் விட்டுப் பிரிதற்கு அரியவனும், எல்லோருமே துதித்தற்குத் தக்கவனும் ஆகிய சிவபெருமானின் தில்லையின்கண் உள்ள, இந்த அகன்ற பெரிய கழியின் கண், கொழுத்த மீன்களை உண்டு திரியும் அன்னங் களும், இவ்விடத்தைவிட்டுத் தம் உறைவிடங்களுக்குச் சென்றன. இனி நான் என் செய்வேன்.? (188)

என்னுடைய பிரிவாற்றாமையாகிய துயரத்தை நீக்கு வதற்கு, யாதொரு வழியையும் ஆராயாமல், இந்தக் கடற் கழிகளின்பால் புகுந்து, தமக்கு உணவு தேடப் புகுகின்ற வண்டினங்கள் ஆகிய பறவைகள், என் னுடைய மனத்திலுள்ள பெருந் துயரத்தினை இந் நிலைமைக்கண்ணும் அறிகின்றன இல்லை. இஃது என்ன தீவினையோ? பொன்போலப் பொலிந்து, மாணிக்கம் போல ஒளிவிட்டு, பவளம்போல மின்னு கின்ற சடையை உடைய சிவபெருமானின் புலியூர்க்குட் சென்று வழிபடாதவர்களைப்போல, யான் பெரிதும் துயருற்று வருந்துகின்றேன். (189)

தில்லைக்கண் உள்ளவரும், பகைவர் ஒருங்கே அழியும்படி முப்புரங்களை எரித்தவரும் ஆகிய சிவபெருமானின், ஒற்றை வில் ஆகிய மேருமலையை வலமாகச் சுற்றிக்கொண்டு, எத்தனையோ பல காதங் கள் உள்ள நெடுந்தூரத்தைக் கடந்து, சூரியன் மறைந்துவிட்டான். அதனால் மாலை நேரம் விரைந்து வந்து கொண்டிருக்கின்றது. இனி இவள் எவ்வாறு பிரிவுத் துயரத்தைத் தாங்கியிருப்பாள்? என்று வருந்தி, கழியின்கண்ணுள்ள தாமரை மலர்கள் கண்ணீர் சொரிகின்றன. அதுமட்டுமா! என்னுடைய பிரிவுத் துயரத்தை மிகுவிக்கும் கொடிய இரவு நேரம் கழிதற்பொருட்டு, விரைந்து வருதல் வேண்டும் என்று சூரியனை நோக்கி, தம் மலராகிய கைகளைக் குவித்து வணங்கி, இத் தாமரைகள் இரந்து வேண்டுகின்றன. இவைகள் என்பால் பெரிதும் அன்புடையன போலும்! (190)

மூவல் என்னும் தலத்தில் அருள்வடிவினனாய் எழுந்தருளியிருக்கும் முதல்வனும், தில்லைச் செல்வனு மாகிய சிவபெருமானது, கடலால் சூழப்பட்ட நாவலந் தீவாகிய இவ்வுலகம் முழுவதும் துயிலின்கண் அழுந்தி, அமைதியாக உறங்கிக்கொண்டிருக்கும் இந் நள்ளிரவுப் பொழுதிலும், யான் துயில்வரப் பெறாமல் அமைதி யிழந்து வருந்திக் கொண்டிருக்கின்றேன். இந்த அன்னப் பறவைகளோ, எனது துயிலாமைக்கும், அமைதியின்மைக்கும் காரணமாகிய காதல் நோயை, எம்மைக் காப்பதற்குரிய காதலருக்குச் சென்று கூறாமல், என்னைத் தனியாக வருந்தவிட்டுவிட்டு, இங் கிருந்து சென்று, தாம் விரும்பிய தம் காதற் சேவலைத் தழுவி இன்புற்று, ஒரு கவலையுமின்றித் துயின்று கொண்டிருக்கின்றன. இனி என் துயரத்தை எம் தலைவருக்குக் கூறுபவர் யாவர்! (191)

ஒளிமிகுந்து விளங்கும் சந்திரனே! தில்லையின்கண் உள்ள சிவபெருமானின் அருளைப் பெறாத கொடியவர் களைப்போல, ஒரு சிறிதும் கண்ணோட்டம் இன்றி, எம்முடைய தலைவர் எம்மை விட்டுப் பிரிந்து சென்றார். அங்ஙனம் அவர் போனதனால் எனக்கு உண்டாகிய துன்பத்தினை நீயே காண்பாயாக. யான் அத் துன்பத் தினை நினக்கு விளக்கிச் சொல்ல வேண்டுவதில்லை. எம் தலைவர் என்னைப் பிரிந்த பிரிவாற்றாமையால்; என் னுடைய வளைகள் நிற்கவில்லை; நெஞ்சம் மிகவிம்மி மெலிந்து கரைந்து உருகுகின்றது; நீண்ட கண்கள் துயிலை இழந்து வருந்துகின்றன. கண்களில் கண்ணீர் திரையிடுகின்றது என்று, நீ அவர்பால் சென்று கூறு வாயாக! இதுவே நின்பால் யான் பெரிதும் இரந்து கெஞ்சிச் செய்துகொள்ளும் வேண்டுகோள் ஆகும்.(192)

தோழி; வளர்ந்து ஓங்குகின்ற மிளகுக் கொடியைத், தமக்கு ஏற்ற உணவு அன்று என்று அறியாத இளைய குரங்குகள், மிகுதியாக விருப்பித் தின்று மயக்கமுற்று வருந்தி நிலைதளர்கின்ற பெரிய மலை நிலத்திற்குத் தலைவனே! பிறையைச் சடையில் அணிந்த சிவபெருமானின் புலியூர் போன்று, அழகும் சிறப்பும் உடைய இத்தலைவியானவள், தம் தலைவனைப் பிரிந்த துயரத்தினால், தன் மேனி முழுவதும் பசலை நோய் உற்றிருக்கின்றாள்: படுக்கையின்கண் அடிக்கடி மயங்கி விழுகின்றாள்; பின்னர் எழுந்து நிற்கின்றாள்; துயரம் மிகுந்து விம்மி அழுகின்றாள்; தலைவனையே நினைந்து ஏங்கி உடல் மெலிகின்றாள். இவளது சோகம் மிக்க துயர நிலைமைகளை அளவிட்டுச் சொல்லுதல், என்றால் இயலாது. தலைவனே! நீதான் இவளுடைய துயர நிலையை அறிந்து, அவற்றைத் தீர்த்தருளுதல் வேண்டும்.

["வளர்கின்ற மிளகுக்கொடி, பசுமைநிறம் பெற்றுக் கண்ணிற்கு இனிதாக இருப்பதால், இது நமக்கு உணவன்று என்று உணராத இளம் குரங்குகள், மிளகுக் கொடியைத் தின்று மயங்கி வருந்துகின்றன! அது போலக் கண்ணும் மனமும் கவரும் அழகிய உருவம் உடைய நின்னை, நின் இயல்பு இது என்று உணராது எதிர்ப்பட்டு, நின்பாற் காதலுற்று மயங்கி, இப்போது இத்தலைவி கலையுற்று வருந்துகின்றாள்" என்னும் குறிப்பமைந்த உள்ளுறை, "வளரும் கறி அறியா மந்தி தின்று, மம்மர்க்கு இடமாய்த் தளரும் தடவரைத் தண்சிலம்பா" என்னும் பகுதியில் அமைந்திருத்தல், அறிந்து இன்புறற்பாலது.] (193)

(16) உடன்போக்கு:

[தோழி, தலைவியையும் தலைவனையும் தனித் தனியே கண்டு பேசி உடன்படுமாறு செய்து, உறவினர் அறிவுறாதபடி தலைவியைத் தலைவனொடு உடன்போகச் செய்தல்.]

ஒரு திருமேனியே, ஆணும் பெண்ணுமாகிய இரண்டு எழிலும் உடையதாக விளங்குகின்ற சிவபெருமானின், தில்லைக்கண் உறைபவளாகிய தலைவியின் தனங்கள், சந்தனம் குங்குமம் கத்தூரி முதலிய நறுமணப் பொருள்கள் பூசப்பெற்று, அமிழ்தம் பொதிந்து, செம்பொன்னின் நிறமான சுணங்குகள் பரவி, பணைத்துப் பருத்து வளர்ந்து, ஒளி மிகுந்து திகழ்கின்றன. இத்தகைய இவளது நிலையைக் கண்டால், எம்மவர்கள் தம் மனத்தில் நினைத்து இருப்பன சில உள! இவளை மகட்பேசி எவரேனும் வருவார்களாயின், அவர்களுக்கு இவளை எம்மவர்கள் திருமணம் செய்து கொடுத்துவிட நினைத்துள்ளனர். ஆதலின் நீ இவளை மணந்து கொள்ளுதற்கு விரைந்து முந்துக. (194)

துறைவனே! ஆலாலம் என்னும் நஞ்சு தோன்றக் கண்டு அஞ்சிய தேவர்கள் சென்று பணிய, அந்த நஞ்சால் வரும் இடர்ப்பாட்டுக்கு மருந்தாகத் தேவர்களுக்குத் தம் கருணையை வழங்கும் சிவபெருமானின், தில்லையைப் போன்றவளாகிய எம் தலைவியைத் தத்தம் மக்களுக்கு மணமுடித்தற்பொருட்டு, அயலவர்கள் பலர் மேன்மேலும் வந்து, மகட்பேசி வருகின்றனர். ஆதலின் எம் தலைவியின் திறத்தில், நீ துணிந்து செய்யக் கருதுவதை இன்றே நீ துணிந்து செய்வாயாக (195)

பூக்கள் மணம் கமழ்கின்ற துறைவனே! பாம்புகளை அணிகலன்களாகக் கொண்ட சிவபெருமானின் தில்லைக்கண் உள்ளவரும், பல நறுமண மலர்களைச் சூடிய கூந்தலை உடையவளுமாகிய எம் தலைவிக்கு, எம் உறவினர்கள் நல்ல காவலைச் செய்வித்தார்கள். இப்பொழுது திருமணத்திற்குப் பொருந்திய பலவகை ஏற்பாடுகளையும் செய்யத் தொடங்கினர். வானளாவிய கொடிகளை உடைய முற்றத்தின்கண் இருந்து, பெரிய பணிலங்கள் (சங்குகள்) முழங்குகின்றன. மண முரசங்கள் தழங்குகின்றன (ஒலிக்கின்றன). இனியேனும் நினக்கு உரியதனை நீ விரைந்து செய்ய முற்படுக (196)

சிலம்பனே! திருமால் பிரமனின் எலும்புகளால் தன்னை அழகுசெய்து கொள்பவனும், அம்பலத்தில் நடனம் செய்பவனும் ஆகிய சிவபெருமானின், தில்லையின் எல்லை அல்லது உலகம் முழுவதையும் நீ கொடுப்பதாய் இருப்பினும், எங்கள் மலைநாட்டவர்கள், மாவடுவின் வகிர்போலும் கண்களை உடைய எமது தலைவியின் சிறிய நுண்ணிய இடைக்குங்கூட விலையாக அதனை இசைந்து ஏற்கமாட்டார்கள் என்றால், அவளது அணிகலங்கள் பரவிய அழகிய முலையின் விலையாகக் கொடுக்க நீ எதனைக் கருதியிருக்கின்றாய்? எம்மவர்கள் எதற்கும் இசையமாட்டார்கள். (197).

தலைவன்; எனது நல்ல நெஞ்சமே; சிவபிரானின் தில்லையைப்போன்ற தலைவியின் தனங்கள், புற்றின்கண் வாழும் பாம்புபோலும் இடை, கூரிய எயிற்றின்கண் ஊறிய நீர், குழல் ஓசையைப்போலும் இனிய சொற்கள் ஆகிய இவற்றின்கண் பெறும் இன்பத்தையே கருதி தலைவியின் அருமையைக் கருதாமல் நீ வருந்துகின்றாய். உன்னுடைய செயல் வானத்தின்கண் உள்ள சந்திரனைப் பிடித்துத் தருமாறு கேட்டு, அழுகின்ற குழந்தையின் செயலைப் போன்று உள்ளது. வானத்தில் உள்ள சந்திரனை, எவ்வளவுதான் முயன்றாலும், ஒரு குழந்தை பெறமுடியாது; அதுபோல நீ எவ்வளவுதான் விரும்பினாலும், தலைவியை அடைதல் இயலாது. பெறுவதற்கு அரிய நிலையிலுள்ள இத் தலைவியைப் பெறுவதற்கு விரும்பிய நீ, நீர் அறாத கண்களுடன், இனி என்றும் அழுது அழுது புலம்பிக்கிடந்து அலறுவாயாக. (198)

— ஆசிரியர்

(தொடரும்)

❋ ❋ ❋ ❋ ❋ ❋

சிவலிங்க வழிபாடு

ந. ரா. முருகவேள், M. A., M.O.L.

முன்னுரை :

நமது இந்திய நாட்டிலும், குறிப்பாக இந்து மதத்திலும் சிறப்பாகப் போற்றி வழிபடப்பெறும் தெய்வத் திருவுருவங்கள் அல்லது அடையாளங்களில், சிவலிங்கத்திருவுருவம் மிகவும் சிறப்புடையதொன்றாகும். இமயம் முதல் குமரி வரையிலுள்ள எண்ணிறந்த எத்தனையோ பல தலங்களிலும், கோயில்களிலும், சிவலிங்கத் திருவுருவங்கள் சிறப்புற நிறுவப்பட்டுத், தொன்னெடுங் காலம் முதல் இன்றளவும், இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலுமே, பல கோடிக்கணக்கான மக்களால் பரவிப் போற்றி வணங்கப்பட்டு வருகின்றன.

சிவலிங்கத் திருவுருவின் பழைமையும் பெருமையும் எல்லையற்றன. மொகஞ்சதாரோ, ஹாரப்பா முதலிய இடங்களில் நிகழ்ந்த அகழ்வு ஆராய்ச்சிகளில், மிகப் பல சிவலிங்கத் திருவுருவங்கள் கண்டெடுக்கப் பெற்றுள்ளன. அதனால் சற்றேறத்தாழப் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிக காலத்திற்கு முன்னரே, சிவலிங்க வழிபாடு இந்திய நாட்டில் நிலவி இருந்தமை புலனாகின்றது.

சிந்துவெளிப் பகுதியில் கிடைத்த சிவலிங்கத் திருவுருவங்கள் மிகப் பலவற்றைக் கண்ட மேலைநாட்டு ஆராய்ச்சியாளர்கள் வியப்படைந்து, உலகிலேயே மிகவும் தொன்மை வாய்ந்த சமயம், சைவ சமயமே ஆதல் வேண்டும் என்னும் உண்மையை உணர்ந்து குறிப்பிட்டுள்ளனர். (1)

உலகெங்கும் நிலவியமை :

சிவலிங்கத் திருவுருவங்களும், சிவலிங்க வழிபாடும் இந்திய நாட்டில் மட்டுமேயன்றி எகிப்து, சிரியா, பாரசீகம், சிறிய ஆசியா, கிரீசு, இத்தாலி, ஆஃபிரிக்கா, அமெரிக்கா, திபெத்து, சீனா, ஜப்பான் முதலிய உலகின் பல பகுதிகளிலும், ஒரு காலத்தில் பெரிதும் பரவியிருந்தது. இதனை வெஸ்ட்ராப், இ.பி. டெய்லர், ஆலன், கிராண்ட் முதலிய மேற்புல அறிஞர்கள் தத்தம் நூல்களில் ஆராய்ந்து குறிப்பிட்டுள்ளனர். (2)

அமெரிக்காவில் கொலரடோ என்னும் மலை நிலப் பகுதியில் மிகப் பெரிய சிவாலயம் ஒன்று, 1937—ஆம் ஆண்டில் ஆராய்ச்சியாளர்களாற் கண்டுபிடிக்கப் பெற்றது. அதன்காலம் 10,000 ஆண்டுகளுக்கும், அல்லது அதற்கும் முற்பட்ட பழமை வாய்ந்த காலம் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (3).

இங்கிலாந்தில், 'செயின்ட்பால் - கெத்தீட்ரல்' என்னும் கிறித்தவக் கோயிலிலும், ஓரிடத்தில் இன்றும் கூட, ஒரு சிவலிங்கம் இருந்து வருவதாக அறிஞர்கள் கூறுகின்றனர். இசுலாமிய சமயத்தின் மாபெரும் புனிதத் தலமான மெக்கா நகரிலும் 'காபா' என்னும் பெயரில் விளங்குவது சிவலிங்கமே என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். ஜப்பானில் பௌத்த மதத்தின் ஒரு பிரிவான 'ஷிண்டோயிசம்' என்பதில் சிவலிங்கத் திருவுருவத்திற்குப் பெருமதிப்புத் தரப்பெற்று வருகின்றது. மேடம் பிளவட்ஸ்கி அம்மையார் 'மறைவியற் கொள்கை' என்னும் நூலில் விளக்கியுள்ள 'லிபிகா' என்னும் அடையாளமும் சிவலிங்கமேயாகும். இத்தகைய பல செய்திகளை மிகவும் நுணுக்கமாக ஆராயத் தலைப்பட்டால், சிவலிங்கத் திருவுருவின் சிறப்பினை நாம் பெரிதும் அறிந்து மகிழ்தற்கு வாய்ப்புளது.

---

(1) "Among the many revelations that Mohanjo Daro and Harappa have had in store for us, none perhaps is more remarkable than this discovery that Saivism has a history going back to the Chalcolithic age or perhaps even further still and that it thus takes its place as the most ancient living faith in the world"

— Sir John Marshall.

(2) "The practice of Linga-worship was so general as to have spread itself over a large part of the habitable globe, for it flourished for many ages in Egypt, Syria, Persia, Asia Minor, Greece and Italy. It still is in vigour in India and many parts of Africa and was even found in America on its discovery by the Spaniards, being regarded as the most sacred object of worship and Consecrated by religion. The culture was associated with the very idea and sentiment which was regarded as ennobling to man"

— H. M. Westropp.

"Once this old Shiva, riding on his bull and taboring on his Damarug travelled from India, on the one side, to Sumatra, Borneo, Celebes, Australia, on the shores of America, and on the other side, this Old Shiva battened his bull in Tibet, China, Japan and as far up as Siberia, and is still doing the same"

— Swami Vivekananda.

(3) "In the wild mountainous state of Colorado, seventh largest in America, scientists of the U.S. Museum of Natural History, three months ago announced discovery of a 'Lost world'. The focal point was Siva's Grand Temple, a half square mile of solid rock plateau isolated from the main-land by 9000 feet. Canyons eroded by rivers some 2,00,000 years ago".

— News Review, London, 1937.

இயற்கைக்கு இயைந்தது :

இறைவனைக் குறிக்கும் திரு அடையாளங்கள், வெவ்வேறு சமயங்களிலும் பல்வேறு வகையில் விளங்கி வருதலை நாம் காண்கின்றோம். அத்தகைய அடையாளப் பொருள்களில், இயற்கைக்கு ஏற்ற நிலையில், சிவலிங்கத் திருவுருவம் மிக்க சிறப்பு வாய்ந்ததொன்றாகக் காணப்படுகின்றது. இயற்கையின் நுட்பத்தினை இனிது ஆராய்ந்துணர்ந்த அடிப்படையிலேயே, நம் முன்னோர்கள் இறைவனின் திருவடையாளங்களுள் ஒன்றாகச் சிவலிங்கத்தினைத் தேர்ந்தெடுத்து அமைத்துள்ளனர். நாகலிங்கப்பூ என்பதன் நல்லமைப்பை உற்றுநோக்கி உணரும்போது, இவ்வுண்மை செவ்விதிற் புலனாகின்றது. மேலும் வடக்கே இமய மலைக்கு அணித்தேயுள்ள அமரநாதம் என்னும் புனிதத் தலத்தில், இயற்கையாகவே பனிக்கட்டியினால் சிவலிங்கத் திருவுருவம் அமைந்து விளங்கும் திறனும், உன்னுந்தோறும் நமக்கு உள்ளத்தில் வியப்பும் விம்மிதமும் விளைவிக்கின்றது. இவ்வாற்றால் இறைவனின் இயற்கைத் திருவுருவம் சிவலிங்கமே ஆகும் என்பதனை நாம் தெள்ளிதின் அறிகின்றோம்.

சேக்கிழார் சுவாமிகள் :

கடவுளைச் சில மதங்கள் அருவம் என்று கூறுகின்றன. மற்றும் சில மதங்களோ உருவம் என்று கொள்கின்றன. இவ்விரு வேறு திறமான கொள்கையினருக்கும் ஏற்புடைய நிலையில், சிவலிங்கம் சிறப்புற்றுத் திகழ்கின்றது. முகம் கை கால் முதலிய உறுப்புக்கள் எதுவும் இல்லாமல் இருத்தலின் ஒருவகையில் அருவமாகவும், கண்ணுக்குப் புலனாகும் வகையில் ஒரு பிழம்பாகத் தோன்றித் திகழ்தலின் ஒரு வகையில் உருவமாகவும், இரண்டிற்கும் இடைப்பட்ட நிலையில் அருவுருவம் ஆகச் சிவலிங்கம் அமைந்து விளங்குகிறது. இச்சிறப்பினையே,

> "காணாத அருவினுக்கும்
> உருவினுக்கும் காரணமாய்
> நீள் நாகம் அணிந்தார்க்கு
> நிகழ்குறியாம் சிவலிங்கம்"

என்னும் வரிகளில் பெரியபுராணத்தில் சேக்கிழார் சுவாமிகள் அழகுற விளக்கியருளியுள்ளார். எனவே இறைவனின் அருவுருவத் திருமேனியே சிவலிங்கம் என்றும், இதிலிருந்தே இறைவனின் ஏனைப் பல திருவுருவங்கள் எல்லாம் தோன்றுகின்றன என்றும் நாம் அறிந்து கொள்ளலாம்.

பாம்பன் சுவாமிகள் :

அண்டம் எனப்படும் பரந்த இப்பெரிய உலகமே (Macrocosm), ஒருவகையில் சிவலிங்கம் எனும்படி திகழ்கின்றது. சிவலிங்கத்தின் அடிப்பகுதி பீடம் அல்லது ஆவுடை எனப்படும். அதன் நடுவில் நீண்டு விளங்கும் பிழம்பு லிங்கம் எனப்படும். இம்முறையில் இவ்வுலகின் வானப் பெருவடிவே லிங்கம் ஆகவும், பரந்து விரிந்த நிலப்பரப்பே ஆவுடை என்னும் பீடமாகவும் அமைந்துள்ளது. அதற்கு இயையப் பிண்டம் எனப்படும் நம் உடம்பின் அமைப்பும் (Micocosm), சிவலிங்கம் போலவே ஞானிகளின் காட்சிக்கு நலமுற அமைந்து தோன்றுகின்றது. "மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம்" என்பது திருமூலர் திருமந்திரம். நம் உடம்பில் தோலுக்கு மேலுள்ள பகுதியை இலிங்கமாகவும், மற்றைய கீழ்ப்பகுதியை ஆவுடை எனும் பீடமாகவும் கொள்ளுதல் வேண்டும். இது தூலவடிவம். சூக்கும நிலையில், நம்முடைய இதயகமலம் பீடம் எனவும், அங்கே நிலவும் சிதாகாசம் என்பது இலிங்கமாகவும் உள்ளன. இனி இதற்கு மேற்பட்ட அதிசூக்குமம் ஆன நிலையிலும், ஞானிகள் சிவலிங்கத் திருவுருவினைத் தமது ஞானக் கண்களால் காண்கின்றனர். சிதாகாசம் என்பது ஆன்மாவாக அமைய, அதனுடைய இதயமகலம் பீடமாக விளங்க, அங்கே உள்ள மகா சிதாகாசம் என்பதுதான், உயிருக்கு உயிராக உள்ள இறைவனின் வடிவமாகிய சிவலிங்கத் திருவுருவம் ஆகும். இத்தகைய நுட்பங்களைத் தவத்தாலும் ஞானத்தாலும் உணர்ந்து, திருவருட் பேற்றால் சிவலிங்க மயமாக விளங்கப்பெற்று இன்புறுதலை வீடுபேறு எனவும் ஞானிகள் கூறுவர், திருவெண்காடர் என்னும் பட்டினத்தடிகள், திருவொற்றியூரில் சிவலிங்க மயமாகும் இத்தகைய சிறந்த முத்தியினையே பெற்றார் என்றும் பெரியோர்கள் கூறுவர்.

தத்துவ நுட்பங்கள் :

திருமூலர் அருளிய திருமந்திரம் இலிங்கத்தின் சிறப்பினை, அண்டலிங்கம், பிண்டலிங்கம், சதாசிவலிங்கம், ஆத்மலிங்கம், ஞானலிங்கம், சிவலிங்கம் எனப் பல தலைப்புகளில் விளக்கியுள்ளது. இவ்வுலகை உள்நோக்கி ஆராயுங்கால், ஓங்கியுயர்ந்த வானமே இலிங்கம், சுற்றிச் சூழ்ந்து அகன்றுள்ள எண்டிசையின் விரிவே ஆவுடை, பரந்து விரிந்துள்ள நிலப்பரப்பே பீடம் எனலாம்படி அமைந்திருத்தலை ஆராய்ந்து சிந்தித்து உணரலாம்.

கோயில்களிற் கருவறையின் மேலுள்ள விமானம் தூலலிங்கம். கருவறையின் உள்ளே இருப்பது சூக்கும லிங்கம். விந்து நாதம் என்னும் கருத்துக்களை முறையே வட்ட வடிவமாயும், நீண்டகோடு வடிவமாகவும் பெரியோர்கள் குறிப்பர். விந்து நாதம் ஆகியவை இரண்டும் சேர்ந்து அமைந்த உருவமே சிவலிங்கம்.

> விந்துவும் நாதமும் மேவும் இலிங்கமாம்
> விந்து வதேபீடம் நாதம் இலிங்கமாம்
> அந்த இரண்டையும் ஆதார தெய்வமாய்
> வந்த கருஐந்தும் செய்யும்அவைஐந்தே

மேலும் சிவலிங்கமானது, பிரணவம் என்னும் பெருஞ் சிறப்புடைய மந்திரத்தின் அடையாளமாகவும் கொள்ளப்பெறும். இலிங்கத்தின், அடிப்பகுதியாகிய பீடம் ஓங்காரம், அதன் நடுப்பகுதியாகிய கண்டம் மகாரம், உள்வட்டம் உகாரம், மேற்பகுதி அகாரம்.

> இலிங்கநற் பீடம் இசையும்ஓங் காரம்
> இலிங்கநற் கண்டம் நிறையும் மகாரம்
> இலிங்கத்துள் வட்டம் நிறையும் உகாரம்
> இலிங்கம் அகாரம் நிறைவிந்து நாதமே.

என்றெல்லாம் சிவலிங்கத்தின் இயல்பினைத் திருமூலர் விளக்கியருள்கின்றார். உலகிற்குத் தாயும் தந்தையுமாக விளங்கும் சத்தி சிவத்தின் அடையாளமே சிவலிங்கம் என்பதனை,

" சத்தியும் சிவமும் ஆய
தன்மைஇவ் வுலகம் எல்லாம்
ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும்
உணர்குண குணியும் ஆக
வைத்தனன் ; அவளால் வந்த
ஆக்கம்இவ் வாழ்க்கை எல்லாம் ;
இத்தையும் அறியார், பீட
லிங்கத்தின் இயல்பும் ஓரார் "

என அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள், தமது சிவ ஞான சித்தியாரில் விளக்கியருளியிருத்தல் அறிந்தின் புறற் பாலது.

சுவாமி விவேகானந்தர் :

இன்னோரன்ன நுட்பங்களை உன்னி யுணரமாட்டாத புன்மக்கள் சிலர், சிவலிங்கத் திருவுருவினை வேறு ஏதோ ஒரு குறிப்புடையதாக இகழ்ந்து கூறுதலும் உண்டு. அவர்களின் கூற்றை மறுத்து, அதர்வண வேத சம்மிதையில் வரும் புகழ்மிக்க பாடல் ஒன்றினுல் போற்றப் பெற்ற, வேள்வித்தூண் ஆகிய யூபஸ்தம்பம் என்பதில் இருந்தே, சிவலிங்கம் பற்றிய கருத்துத் தோன்றியது என்று, சுவாமி விவேகானந்தர் அவர்கள் விளக்கியுள்ளார்கள். (4)

நெருப்பு வழிபாடு :

பண்டைக் காலத்தில் முதன் முதலாகத் தோன்றிய மக்கள் குறிஞ்சி நிலமாகிய மலைப்பகுதியில் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் பகலில் சூரியனையும், இரவில் சந்திரனையும், இவையிரண்டும் காணப்பெருத இருள் மிக்க காலங்களில் நெருப்பினையும் வணங்கி வந்தார்கள். நெருப்பினுல் பயன்மிகப் பெற்ற பண்டைக்கால மக்கள் நெருப்பினை இறைவனின் இயல்புடையதாகக் கருதினுர்கள். நெருப்பைக் குறிக்கும் தீ என்னும் சொல்லினின்றே தெய்வம், தேவர், தேவதை முதலிய சொற்கள் தோன்றியுள்ளமை காணலாம். நெருப்பு வழிபாடே இறைவழிபாடாக மக்கள் பலரும் கருதி வந்துள்ளனர். அதனுல் எரி ஓம்புதல், முத்தீ வேட்டல் முதலியன, சமயக் கடமைகளாகக் கொள்ளப் பெற்று வந்தன. அதன் பயனுகத் தீவளர்க்கும் குழிக்கு (யாக குண்டம்) அறிகுறியாக வட்ட வடிவமான பீடமும், அக்குழியில் வளர்க்கப்படும் தீயினுக்கு அறிகுறியாகக் குவிந்து நின்ற வடிவில் அமைந்த இலிங்கமும், நாளடைவில் ஏற்படலாயின (5).

(4) " The worship of the Siva-Lingam originates from the famous hymn in the Atharva Veda Samhita sung in praise of the Yupa-Stamba, the sacrificial post. The Yupa-Stamba gave place in due course of time to the Sivalingam, and was deified to the high Devahood of Sri Sankara".

" The explanation of the Siva-lingam as a phallic emblem was brought forward by the most thoughtless, and was forth coming in India in her most degraded times, those of the down fall of Buddhism"

—Swami Vivekananda.

(5) " In many ancient temples fire was kindled night and day and the light was never allowed to go out even for a second and this custom still prevails in all the celebrated Siva Temples as well as in the Parsi sanctuaries where this is observed with particular care. In this way, the worship of Siva-Lingam which is but the form of fire transferred to a cone-shaped stone or any other object like it"

—Swami Vedachalam.

சோதியாய்ச் சுடராய்ச் சூழொளி விளக்காய்த் திகழும் இறைவனின் திருவடையாளமே கோயில்களிலுள்ள சிவலிங்கம் ; இறைவனல்லாத ஏனைய உயிரினங்களைக் குறிக்கும் அடையாளமே நந்தி வடிவம், இறைவனை வழிபட்டு உயிர்கள் கழித்துக் கொள்ளும் அறியாமையாகிய மலமே பலிபீடம் ! இவ்வுண்மையினை,

" ஆய பதிதான் அருட்சிவ லிங்கம்ஆம்
ஆய பசுவும் அடலேறு என நிற்கும்
ஆய பலிபீடம் ஆகும்நற் பாசமாம்
ஆய அரன்நிலை ஆய்ந்து கொள்வார்க்கே "

திருக்களிற்றுப்படியார் :

இறைவனின் திருவுருவங்களில் சிறந்தது சிவலிங்கம் ஆவது போலவே, அவ்விறைவனை வழிபடும் நெறிகளில் சிறந்ததும் சிவலிங்க வழிபாட்டு நெறியாகும். தேவர்களும் முனிவர்களும் சிவலிங்கத் திருவுருவங்களை வழிபட்டு உய்ந்த வரலாறுகளை எண்ணிறந்த தல புராணங்கள் கொண்டு இனிதறியலாம். 'இலிங்கம்' என்னும் சொல்லுக்குப் பொருள் அடையாளம் என்பதாகும். சித்திரிப்பது, சித்திரிக்கப்பட்டது எனவும் இதற்குப் பொருள் கூறுவர். இலங்கு என்னும் தமிழ்ச் சொல்லின் அடிப்படையிலேயே, இலிங்கம் என்னும் சொல் தோன்றியது எனவும் கூறுவது உண்டு.

" கிரியையென மருவுமவை யாவும் ஞானம்
கிடைத்தற்கு நிமித்தமெனக் கிளக்கும் நூல்கள் "

என்றபடி, புறத்தே உள்ள கோயில்களுக்குச் சென்று சிவலிங்கத்தை வழிபடுவது சிறப்பேயாயினும், அதனினும் பெருஞ் சிறப்புடையது உள்ளமாகிய கோயிலிலே சிவலிங்கத் திருவுருவம் அமைத்து வழிபடும் செயலாகும். கோயில்களில் செய்வது புற வழிபாடு. உள்ளத்தே இயற்றுவது அக வழிபாடு. புறவழிபாடும் அகவழிபாட்டிற்கு ஓர் அடிப்படையான சாதனமாகும். நாம் நம்முடைய உடம்பின் உள்ளேயே சிவலிங்கம் அமைந்திருத்தலை உணரவும், வழிபடவும், வேண்டும். சிவலிங்கத்திற்குப் பூத்தூவுதல் போல, நாம் நம்முடைய ஆன்மாவையே ஒரு பூவாகச் சங்கற்பம் செய்து, நம் உள்ளத்தினுள்ளேயிருக்கும் சிவலிங்கத்திற்குத் தியானத்தினுல் அருச்சனை செய்வோமானுல், அது மிகச் சிறந்த தலையான சிவ பூசையாகும்,

" தம்மில் சிவலிங்கம் கண்டதனைத் தாம்வணங்கித்
தம்அன்பால் மஞ்சனநீர் தாம்ஆட்டித்—தம்மைஒரு
பூவாக்கிப் பூவழியா மற்கொடுத்துப் பூசித்தால்
ஓவாமை அன்றே உளன் "

எனவரும் திருக்களிற்றுப்படியார் செய்யுள், இச் சிறந்த உண்மையை உணர்த்துதல் காணலாம்.

முடிவுரை :

இத்தகைய சிறந்த சிவலிங்க வழிபாட்டினை, நாம் அனைவரும் குருவருளும் திருவருளும் பெற்று, இயன்ற வரை இடைவிடாமற் செய்ய நம் வாழ்நாளில் முயன்று உய்வோமாக.

சிவப்பிரகாசர் கவிச்சுவை

திரு. மு. முத்துக்கிருஷ்ணன், எம்.ஏ., பி.டி.,
திருவத்திபுரம்.

திருவெங்கை ஓர் அற்புதமான—இறையருள் ஒளி வீசும் சிவத்தலம். அதன் அண்மையிலே மணம் கமழும் மலர்ப்பூங்காக்கள் நிறைந்த பகுதியிலே, கவர்ச்சி மிக்க குடில்கள் பலவற்றை அமைத்து அவற்றிலே வேட்டுவக் குடும்பங்கள் பல, அமைதி தவழும் இன்ப வாழ்க்கை நடாத்துகின்றன. வருவிருந்தோம்பும் வண்மையாளர்கள் அந்த வேட்டுவர், நிறைவான இறையன்பு கொண்டவர். இல்லையென்று கூறித் தம் இல்லை நாடிவந்து இரப்போர்க்கு, இல்லையென்று சொல்லாத இனிய இதயத்தார்.

அன்றொருநாள் அந்த நாட்டை ஆளும் வேந்தரின் தூதுவன் ஒருவன், வேட்டுவர் தலைவனின் வீட்டிலே நுழைகிறான். அரசுத் தூதனை அவ்வேடர் அன்பாக வரவேற்கிறார்கள். சிறப்பான உபசரிப்பு செய்கிறார்கள். மட்டில்லா மகிழ்வுகொண்ட அந்தத் தூதுவன் கூறுகிறான் :

"வேட்டுவர் குலத் தலைவரே! நம் நாட்டு மன்னரை நீங்கள் நன்கு அறிவீர். உயர்குணங்களின் உறைவிடம் அவர். மன்னுயிரைத் தன்னுயிராய் மதித்துக் குடி தழீஇக் கோலோச்சும் குணாளர். கல்வி அறிவிலே, ஒழுக்கப் பண்பாடுகளிலே தன்னிகரற்று மிளிர்பவர். இன்னும் திருமணமாகாத இருபது வயது இளைஞர். அண்மை நாடுகளிலே ஆட்சிபுரியும் வேந்தர் பலர், அவருக்குத் தத்தம் புதல்வியரைக் கடிமணம் செய்து வைக்க ஆவலுடன் ஆர்வமுடன் காத்துக் கிடக்கின்றனர். ஆனால் ஆடம்பர வாழ்விலே, அரசபோகத்திலே திளைத்து விளையாடும் அந்தக் கன்னியரை மன்றல் கொள்ள அவர் விரும்பவில்லை. சாதி, குலம், பிறப்பு இவற்றின் ஏற்றத் தாழ்விலே அவருக்கு நம்பிக்கை இல்லை. ஆகவே அவர் தங்களின் குலக்கொழுந்தான அன்புச் செல்வியை, ஆம், மலர்க் கொடியைக் கரம்பிடித்து மணம்புரிந்து கொள்ளப் பெரிதும் விழைகின்றார். இதோ அவர் எழுதிக் கொடுத்த, மன்றல் தூது ஓலைதான் இது" என்று அந்த ஓலையை வேட்டுவர்கோனிடம் அளிக்கின்றான் தூதுவன்.

தூதுவன் மொழிகேட்டு வேடர் தலைவனும் அவன் உடனிருந்த உறவினரும், தோழரும் கொல்லென்று சிரிக்கின்றனர். அலட்சியப் புன்னகை ஒன்றை அவன் மீது வீசுகின்றனர். வேட்டுவர் தலைவன் பேசுகின்றான் :

"தூதுவனே! அரச குடும்பத்தினர் என்றால் மிக உயர்ந்த மாசுமறுவற்ற தங்கக் கம்பிகள் என்பது உங்கள் சித்தாந்தமா? வேட்டுவர்தானே, தாழ்ந்த குலத்தினர்தானே? வேந்தருக்கு மணம்கொள்ளத் தம் மகளைத் தரமறுப்பார்களா? அதிகாரம் நம்மிடம் இருக்கிறது, ஆட்சிபீடத்திலே ஆடம்பரமாக அமர்ந்திருக்கிறோம். நாம் என்ன செய்தாலும் நம்மை யார் அசைக்க முடியும்? என்னும் ஆணவத்திலே உங்கள் மன்னர் என் மகளை மணம்பேச உன்னை அனுப்பி விட்டார் போலும். எங்களை மிகவும் எளிதாக எண்ணி விட்டீர்களே, உங்கள் மரபிலே முன்பு வாழ்ந்த மன்னர் தம் பண்பாட்டை, யோக்யதையைக் கூறுகிறேன். கேளப்பா!

"தன் வாழ்க்கையின் ஆருயிர்த் துணைவியாய் அமைந்த அருமை மனைவியை, அவள் கணவன், மன்னர் மன்னனாக வாழ்ந்துவந்த ஒரு மகானுபாவன், தான்பட்ட கடனைத் தீர்ப்பான் வேண்டி அந்தணன் ஒருவனுக்கு அடிமையாக விற்றானே! அது சரியா? அவ்வாறு விற்றது யார் தெரியுமா?—அயோத்தி நாட்டு வேந்தன் அரிச்சந்திரனேயன்றோ! அதுதான் போகட்டும்! இன்னொரு பேர்வழி, நிடதநாட்டுக் கோமான் நளச்சக்கரவர்த்தியைத் தெரியுமல்லவா உனக்கு? அவன் செய்தது என்ன? விண்ணுலகத்துத் தேவர்கள் மணக்க விரும்பி ஓடிவந்த அத்துணை எழிலும் ஏற்றமும் படைத்த தமயந்தியைச் சுயம்வரத்திலே மன்றல் பூண்டு சின்னாள் வாழ்ந்து, பின்னர் ஒரு நாள் கானகத்திலே திடீரென நள்ளிரவிலே பாதி ஆடையோடு 'பரிதவிக்கட்டும் அவள்' என்று பாசமோ, பற்றோ சிறிதுமின்றிக் கொடிய விலங்குகள் நிறைந்த பயங்கரப் பாழ்மண்டபத்திலே தனிமையிலே அழுமாறு விட்டுவிட்டு ஓடிப் போனானே! இந்த இரக்கமற்ற செய்கை எங்கட்குத் தெரியாது என்பது உங்கள் எண்ணமா?

அதுகிடக்கட்டும், இன்னொரு நல்ல மன்னனின் நடத்தையை நவில்கின்றேன் பார்! அறத்தின் செல்வன்—ஏகபத்தினி விரதன் என்று அவனை இன்றும் அகில உலகமே புகழ்கின்றது, அயோத்தி நாட்டுத் தசரதச் சக்கரவர்த்தியின் ஆருயிர் மைந்தன், இராமபிரான். அவனுக்கு வாய்த்த தெய்வீக மனைவி சீதை அவனுக்கு ஆருயிராகத் திகழ்ந்தவள் : மிதிலை வேந்தன் ஜனகனின் மகள். அன்னப்பறவையொத்த அழகுநடை பயிலும் இன்ப நங்கை. பாற்கடலிலே தோன்றிய அமிழ்தத்தோடு உடன்பிறந்த திருமகள், அவளை என்ன செய்தான் இராகவன்? ஆழிசூழ் உலகமெல்லாம் பரதனே ஆளத் தான்போய்த் தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கரும் தவமேற்கொண்டு பூமிவெங் கானம் நண்ணிய அப்புனிதன், சிந்தித்துச் செயலாற்றும் ஆற்றலை இழந்ததினால் இலங்கை வேந்தன் சீதையை வஞ்சகமாக அபகரித்து எடுத்துக் கொண்டுபோக இடங்கொடுத்து, அசோக வனத்திலே சிறைவைக்குமாறு செய்துவிட்டானே—இது என்னப்பா

நியாயம்? மனைவிமீது தீவிர கவனமும் அக்கறையும் செலுத்தியிருந்தால் இந்தத் தீவினை நேர்ந்திருக்குமா ?

சரி! அதுதான் போகட்டும்; மகாபாரதம் உனக்கு நன்றாகத் தெரியுமே...அந்த வரலாற்றிலே வரும் ஒழுக்க சீலர்கள் பஞ்சபாண்டவரை அதாவது இந்திரப் பிரஸ்தத்தின் வேந்தர்களாயிருந்து பின்னர் அஸ்தினபுரியையே ஆண்ட பாண்டவர் செய்த வேலை என்ன ?

மாற்றான் ஒருவன், மன்னர் நிறைந்த பேரவையிலே தன் மனைவியின் மடிபிடித்துக் குழல்பிடித்துத் துகில் களைகின்றான் என்பதை நேரில் கண்டும் உணர்ச்சியோ தன்மானமோ சலனமோ ஆத்திரமோ சிறிதுமின்றித் துகிலுரிந்த பாவியைத் தட்டிக் கேட்காமல்-தண்டிக்காமல் ஆமைகளாய்-ஊமைகளாய் வறிதே அமர்ந்து கிடந்தார்களே! இந்தக் கூத்தை என்னவென்று சொல்வது? இப்படி மனைவியைப் பல்லோர் மத்தியிலே மானபங்கப்படுத்த விட்டுவிட்டு விழிக்கலாமோ ?

மன்னர்கள் தம் மனைவியரை எப்படி நடத்தினார்கள்–எவ்வளவு கொடுமைப்படுத்தினார்கள் ? இழிவுபடுத்தினார்கள் ? என்பதற்கு இந்த நான்கு சான்றுகள் போதுமே! இப்படிப்பட்ட நேர்மையற்ற–நியாயமற்ற–வாழ்க்கைத் துணைவியரிடம் அன்போ இரக்கமோ இணைப்போ பிணைப்போ பாசமோ பற்றோ அற்ற மன்னர்கள், உயர்ந்த, தமக்கு நிகரான வேந்தர் மரபிலேயே தோன்றிய மங்கையராம் மனைவியரை இப்படித் துன்புறுத்தினார்கள் என்றால், இழிந்த குலத்தவராகிய எங்கள் குலக்கொடியை எப்படி ஆட்டிப் படைப்பார்கள் ? கசக்கிப் பிழிவார்கள் ! என்பதை எண்ணிப்பார் ! தமக்கு மனைவி வேண்டும் என்று இனியேனும் மன்னர் வேற்றிடம் சென்று பெண்கொள்ள நியாயம் உள்ளதா ? உரிமை இருக்கிறதா ?

ஏ தூதுவனே! திருமணம் என்ற சொல்லை இனிப் பேசாதே. உன்வாயிலே உள்ள அந்தச் சொல்லை இங்கேயே உடனே உமிழ்ந்துவிடு. நீ கொண்டுவந்த திருமண ஓலையைக் கிழித்தெறிந்து காற்றிலே பறக்கவிடு. உடனே ஓடிப்போ! உங்கள் மன்னர்க்கு எம் மலர்க் கொடியைக் கொடுக்கமுடியாது" என்று சினத்துடன் சீறிப் பேசினான் வேட்டுவர் கோமான்.

திகைத்துப் போனான் அந்தத் தூதன்! எளிதிலே இந்தத் திருமணத்தை முடிக்கலாம் என்று எதிர் பார்த்து வந்த அவனுக்குத் தான் எத்தனை ஏமாற்றம்! தொடர்ந்து பேசினான் வேடர்வேந்தன்: நாங்கள் யார் தெரியுமா? வாழ்க்கையிலே எல்லோரும் பெறவேண்டிய இன்றியமையாத வெற்றியாகிய முத்திப்பேற்றை வேண்டும் அடியார்க்கெல்லாம் விருப்புடன் வழங்கும் திருவெங்கையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை வழிபடுகின்ற வேட்டுவர். இறைவன்மீது கொண்ட அழுத்தமான பற்றினால் எதற்கும் எவர்க்கும் அஞ்சமாட்டோம் நாங்கள், நீ போகலாம்.

தூதுவனுக்கு உடனே ஓர் ஐயப்பாடு தோன்றியது. அவன் கேட்டான்! அது சரி ஐயா! அரச பரம்பரையினர்க்கே மகளை மணம் கொடுக்க மறுக்கும் நீங்கள், முன்பு உங்கள் மரபிலே தோன்றிய மகளாம் வள்ளியை, அரசர்க்கெல்லாம் அரசனாக, அகில உலகையே ஆட்சி புரிந்து படைத்தும், காத்தும், கரந்தும் விளையாடும் சிவபெருமான் மைந்தன் முருகனுக்கு மணம்செய்து வைத்தீரே! அதுமட்டும் எத்தகைய நியாயம் ?என்றான்.

"ஓ! அதைச் சொல்கிறாயா ?" வேடர் தலைவன் விளம்புகின்றான். எங்கள் வேடர் குலத்தின் முன்னோர்களின் முதல்வர் கண்ணப்பர். காளத்திநாதன்பால் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி வழிபாடு செய்தவர். சிவனை அவர் அன்றாடம் கானகத்தில் ஓடிய பொன்முகலியாற்றின் நீரைத் தம் வாயினால் கொணர்ந்து அபிஷேகம் செய்தார். தம் வாயினால் அதுக்கிச் சுவை பார்த்துத் தேர்ந்தெடுத்த பன்றி இறைச்சியைப் படைத்தார். பரமனுக்குத் தம் தலையிலே சூடிக் கொணர்ந்து காட்டுப் பூக்களால் இறைவனை அர்ச்சித்தார். இவற்றை மகிழ்வுடன் ஏற்றான் பெருமான். கண்ணப்பரின் எச்சில், கற்கண்டாய் இனித்தது கண்ணுதலுக்கு! அவர்தம் பன்றி இறைச்சி அமுதினும் மேன்மை மிக்கதாய் மிளிர்ந்தது. இவ்வாறு எம் வேடர்குல முதல்வனின் எச்சில் பட்ட நீரையும், இறைச்சியையும் இன்பமுடன் சாப்பிட்டதால், சிவபெருமான் எங்கள் வேடர் குலத்தவராகி விட்டார். அதற்குப் பிறகு அவதாரம் செய்தவரே வேலவப் பெருமானார். ஆக அவரும் எம் குலச் செல்வராய் விட்டார்: அதனால்தான் வேட்டுவ வேடம் பூண்டு எம் குலக் கொடியைக் களவியலிலே அம்முருகன் மணக்க முயன்றார். இந்த உறவு இருந்த காரணத்தினால்தான் நாங்கள் எங்கள் குலமகளாகிய வள்ளியம்மையை அவருக்கு மணம் முடித்தோம். இப்படிச் சற்று வேறுபட்ட குலத்தவராக முருகன் இருந்ததால் தான், வளர்ப்புப் பெண்ணாகிய வள்ளிக்கிழங்குக் கொடியிலே கிடந்த வள்ளியை அவருக்கு மனைவியாக்கினோமே தவிர, அதுவே பெற்ற பெண்ணாக இருந்தால் அவருக்குக்கூடக் கொடுத்து இருக்கமாட்டோம். தெரிகிறதா? பேய்பிடித்துவிட்டதா என்ன உனக்கு? சிந்திக்காமல் பேசுகிறாயே! வந்த வழியே போ ?" என்று தூதுவனை அவன் அரசனிடமே சற்றும் அஞ்சுதலின்றித் திருப்பி அனுப்புகின்றான் வேடர்தலைவன்.

என்னே அவர்தம் தன்மானச் செருக்கு! அழுத்தமான இறையன்பு! கனிவு நிறைந்த வீரம்! இந்த நிகழ்ச்சிகளை எல்லாம் தொகுத்து ஓர் அழகிய பாடலாக்கித் தம் 'திருவெங்கைக்கலம்பகம்' என்னும் செந்தமிழ் நூலிலே 'தூது' எனுந் தலைப்பிலே நமக்கெல்லாம் படைக்கின்றார் சைவத் திருச்சீலராம் சிவப்பிரகாசப் பெருந்தகையார். அதில் செறிந்துள்ள இலக்கிய இன்பந்தான் என்னே! இதோ! பாடலை நாமும் சுவைப்போமே !

"விற்றதார் ? கலை பாதியோடு
வனத்திலே அழவிட்டதார் ?
வெஞ்சிறைப்புக விட்டதார் ? துகில்
உரியவிட்டு விழித்த தார் ?
உற்ற தாரமும் வேண்டும் என்றினி
மன்னர் பெண்கொள ஒண்ணுமோ ?
உமியடா ! மணம் என்ற வாய்கிழித்து
ஓலை காற்றில் உருட்டடா ;
வெற்றியாகிய முத்தி தந்தருள்
வெங்கை மாநகர் வேடர்யாம் ;
விமலரானவர் எமையடுத்து இனிது
எங்கள் மிச்சில் மிசைந்தபின்
பெற்ற வேலவர்தமக்கு யாமொரு
பெண் வளர்ப்பினில் ஈந்தனம் ;
பெற்ற பிள்ளை கொடுப்பமோ ? இதென்
பேய் பிடித்திடு தூதரே !

—சிவப்பிரகாச சுவாமிகள்
திருவெங்கைக் கலம்பகம்.

பழநிமலை வெண்பா

திரு. இளங்கம்பன்

(முற்றொடர்ச்சி)



கோடான கோடிமக்கள் கூடிக் களிக்குமலை
வாடாத வாழ்வை வழங்குமலை—வீடான
முக்தி அருளுமலை; முன்வந்து காக்குமலை
பக்திப் பழநி மலை.

மாணிக்கம் வைரம் மலைபோன்ற செல்வங்கள்
காணிக்கை ஏற்றே களிக்குமலை—பேணிடும்நல்
சித்தம் தவமே சிறந்தொளிர ஓங்கும்நாம்
நத்தும் பழநி மலை.

கந்தக் கடம்பமலை; கண்கண்ட தெய்வமலை
முந்துவினை தீர்க்கும் முதியமலை—அந்தமிகு
காந்தமலை; கற்பூரம் ஏந்துமலை; அன்பகத்தில்
நீந்தும் பழநி மலை.

நீறு மணக்குமலை; நெஞ்சுள் புகுந்தமலை
பேறுபல ஈயும் பெரியமலை—வேறுபடு
தீயவரை மாய்த்துத் திகழுமலை; ஆமந்தத்
தூய பழநி மலை.

துறவின் நலத்தைத் துலக்கித் தவத்தின்
உறவில் களிக்க உதவி—அறவோர்கள்
சந்ததமும் வந்திக்கச் சாந்தி வழங்குமன்றோ
விந்தைப் பழநி மலை.

வானுக் குயர்ந்தமலை; வாழ்வருள வல்லமலை
தேனும் கசக்கத் திகழுமலை—வானமுயர்
திங்கள் முடிசூடத் தேவர்களும் போற்றுமலை
எங்கள் பழநி மலை.

ஊழ்என்ற ஒன்றை உடன்வெல்லும் மாண்பருளி
வாழ்வளிக்கும் வள்ளலவன் வாழுமலை—ஏழிசையால்
கானம் பொழிந்தே கனிந்துருகக் காத்திடுமே
ஞானப் பழநி மலை.

நீறணிந்தோர்போற்றுமலை நிம்மதியை நல்குமலை
ஆறணிந்தோன் மைந்தன் அமர்ந்தமலை—பேறருள
வல்லமலை நல்லமலை வாழ்த்திடுவோர் நெஞ்சத்தில்
உள்ள பழநி மலை.

கண்ணுக் கினியமலை; கற்பனையைத் தூண்டுமலை
விண்ணுக் குயர்ந்தே விளங்குமலை—அண்ணல்நம்
காந்தி அடிகளவர் கைகூப்பி நின்றமலை
சாந்திப் பழநி மலை.

எண்ணங் கலந்தே இனிக்கின்ற தெய்வமலை
வண்ணச் சரபரவர் வாழ்த்துமலை—கண்ணில்
இருக்குமலை; காக்கின்ற இன்பமலை; நெஞ்சை
உருக்கும் பழநி மலை

அதிசயங்கள் உற்றமலை அன்பின் உருவாய்த்
துதிக்கத் துதிக்கத் துணையாய்—மதிநலத்தை
ஈயுமலை தூயமலை இன்னடியார் தோயுமலை
நேயப் பழநி மலை.

பாசம் களையுமலை பக்குவங்கள் நல்குமலை
நேசத் தவத்தோர் நிலையுமலை—காசினியில்
இன்பங்கள் கூட்டி இதயத்துள் ஓங்குமலை
அன்புப் பழநி மலை.

என்றும் விழாவில் எழில்கூட்டும் என் தலைவன்
என்றும் இளையான் இளமுருகன்—நின்றமலை
நீளும் வினையழித்தே நீதச் சுகமருளி
ஆளும் பழநி மலை.

அருணகிரி போற்றுமலை அன்பர்கள் நெஞ்சின்
மருளை அழிக்கும் மலையாம்—பெரும்புவியில்
விள்ளரிய தென்றுரைக்கும் விந்தை அழகதனை
அள்ளும் பழநி மலை.

கான மயிலாடக் கண்டோர் மனமாட
வான முகிலினங்கள் வந்தாட—ஆனமழை
ஆர்க்கும் அருவி அகத்தைக் கவர்ந்தீர்க்கப்
பார்க்கும் பழநி மலை.

குன்றாத பக்தியுடன் கும்பிட் டுவப்போர்க்கே
பொன்றாத தென்றே புகல்கீர்த்தி—வென்றே
தொடுக்கும் புதுவாழ்வு தூயமனம் யாவும்
கொடுக்கும் பழநி மலை.

நேசிக்கும் நேயமலை நெஞ்சின் நினைவுகளால்
பூசிக்கும் நல்ல புனிதமலை—பேசிப்
பழகும் தமிழ்மொழியின் பண்ணுருவாய் நிற்கும்
அழகுப் பழநி மலை.

போற்றும் புகழொடு பொய்யாத் தவவளமும்
கூற்றினை வெல்லுமுயர் ஆற்றலையும்—சேர்த்தருளி
ஆதிமுதல் அன்பர் அடிமனத்தில் உள்ளதுவாம்
கோதில் பழநி மலை.

சித்தியெலாம் சேர்த்தே செழுமை நலப்பேரும்
முத்திஎன மூளும் முழுமையாம்-சித்தத்தின்
தாகம் தணிப்பதுடன் தக்கார்க்கு மெய்த்துணையாய்
ஆகும் பழநிமலை.

தாயாய் அருளுமலை தண்ணருளைப் பெய்யுமலை
வாயாரப் போற்ற வளமருவித்-தேயாத
செல்வங்கள் நல்குமலை சிந்தை புகுந்தமலை
நல்ல பழநி மலை.

குறையாத நல்லிளமை கொண்டோனை ஏத்தக்
குறையா நலங்கள் அவற்றை-நிறைவாய்க்
கொடுக்கும் நலத்துடனே கூடும் பிறப்பைத்
கடுக்கும் பழநி மலை.

கவர்வேல னுக்கீயும் காட்சியதாய் எண்ணிப்
புவனமதில் வாடும் வறியோர்-அவர்க்கே
அளிக்கும் மனத்தார் அளியதனைக் கண்டே
களிக்கும் பழநி மலை.

தானே தனியாகித் தாரணியை ஈர்த்தாளும்
தேனே என நாளும் தேர்ந்திசைக்க-நானே
கனிஎன்று மக்கள் தம் கல்மனத்தை மாற்றும்
கனியாம் பழநி மலை.

உள்ளும் புறமும் ஒருமையுறக் காக்குமெழில்
வள்ளல் முருகன் வனப்பதனை-விள்ளும்
கணத்திலே மின்னெனவே தோன்றுமே நல்லார்
மனத்துள் பழநி மலை.

அஞ்சுதலை நீக்குமலை ஆறுதலை தேக்குமலை
விஞ்சுதவ மேன்மை வியனடியார்-நெஞ்சில்
பெருக்கும் ஒலியுடனே பேராமல் என்றும்
இருக்கும் பழநி மலை

நானிலத்து மக்களெலாம் நாடிவந்து போற்றுமலை
மேனியெழில் வாய்த்தொளிரும் மேலவனும்-ஞான
வாகான தோளா வடிவேலா என்பார்க்குப்
பாகாம் பழநி மலை.

ஆனகுற வள்ளியுடன் ஆடும் விருப்புடனே
கானகத்தைத் தேர்ந்தவனும் கந்தனவன்-தானக்
களைப்பால் இடுப்பில் கரம்வைத்த மாண்பை
விளக்கும் பழநி மலை.

மாம்பழத்தைப் போன்ற மணிக்கவிஞர் யாவர்க்கும்
தாம்பழமாய் நின்ற தனிமலையாம்-தேம்பித்
தளரும் அடியார்க்குத் தன்னை வழங்கி
வளரும் பழநி மலை.

பெருகும் மழைஎனவே பேரன்பால் பாடும்
கருணை நலத்துக் கவிஞன்-அருணகிரி
போற்றும் புனிதமலை பொய்யாத அன்புவிளக்(கு)
ஏற்றும் பழநி மலை.

தண்டேந்தி நிற்கின்ற தண்டமிழின் வல்லோனைக்
கண்டேங்கி நிற்கும் கனிவுடனே-மண்டும்
ஒழுக்கம் தவமுள்ள உத்தமரை எல்லாம்
இழுக்தும் பழநி மலை.

நெஞ்சிழுக்க வந்தவரை நேயமுடன் மின்சார
விஞ்சிழுக்கச் செய்யும் வியப்புடனே-செஞ்
சொல்லில்
காட்டா நலமெல்லாம் காட்டிக் கவர்ந்திடுமே
பாட்டால் பழநி மலை.

புலிப்பாணி போன்றவர்கள் போற்றுமலை இந்தக்
கலிப்பகையில் நம்மவரைக் காத்தே-பொலிவுடனே
மாசற்று நல்லறமும் மாண்பருளும் ஈன்றிங்கே
பேசும் பழநி மலை.

பற்றைத் துறந்தமலை பண்பில் சிறந்தமலை
கற்றைச் சடையான்கனிந்தழைக்கும்
-பெற்றியுடன்
செல்வக் குமரனவன் சேர்ந்தமலை முன்வினையை
வெல்லும் பழநி மலை.

தேவர் குறைதீர்த்த தேவனவன் வாழுமலை
ஆவல் தணிக்கின்ற அன்புமலை-மேவும்
தளையாம் பிறவி தனைநீக்கி இன்பை
விளைக்கும் பழநி மலை.

இன்பத்தை நல்குமலை ஈகைவளம் கொண்டமலை
துன்பத்தை நெஞ்சில் துரத்துமலை-அன்பமைதி
ஊட்டுமலை என்றென்றும் உள்ளத்தில்
பேரொளியைக்
கூட்டும் பழநி மலை.

கண்ணை மயக்கிக் கருத்தில் இடங்கொண்டே
எண்ணரிய விந்தை எழிலூட்டி-மண்ணில்
எவரும் தொழுதேத்தும் ஏற்றத்தால் நெஞ்சில்
தவழும் பழநி மலை.

வேண்டுவோர்க்கெல்லாமே வேண்டும் நலமருளித்
தூண்டும் தவமாண்பைத் தொடர்ந்தருளி-
ஈண்டெவர்க்கும்
வாட்டம் அழித்தேநல் வாழ்வுக்கு மெய்வழியைக்
காட்டும் பழநி மலை.

பாலைப் பழத்தைப் பரிவார்ந்தார் நல்லன்பைச்
சீலத்·தவத்தோர்கள் செய்யறத்தை-மேலன்பில்
ஆர்க்கும் அடியார் அளிக்கும் அனைத்தினையும்
ஏற்தும் பழநி மலை.

ஞானம் அறியேன் நலமறியேன் நூலறியேன்
மோனம் பயின்ற முழுமையிலேன்-ஆனதமிழ்
கல்லாத என்றனக்குக் காணுமிந்த வையகத்தில்
எல்லாம் பழநி மலை.

கானக் குறத்தி கரம்பிடித்த கந்தனவன்
ஆன திருவடியே ஆதுமெனும்-ஞானத்தை
ஈட்டியவர் மிக்குயர இன்பத்தை மேன்மேலும்
ஊட்டும் பழநி மலை.

உருகி உருகி உவந்தழைத்தே இன்பம்
தருவோன் முருகனின் தாளைக்-கருதித்
துதிக்கும் நலம்வாய்ந்த துய்யமனம் தன்னில்
உதிக்கும் பழநிமலை.

முப்போதும் போற்றும் முழுமை உடையோர்க்கே
எப்போதும் காப்பாய் இருந்தே-இப்பாரில்
தோயும் நவநிதியம் தூயபுகழ் அத்தனையும்
ஈயும் பழநி மலை.

வண்ண மயிலமர்ந்தே வாழ்வருளும் பேரழகன்
எண்ண இனிக்கும் எழிலரசன்-அண்ணலாம்
பன்னிருகை வேலனவன் பாங்குணர்த்தி
இவ்வுலகில்
மன்னும் பழநி மலை.

தீயவையே செய்து திசைமாறிப் போனவனும்
நேயமுடன் வந்தே நினைத்தக்கால்-நேயத்தால்
நீக்காமல் ஏற்பதுடன் நீதமிகு வாழ்வருளிக்
காக்கும் பழநி மலை.

நெஞ்சால் நினைந்து நிதமும் துதிக்கின்ற
வஞ்சமிலா ருக்குயர்ந்த வாழ்வருளி-நெஞ்சிலொளி
ஏற்றும் எழிலுடனே ஏதமுள்ள நெஞ்சத்தை
மாற்றும் பழநி மலை.

முத்தை நிகர்த்த முறுவல் அழகூட்டிப்
புத்தொளியை நல்கும் புதுமகவும்-தத்தித்
தவழும் படியின் தகவதனைக் காட்டிக்
கவரும் பழநி மலை.

ஒளிவடிவம் கொண்டமலை ஒப்பற்ற வண்ணம்
அளிவடிவம் ஆகி அணுகும்-எளியார்க்கும்
கூறவொணு வண்ணமவர் கூறும் துயர்தீர்க்கும்
மாறில் பழநி மலை.

கந்தா கடம்பா கதிர்வேலா என்றிறைஞ்ச
இந்தா என நலங்கள் ஈயுமலை-நைந்தாரைக்
காக்குமலை இன்பத்தைத் தேக்குமலை நாம்உயர
ஊக்கும் பழநி மலை.

கண்ணகத்தை விட்டகலாக் காட்சிகளைக் கொண்ட
மலை
மண்ணகத்தை ஆளும் மணம்வீசி-எண்ணும்
பரிமணப்பன் னிர்மணக்கப் பாவாணர் வாக்கில்
விரியும் பழநி மலை.

கும்பமுனி வேண்டக் குளிர்ந்தேதான் நின்றமலை
உம்பரெலாம் வந்தே உறையுமலை-செம்பொன்
நிதியில் குளிக்குமலை நீன்தவத்தோர் வாழும்
பதியே பழநி மலை.

தன்னந் தனித்தமலை தாயைச் சமைந்தமலை
பண்புடையார் நெஞ்சதனைப் பற்றுமலை-
கன்னலரய்த்
தித்திக்கும் வண்ணமலை தேனில் குலாவுமலை
முத்துப் பழநி மலை.

பேரருளால் ஆளுமலை பெற்றிகளில் நீருமலை
பாரடங்கப் போற்றும் பழையமலை-நேரில்
குருவாகி வந்தே குலவித் துணையாய்
வருமாம் பழநி மலை.

காசியிலும் மிக்குயர்ந்து காட்டும் அழகுமலை
நேசிக்க நின்ற நெடியமலை-யாசிக்க
மந்தியினம் குந்தி மகிழ்ந்தாட்டத் தேன்கனிகள்
சிந்தும் பழநி மலை.

தோகைமயில் ஆடுமலை தொண்டரெலாம்
தேடுமலை
வாகைபுனை வேலன் வதியுமலை-போகர்மலை
சோலைமலை சோதிமலை சோகத்தைப் போக்குமலை
சீலப் பழநி மலை.

மூன்றும் படைவீடாய் முன்னோர்கள் கண்டமலை
ஈன்றுளைப் போல இருக்குமலை-தோன்றுத்
துணையாகி மூளும் துயரமெனும் வெள்ளத்(து)
அணையாம் பழநி மலை.

ஞானியரும் மோனியரும் நாடும் மடங்கள்தாம்
வானினத்து மீன்போல் வரிசைகொள-ஆனின்
புதுமை நலத்தில் பொலியும் மலைஎதுவாம்
அதுவே பழநி மலை.

நாற்புறமும் சோலைகளும் நற்கழனி வேலிகளும்
ஏற்றமுடன் கொண்ட எழில்காட்டிப்-பார்ப்
போர்க்கே
பேரழகு மம்மர் பெருகுவணம் செய்திடுமே
சீர்சால் பழநி மலை.

அலங்காரம் மற்றும் அனுபூதி ஓத
நலஞ்சார் கிளியாம் உருவில்-புலவன்நம்
அத்தன் அருணகிரி ஆசையுடன் கொண்டதெனும்
சொத்தாம் பழநி மலை.

இம்மைக் குதவும் இனிய துணையாகி
வெம்மை அழிக்கும் விருப்புடனே-நம்மை
அணைக்கும் வகையில் அருகில் இருக்க
நினைக்கும் பழநி மலை.

சொர்க்க நலங்கூட்டும் சோதிமலை செல்வத்தின்
வர்க்கம் அனைத்தும் வழங்குமலை-முக்கண்ணன்
ஈசன் உவந்தழைக்க எம்முருகன் வந்தமலை
ஆசைப் பழநி மலை.

பழகும் தமிழ்ப்பண்கள் பாய்ச்சும் சுவையே!
தழற்சுடரே ! தாதாநீ என்றே-அழகார்
புயத்தோன் அவனைப் புகழ்வோரை எல்லாம்
உயர்த்தும் பழநி மலை.

வேலைக்கோர் தோற்ற விளையாட்டைக்
கொண்டவனும்
காலைக் குமரேசன் கந்தனவன்-தாளைத்
துதிக்கின்றூர் நெஞ்சுள்ளே தூய எழிலைப்
பதிக்கும் பழநி மலை.

சாதிமதம் இன்றிச் சமரசத்தைக் காட்டுமலை
ஆதிமுதல் காக்கின்ற ஆன்றமலை-மேதினியில்
கண்பார்த் துதவிக் களிப்பூட்ட வல்லதன்றே?
பண்பார் பழனி மலை.

தங்கத் திருத்தேர் தவழ்ந்தோடும் மாண்பேந்தித்
தங்கத் தனிமகுடம் தாங்கியே-இங்கிக்
கலியுகத்தில் வந்தே கணக்கற்றூர் வாழ்த்தப்
பொலியும் பழநி மலை.

(தொடரும்)

இளங்கோ அடிகளும், சிலப்பதிகாரமும் *

திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ. ஏ. எஸ்.,
ஆணையர், அறநிலையத்துறை, சென்னை—34.

முன்னுரை :

இளங்கோவடிகள், உலகப் பெருங் கவிஞர்களுள் ஒருவராக மதிக்கத் தக்கவர், "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை ; உண்மை ; வெறும் புகழ்ச்சியில்லை" என்னும் பாடலால், தேசீய கவிஞர் பாரதியார், இளங்கோவடிகளைச் சிறந்தெடுத்துப் புகழ்ந்து பாராட்டியுள்ளார். நாடகக் காப்பியம் இயற்றும் துறையில் ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியரும், வடமொழியில் காளிதாசரும்போல, அருந் தமிழில் ஒப்பாரும் மிக்காரும் இன்றிச் சிறந்து விளங்குபவர், இளங்கோவடிகள் என்பது, பேரறிஞர்களின் சீரிய துணிபு.

தவவொழுக்கம் :

இளங்கோவடிகள் வெறும் கவியரசர் மட்டுமல்லர் ; சிறந்த புவியரசராகவும் திகழ்ந்தவர் ; அதுமட்டுமேயன்றிக் குணவாயிற் கோட்டம் என்னும் கோயிலில், அரசு துறந்திருந்து, தவ ஒழுக்கம் தாங்கி 'அந்தமில் இன்பத்து அரசாள் வேந்து' என்னும்படியும் மேம்பாடுற்று விளங்கியவர். அழியாப் புகழ்பெற்ற புனித இலக்கியங்களை, அரிய தவ ஒழுக்கம் சான்ற அருளாளர்கள் மட்டுமே இயற்ற முடியும். அத்தகையர் அல்லாமல், பொறிபுலன்களின் வயப்பட்டு ஒழுகி யுழலும் புல்லறிவினர்களாகிய நம் போலிய எளிய மக்கள், இயற்றும் நூல்கள் ஒரு சில கால அளவில் அழிந்தொழிந்துபோம்.

காலவெள்ளத்தைக் கடந்து நிலைபெற்று, என்றும் புத்தொளி வீசிப் பிறங்கும் இலக்கியங்களை இயற்றும் திறன், 'தவத்தால் மனம் தூயராய்', 'மெய்யுணர்வில் மிக்கோங்கி, இறையருள் பெற்றொளிரும் 'நிறைமொழி மாந்தர்கட்கே' இயலுவதாகும்.

இளங்கோவடிகள் :

இம்முறையில் ஆராய்ந்தால்; இளங்கோவடிகளின் தவவொழுக்கம் மிக்க சான்றாண்மைப் பெரும் புலமைத் திறனை, நாம் இனிது உணர்தல் கூடும். புலவர்களிற் பலர் பொருளையும், புகழையும் விரும்பியோ, அல்லது பிறர் வேண்டுகோட்கு இசைந்தோ, நூல்கள் இயற்றியிருத்தலைக் காண்கின்றோம். உலக மக்களின் நலம் ஒன்றையே கருதிப் பரிவிரக்கம் கொண்டு, அதன் பயனாக அழியாப் புகழ் இலக்கியங்களை ஆக்கியளித்துச் சென்ற பெருமக்கள் ஒருசிலரேயாவர். அவ்வொரு சிலருள் தலையாய ஒருவர், இளங்கோவடிகள் எனத் துணிந்து கூறலாம்.

நூல்நுதல் பொருள் :

நூல் இயற்றும் புலவர்கள், அங்ஙனம் தாம் நூல் இயற்ற முற்பட்டதற்குரிய காரணங்களையோ அல்லது குறிக்கோள்களையோ, இன்னவை என்று வரையறுத்துத் தெளிவுறப் பெரும்பாலும் சொல்லுவதில்லை-ஆனால் இளங்கோவடிகளோ, தாம் நூலியற்றக் கருதி முற்பட நேர்ந்த சூழ்நிலை குறித்தும், அதற்குரிய காரணம் பற்றியும், தெளிவுறக் கிளந்து கூறியருள்கின்றார். மேலும், தம் நூலால் தாம் விளக்கக் கருதும் உயரிய உண்மைப் பொருள்கள் இவை என்றும், வரையறை செய்து புலப்படுத்துகின்றார்.

"அரைசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை யுருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதிகாரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாம்ஓர் பாட்டுடைச் செய்யுள்...."

என்னும் சிலப்பதிகார வரிகளில், இளங்கோவடிகள் தாம் இயற்றத் தொடங்கும் நூலின்கண் தம்மால் விளக்கி வற்புறுத்தப்பெறும் உயரிய உண்மைகள் இவை எனக் கிளந்தெடுத்து, நூலின் தொடக்கத்திலேயே நுவன்றிருத்தல் காணலாம்.

இத் தனிப்பெருஞ் சிறப்பு, வேறுபிற எந்நூலிலும் இத்துணைத் தெளிவாகக் காணப்படவில்லை. ஆங்கிலத்தில் 'துறக்கநீக்கம்' (Paradise Lost) என்னும் காப்பியம் இயற்றிய ஜான் மில்ட்டன் என்னும் கவிஞர் தமது நூலின் தொடக்கத்தில், தாம் இயற்றத் தலைப்படும் நூலின் குறிக்கோள் இதுவென்று முதற்கண் குறிப்பிட்டு மொழிந்து

* திருச்செங்கோட்டில், வைகாசி விசாகப் பெருவிழாவினை ஒட்டி நிகழ்ந்த கண்ணகி விழாவில், நமது ஆணையர் பெருந்தகை அவர்கள் நிகழ்த்திய சிறப்புரை, இங்கு வெளியிடப் பெறுகின்றது (31-5-77).
—ஆசிரியர்.

மேற்செல்லுகின்ருர் * அவர்தம் செயலோடு நம் இளங்கோவடிகளின் செயலும் பெரிதொத்துத் திகழ்ந்து, பாராட்டி மகிழ்தற்குரியதாக விளங்கு கின்றது.

சிலப்பதிகாரம் :

சிலப்பதிகாரம் என்னும் பெருங் காப்பியத்தினை, "முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது" ஆகலின் புகார் மதுரை வஞ்சி என்னும் மூன்று காண்டங் களாகவும், முப்பது காதைகளாகவும் வகுத்து, ஓர் அழகிய சிறந்த கலைக் கோயிலாக, அமைத்தருளிய இளங்கோவடிகள், அந் நூலின் தொடக்கத்திற் போலவே, அதன் முடிவிலும்கூட, உலக மக்களுக்கு நலம் விளைவிக்கும் உயரிய சிறந்த உபதேசங்கள் பலவற்றைச் செய்த பின்னரே, நூலினை நிறைவு உறுத்துகின்ருர். அவ்வுபதேசங்கள், தமது காட்பியத் தின் பயனுகிய கருப்பொருளாக விளங்கும் வகை யிலும், உலகத்திற்குத் தாம் அளிக்கும் இனிய ஞானச் செய்தியாக அமையுமாறும், அவரால் அருளிச் செய்யப்பட்டுள்ளன.

சிலப்பதிகாரச் செய்தி :

"இதுவரையில் யாம் கூறிவந்த செய்திகளையெல் லாம் தெளிவுறக் கேட்ட திருத்தகவுடைய நல்லோர் களே! இதுகாறும எம்முடைய இந்நூற் பொருளைக் கேட்டதன் பயனுக, நீவிர் இனிமேல் பிறர்க்குக் கவலை யும் துன்பமும் விளைத்தலை விட்டொழியுங்கள்.

கடவுள் உண்டு என்று நம்புங்கள், கடவுளை உணர்ந்த பெரியோர்களை விரும்புங்கள். பொய் கூறுதற்கு அஞ்சுங்கள், பிறர்மேல் புறங்கூறுதலைக் கைவிடுங்கள். தவவொழுக்கங்கள் பலவும் மேற் கொள்ளுங்கள், பிறர் செய்த உதவியை மறவா திருங்கள்.

தீயவர்களின் தொடர்பினை இகழ்ந்து ஒதுக்குங் கள். பொருள் நிறைந்த அறிவுரைகளை இகழாதீர் கள், அறநெறிச் செல்லும் சான்ருேர்களின் திருக் கூட்டத்திற்கு இடைவிடாமற் சென்று பழகுங்கள். மறநெறிச் செல்லும் தீயவர்களின் தொடர்பினின்று விடுபட்டுத் தப்பி ஓடி உய்ய முயலுங்கள். பிறர் மனைவியை நெருப்பென நினைத்து அஞ்சுங்கள். துன் புற்று வருந்தும் உயிர்களைக் காப்பாற்றுங்கள்.

இல்லறக் கடமைகளைத் தவருது போற்றுங்கள். பாவச் செயல்களைக் கடிந்து முயன்று நீக்கிவிடுங்கள். கள்ளும் களவும் காமமும் பொய்யும் ஆகிய குற்றங் களையும், அறிவிலிகளாகிய வீணர்களின் தொடர்பை யும், தந்திரமாக ஒழித்து விடுங்கள்.

இவ்வுலகத்தில் நம்முடைய இளமையும் செல்வ மும் யாக்கையும், ஒருசிறிதும் நிலையுடையன அல்ல. நமக்கென்று அளவிடப்பெற்றுள்ள வாழ்நாள், கழி யாமல், ஒருகணமும் நில்லாது, நமக்கு நேரவேண்டிய துன்பம் நேராமல், என்றென்றும் நீங்காது.

ஆதலால், காலம் உள்ளபோதே, இவ்வுலகத்தி னின்று இறந்த பின்னர் நாம் செல்வதற்குரிய மறுமை உலகத்திற்கு, உற்ற துணையாகிய அறங்களைச் செய்து தேடிக் கொள்ளுங்கள். வளம்மிக்க இப் பெரிய உலகத்தில் வாழும் மக்காள்! நுமக்கு யாம் கூறும் செய்தி இதுவே!"

"தெளிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்!
பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்!
தெய்வந் தெளிமின்! தெளிந்தோர்ப்
-பேணுமின்!
பொய்யுரை அஞ்சுமின்! புறஞ்சொற்
போற்றுமின்!
ஊனூண் துறமின்! உயிர்க்கொலை நீங்குமின்!
தானஞ் செய்மின்! தவம்பல தாங்குமின்!
செய்ந்நன்றி கொல்லன்மின்!
தீநட்பு இகழ்மின்!
பொய்க்கரி போகன்மின்; பொருள்மொழி
நீங்கன்மின்!
அறவோ ரவைக்களம் அகலா தணுகுமின்!
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின்!
பிறர்மனை அஞ்சுமின்! பிழையுயிர் ஓம்புமின்!
அறமனை காமின்! அல்லவை கடிமின்!
கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்!
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா!
உளநாள் வரையாது! ஒல்லுவ தொழியாது!
செல்லும் தேஎத்துக் குறுதுணை தேடுமின்!
மல்லன்மா ஞாலத்து வாழ்வீ ரீங்கென்"

எனக் கூறி, இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரத் தினை முடித்தருள்கின்ருர்.

உயரிய உபதேசங்கள் :

சிலப்பதிகாரம் என்னும் செஞ்சொற் காப்பியத்தின் இறுதிப் பகுதியாக வரும் இம்மணிமொழிகள், எத் துணைச் சிறப்பும் விழுப்பமும் உடையனவாக மிளிர் கின்றன? எத்துணை உயர்ந்த சிறந்த நீதிகளை, எவ் வளவு இனிய எளிய முறையில், மிகவும் சுருக்கித் தொகுத்து ஒருங்கே தந்துள்ளார் நம் இளங்கோவடி கள்! விவிலிய நூல் கூறும் 'பத்துக் கட்டளைகள்' போல அன்ருே, இச் சிறந்த இனிய பொருள்மொழி கள் மிகச் சிறந்து பொலிந்து விளங்குகின்றன? உலகிலுள்ள சமயங்கள் பலவும் கூறும் உயர்ந்த உபதேசங்கள் அனைத்தையும், ஒருங்கே பிழிந்து

---

* Of man's first disobedience, and the fruit
Of that for bidden tree whose mortal taste
Brought death into the world, and all our woe
With loss of Eden, till one greater Man
Restore us, and regain the blissful seat,
Sing, Heavenly Muse,............,.................
.... What in me is dark,
Illumine, what is low raise and support;
That to the height of this great argument
I may assert Eternal Providence ,,
And justify the ways of God to men"

—John Milton.

வடித்து எடுத்த நற்சாரமாக அன்றோ, இவ்வற வுரைகள் இளங்கோவடிகளால் செவ்விதின் இயம்பப் பட்டுள்ளன ! இவ்வரிகளின் அருமையையும் இனிமை யையும் இணைத்தென்று அளவிட்டுக் கூறுதல் ஒல்லு மோ? எல்லா நாட்டிலும், எல்லாச் சமயத்தாலும் ஒருங்கியைந்து உடன்பட்டு, எக்காலத்தும் போற்றி உய்தற்குரிய உயரிய நல் உபதேசங்கள் அன்றோ, இவ் வினிய சிறந்த வரிகள்!

சிலப்பதிகாரம் என்னும் தீம்பாலின் சுவைநிறைந்த பாலேடு (Cream of the Classic) எனலாம்படி' மேம்பட்டு விளங்குவன இவ்வரிகள் ! இனிய ஞானச் செய்தியாக மிளிரும் ஒப்பற்ற இவ்வருளுரைகள், நாம் அனைவரும் நம் வாழ்க்கையிற் கடைப்பிடித்து ஒழுகி, நலம்பெறத் தக்கனவாகும்.

சிலப்பதிகாரம் :

அமிழ்தினும் இனிய நமது தமிழ் மொழியின்கண் உள்ள சிறந்த பல காப்பியங்களுள், சிலப்பதிகாரம் என்பது ஒப்புயர்வற்றதொன்று. சிலப்பதிகாரத்தின் இலக்கியச் சிறப்பும், கலைநலமும், பழமையும், பெருமையும் அறிஞர்களால் பெரிதும் பாராட்டப் படுவனவாகும்.

சிலப்பதிகாரம் என்பது ஒரு பெரும் தமிழ்க் கோயில், கலைக்கோயில்! வெறும் கோவலன் கண்ணகி கதையை மட்டுமே பொருளாகக் கொண்ட தன்று அந்நூல். கோவலன் கண்ணகி என்ற இரு வரின் கதையை அடிப்படையாகவும், தலைக்கீடு ஆகவும் கொண்டு, பல அரிய கலைச் செய்திகளையும், வாழ்வியல் உண்மைக் கருத்துக்களையும், உலகுக்கு அறிவுறுத்துகின்றார் இளங்கோவடிகள்.

இளங்கோவடிகளின் கவித்திறனும் தவநலமும் ஒருங்கே சேர்ந்து இயைந்து, சிலப்பதிகாரத்தினைத் தெய்வநலம் சான்ற, ஒரு செந்தமிழ்க் காப்பியமாக விளங்கச் செய்துள்ளன. தொடக்கம் முதல் முடிவு வரை, சிலப்பதிகாரத்தில் தெய்வமணமும், செந்தமிழ் மணமும் சிறந்து இனிது செறிந்து விளங்குகின்றன.

இயற்கை வழிபாடு :

சிலப்பதிகாரத் தொடக்கமே, தெய்வமணம் கமழ அமைந்துள்ளது. அதன் முதற்காண்டத்தின் முதற் பகுதியாகிய மங்கல வாழ்த்துப் பாடல் என்பதே, மங்கல முறையில் நன்கினிது தொடங்குகின்றது. தெய்வ நம்பிக்கை இல்லாதவரும், இயற்கையைத் தெய்வம் என்று குறிப்பிடுவர். அம்முறையில்,

> "ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்"
> "திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்"
> "மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்"

என்று ஞாயிறு திங்கள் மழை என்னும் இயற்கைப் பொருள்களைப் போற்றி, இளங்கோவடிகள் சிலப்பதி காரத்திற்குத் தோற்றுவாய் செய்தருள்கின்றார். புகார் நகரத்தின் சிறப்பை, அகத்தியர் வாழும் பொதிய மலை யோடும், சிவபிரான் உறையும் இமயமலையோடும் குறிப்பிடுகின்றார்.

திருமகள், கண்ணகியைப்போன்ற அழகிய வடிவுடையவள் என்றும்; அருந்ததி, கண்ணகியின் கற்புத்திறன் பெற்றவள் என்றும் மாற்றிக் கூறு கின்றார். கோவலனை, அழகும் இளமையும் ஆற்றலும் அமைந்து "கண்டு ஏத்தும் செவ்வேள்" (கண்களாற் கண்டு புகழத்தக்க முருகன்) என்று குறிப்பிடுகின்றார். இவற்றினலும் இளங்கோவடிகளின் தெய்வநலஞ் சான்ற திருவுள்ளம் புலனாதல் காணலாம்.

அருகதேவன் :

சிலப்பதிகாரத்தில், சைவம்—வைணவம்-சாக்தம்— கௌமாரம் முதலிய, எல்லாச் சமயத் தெய்வங்களும், கொள்கைகளும் பற்றிய குறிப்புக்கள் விரவி வருகின் றன. கோவலனும் கண்ணகியும் புகார் நகரை நீங்கி, மதுரைக்குச் செல்லும் வழியில் கவுந்தியடிகள் என்னும் தவமூதாட்டியைக் காண்கின்றனர். மூவரு மாகச் சேர்ந்து செல்லுகையில், வழியில் ஒரு சோலை யில், சமணசமயத்தைச் சார்ந்த சாரணர் ஒருவரைக் காண்கின்றனர். அவர் பல அருளுரைகள் கூறுகின் றார். அது கேட்டுக் கவுந்தியடிகள் அருகதேவனை வாழ்த்துகின்றார்.

> "அறிவன் அறவோன் அறிவுவரம்பு இகந்தோன்
> செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்
> தரும முதல்வன் தலைவன் தருமன்
> பொருளன் புனிதன் புராணன் புலவன்
> சினவரன் தேவன் சிவகதி நாயகன்..."

எனவரும் பல வரிகளால், சமண சமயக் கடவுளின் பெயர்களும். இயல்புகளும், வழிபடுமுறைகளும், சிலப்பதிகாரத்தில் அழகுற விளக்கப்பெற்றிருத்தல் காணலாம்.

திருமால் :

காடுகாண் காதை என்னும் பகுதியில், திருமால் திருவேங்கடத்திலும், திருவரங்கத்திலும் எழுந்தருளி விளங்கும் சிறப்பு விவரிக்கப்படுகின்றது. திருமால் பாம்பணைப் பள்ளியில், கிடந்த நிலையில், அரங்கநாத ராகத் திருவரங்கத்தில் விளங்குகின்றார். திருவேங் கடத்தில் சீநிவாசப் பெருமாளாக, சங்கும் சக்கரமும் ஏந்திக் கொண்டு, நின்ற நிலையில் திகழ்கின்றார். திருமாலின் இவ்விருவகைக் காட்சிகளையும்,

> "திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்...
> செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்"

என்று சிலப்பதிகாரம் சிறப்புற எடுத்துப் புகழ்ந்து போற்றுகின்றது. இவ்வாறே ஆய்ச்சியர் குரவை என்னும் பகுதியில், ஆயர்பாடியில் கண்ணனும் பலராமனும் நப்பின்னையுடன் கூடி ஆடிய குரவைக் கூத்தினைச் சிலப்பதிகாரம் வியந்து கூறுகின்றது,

திருமால் சீர்கேளாத
செவி என்ன செவியே?"

"நாராயணா என்னாத
நா என்ன நாவே!"

என்று திருமாலின் சிறப்பினை, சிலப்பதிகாரம் மிகச் சிறப்பாகத் துதிக்கின்றது.

சாக்தம் :

கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளுடன், மதுரையை நோக்கிச் செல்லும் வழியில், ஒரு காட்டில் ஐயை என்னும் காளிகோவில் ஒன்றில் தங்குகின்றனர். அக்காட்டில் வாழுகின்ற வேடுவர்கள், தங்கள் குல வழக்கப்படி, கொற்றவை என்னும் துர்க்கையை இரவில் வழிபடும் நிகழ்ச்சியைக், கோவலன் கண்ணகி கவுந்தியடிகள் ஆகிய மூவரும் காண்கின்றனர். அப் பகுதியில் சக்தி எனப்படும் அம்பிகையின் இயல்புகளும் செயல்களும், விரிவாக அழகுற எடுத்து விளக்கப் பெற்றுள்ளன.

முருகன் :

சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டத்தில், குன்றக் குரவை என்னும் பகுதியில், குறிஞ்சிநிலக் கடவுளாகிய முருகனின் பெருமை விளக்கப்படுகின்றது.

"சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்கை வேல் அன்றே
பாரிரும் பௌவத்தின் உள்புக்குப்
பண்டொருநாள்
சூர்மா தடிந்த சுடரிலையே வெள்வேலே"

என்பன போன்றுவரும் பாடல்களால், சிலப்பதிகாரம் முருகனைப் பெரிதும் பரவித் துதித்தல் காணலாம். இவ்வாறே,

"பிறவா யாக்கைப் பெரியோன்"
'தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்"

என்பனபோன்ற பலதொடர்களால், சிவபெருமானின் புகழும், சிலப்பதிகாரத்தில் போற்றப்பட்டிருக்கக் காண்கின்றோம்.

முடிவுரை :

இவ்வாற்றால், இளங்கோவடிகள் இயற்றியருளிய சிலப்பதிகாரம், நாம் இந்நாளில் கடைப்பிடித்து ஒழுகுதற்குரிய சமய சமரச ஞானத்தையும், தெய்விகச் செந்நெறியையும், தெளிவுற விளக்குகின்றது என்று சுருக்கமாகக் கூறலாம். சிலப்பதிகாரம் காட்டும் தெய்விகச் செந்நெறியினையும், இளங்கோவடிகள் அறிவுறுத்தும் அரிய இனிய சமய சமரச ஞான நோக்கினையும், நாம் அனைவரும் பின்பற்றி, ஒழுகி நலம்பெற முயலுவோமாக!

நூல்கள் அறிமுகம்

(1) விநாயகர் பெருமை: நமது அறநிலையத்துறையின் சார்பில் வெளிவரும் "திருக்கோயில்" இதழில், ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள். அவர்கள் எழுதிய, விநாயகர் பெருமை, வெவ்வேறு தலங்களில் விநாயகர், வேற்று நாடுகளில் விநாயகப்பெருமான் முதலிய கட்டுரைகளும், வெவ்வேறு பல நூல்களினின்று தொகுக்கப்பட்ட விநாயகர் துதிப்பாடல்களும் அவற்றிற்குரிய சிறந்த உரைவிளக்கமும், இந் நூலின்கண் ஒருங்கு தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. அழகிய படங்கள் சேர்க்கப்பெற்றுள்ளன. இந் நூல், திருச்சிராப்பள்ளி அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயிலைச் சேர்ந்த உச்சிப்பிள்ளையார் கோயிலின் சார்பில் பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ளது. விலை ரூ. 2/—கிடைக்குமிடம்: உயர்திரு நிர்வாக அதிகாரி, அருள்மிகு தாயுமானசுவாமி கோயில், மலைக்கோட்டை, திருச்சி—620002.

(2) சிவஞானபோதச் செந்நெறி: திருப்பாதிரிப்புலியூர்ச் சிவத்திரு ஞானியாரடிகள் நினைவாக, மதுராந்தகம்—மாம்பாக்கம் குருகுலச் சார்பில், காஞ்சிபுரம் "சித்தாந்த சிகாமணி" திரு. க. வச்சிரவேல் முதலியார், அவர்களால் நிகழ்த்தப்பெற்ற சொற்பொழிவுகள், திருக்கழுக்குன்றம் என்னும் தேவாரப் பாடல்பெற்ற சிவத்தலத்தில், சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் ஆண்டுதோறும் நடத்திவரும் மாணிக்கவாசகர் ஆனிமகப் பெருவிழாவில் இந்நூலாக வெளியிடப்பெற்றுள்ளது. சிவஞானபோத நூலைப் பயில விரும்பும் அன்பர்களுக்கு இந்நூல் ஒரு தொடக்க நூலாகப் பயன்படும். விலை ரூ. 1/—கிடைக்குமிடம்; "செயலர், மாம்பாக்கம் குருகுலம், மதுராந்தகம். செங்கற்பட்டு மாவட்டம்."

(3) எழுத்து வேந்தருக்கு எழுபது: இந்நூல், இலக்கியச் செல்வர்—கலைமாமணி—திரு. நாரண துரைக்கண்ணன் அவர்களின் எழுபதாம் ஆண்டு நிறைவு விழா மலராக வெளிவந்துள்ளது. திரு. நாரண துரைக்கண்ணன் அவர்கள், புகழ்பெற்ற, இந்தியா, பிரசண்டவிகடன், ஆனந்தபோதினி முதலிய பத்திரிகைகளில் ஆசிரியராக இருந்து பெருந் தொண்டாற்றியவர். சிறந்த தேசபக்தர், புதினம், நாடகம், சிறுகதை முதலிய பலதுறைகளில் அரிய பல நூல்கள் எழுதியிருப்பவர். எழுத்தாளர் சங்கத்தின் தலைவராக பல ஆண்டுகள் இருந்து பணிபுரிந்த பெருந்தகை. இவர்தம் வாழ்க்கை வரலாறும் சிறப்பும் குறித்து பாரதியச் செல்வர்—பாரதி அடிப்பொடி—திரு. வி. எஸ். மணி அவர்கள், இந்நூலில் விவரித்துள்ளார். நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை எழுதியுள்ளார், விலை ரூ. 3-25. கிடைக்குமிடம்: "வானதி பதிப்பகம், தியாகராயநகர், சென்னை-600 017".

திருவள்ளுவரும் அருணகிரிநாதரும்

'அருள்மொழியரசு'
திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

மிகுந்த வெய்யில்—புழுக்கம் ஏற்படும்போது, இன்று மழைவரும் என்று நாம் கருதுகின்றோம். அவ்வண்ணமே மழை பொழியவும் காண்கின்றோம். அதுபோல அநீதியாகிய வெப்பம் மிகுந்த காலத்து ஞானமாகிய வானத்தில் அருளாகிய கொண்டல் தோன்றி நீதி மழை பொழியும்.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னே நீதி எது? அநீதி எது? என்ற விளக்கமின்றி, உயிர்களாகிய பயிர்கள் அருங்கோடையால் வாடியபோது, மெய்ஞ் ஞானமாகிய வானத்தில் திருவள்ளுவராகிய அருள் மேகம் தோன்றி அறம், பொருள், இன்பம் என்ற மூன்றும் உலகத்தில் தழைக்க ஆயிரத்து முந்நூற்று முப்பது முறை நீதி மழைகளைப் பொழிந்தது. அந்த நன்னீர் இன்றும் வற்றாமல் பள்ளத்தில் மட்டுமின்றி மேட்டிலேயும்கூடத் தங்கி நிற்கின்றது.

உள்ளுந்தொறும், உள்ளுந்தொறும் — தெள்ளமுதத்தை—தெவிட்டாத இன்பத்தை அள்ளித் தரும் வாக்கு; தக்கார் அனைவரும் எக்காலத்தும் போற்ற, என்றும் நின்று இளமையுடன் விளங்கும் வன்மையுடையது அது.

"அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"

என்பது பொதுமறையின் புனித வாக்கு.

"அறிவும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அறிவே சிவமாவது ஆரும் அறிகிலார்
அறிவே சிவமாவ தாரும் அறிந்தபின்
அறிவே சிவமா யமர்ந்திருப் பாரே"

—திருமந்திரம்.

சிவம் வேறு, அறிவு வேறு அன்று. அறிவே மெய்ப் பொருள். ஏனையவெல்லாம் பொய்ப் பொருள்களாம். பொய் என்பதற்கு நிலையில்லாதது என்பது பொருள், நிலைபேறானது கடவுள் ஒன்றே. மற்றவையெல்லாம் தோன்றி நின்று ஒருங்கு மாய்வனவாம்.

எனவே, சிவம் என்றும், எப்பொருள்களிலும் ஊடுருவி நிற்கின்றது. அதனை அறிவதுவே அறிவெனத் தெளிக.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்கின்றார் தெய்வப் புலவராகிய திருவள்ளுவர்.

"அறிவு திருமேனி யென் றுணர்ந்துன்
அருண சரணார விந்தமென்று பெறுவேனோ?"

"அறிவை யறிபவர் அறியும் இன்பந்தனை"

என்று அருணகிரிநாதர், பலபடக் கூறுகின்றார்.

திருவள்ளுவரை நன்றாக உணர்ந்தவர் அருணகிரிநாதர். "பாம்பறியும் பாம்பின்கால்" என்பதுபோல, ஞானிகளை ஞானிகளே அறிவர்.

மக்களிலே மூன்று பிரிவுண்டு. மனித உடம்பெடுத்த விலங்குகள், மனித உடம்பெடுத்த மனிதர்கள், மனித உடம்பெடுத்த தேவர்கள்.

(1) மனிதருள் விலங்கு: செய்வன, தவிர்வன அறியாது, உண்டு உடுத்து உலாவி உவகையுறுவார்கள்.

(2) மனிதருள் மனிதன்; நன்மை, தீமை தெரிந்து, மனதைச் சென்றவிடத்துச் செலவிடாமல் தடுத்து, தீதுஒரீஇ, நன்றின்பாலுய்த்து நலமுற வாழ்பவர்.

(3) மனிதருள் தேவர்: மெய்யுணர்வு பெற்று நான், எனது என்னும் இருவகைப் பற்றுக்களும் அற்று, பற்றற்றானைப் பற்றி, திருவருள் நெறி நின்று கருணை வடிவினராய்த் திகழ்பவர்.

திருவள்ளுவர் மனிதருள் தேவர். அவரை மனிதருள் மனிதராக எண்ணக் கூடாது. அவரைத் தேவர் என்று ஆன்றோர்கள் கூறி மகிழ்ந்தார்கள்.

"தேவர் குறளும்"

என்ற வெண்பாவினால் அறிக.

அருணகிரிநாதர், திருவள்ளுவரைத் தேவர் என்கின்றார். அன்றியும் திருக்குறளைப் படிக்கக் கூடாது. படிப்பது சாமானியம், ஓதுதல் உயர்வுடையது. ஓதுவதற்கு மூன்று இலக்கணங்கள் உண்டு. ஒன்று ஓதுகின்ற நூலின்மீது காதல்; ஓதும்போது உள்ளம் கசிதல்; அதற்கு அடையாளமாகக் கண்ணீர் மல்குதல்

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்"

என்றார் திருஞான சம்பந்தர்.

திருவள்ளுவர். திருக்குறளை ஓதுதல் வேண்டும், உணர்தல் வேண்டும் என்கின்றார். 'ஓதியுணர்ந்தும், என்கின்ற குறளின் அருமையை யுணர்க. அருணகிரி நாதர்,

"திருவ(ள்)ளுவ தேவர் வாய்மை என்கிற
பழமொழியை ஓதியே யுணர்ந்து"

—(படர்புவியின், திருப்புகழ்).

என்று திருப்புகழில் மிக அழகாகக் கூறியருளினர்.

இனி வள்ளுவர் அறம் பொருள் இன்பம் என முப்பாலாகச் செப்பினர். இதனை அருணகிரிநாதர்,

"இடரற முப்பால் செப்பிய"

—(அகல்வினை திருப்புகழ்)

என்று கூறுகின்றார்.

இதனால் அநீதியாகிய அருங் கோடையை மாற்ற, ஞானவானத்தில் எழுந்த அருள்மேகம் திருவள்ளுவர் என்பதும், அவர் மொழிந்த பொதுமறையாகிய நீதி மழை மேடு பள்ளங்களிலும் இன்றும் தங்கியுதவுகின்றது என்பதும், அறிவுமயமாகிய மெய்ப்பொருளை யறிவதுவே அறிவின் பயன் என்பதும், திருவள்ளுவர் மனிதருள் தேவர் என்பதும், அவர் அருளிய குறளை ஓதியுணர்தல் வேண்டுமென்பதும், அது எப்பாலாரும் ஒப்ப முடிந்த முப்பால் என்பதும் விளங்குகின்றன.

ஆதலின் உலகப் பொதுமறையாகிய உயர்ந்த திருக்குறளை, எம்மதத்தினரும், ஏனோரும் ஓதியுணர்ந்து உயர்வு பெறுவார்களாக.

சைவ சித்தாந்த சாத்திரங்கள்

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு எனப்படும். அவற்றின் பெயரும், அவற்றை இயற்றிய ஆசிரியர்களின் பெயரும், முறையே பின்வருவன ஆகும்.

1.	திருவுந்தியார்—	திருவியலூர் உய்ய வந்த தேவர்
2.	திருக்களிற்றுப்படியார்—	திருக்கடவூர் உய்ய வந்த தேவர்
3.	சிவஞானபோதம்—	மெய்கண்டார்
4.	சிவஞானசித்தியார்—	அருள்நந்தி சிவாசாரியார்
5.	இருபா இருபது—	,, ,,
6.	உண்மை விளக்கம்—	திருவதிகை மனவாசகங்கடந்தார்
7.	சிவப்பிரகாசம்—	உமாபதி சிவாசாரியார்
8.	திருவருட்பயன்—	,, ,,
9.	வினாவெண்பா—	,, ,,
10.	போற்றிப் பஃறொடை—	,, ,,
11.	கொடிக்கவி—	,, ,,
12.	நெஞ்சு விடுதூது—	,, ,,
13.	உண்மை நெறி விளக்கம்—	
14.	சங்கற்ப நிராகரணம்—	,, ,,

சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கின் பெயர்களையும் ஒருங்கே சேர்த்துத் தொகுத்துப் பின்வரும் வெண்பா ஒன்று இனிது உணர்த்துகின்றது.

"உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம்-வந்தஅருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்பம் உற்று"

'சிவப்பிரகாசம்' முதல் 'சங்கற்பநிராகரணம்' ஈறாக உள்ள எட்டு நூல்களையும் சித்தாந்த அஷ்டகம் என வழங்குதல் உண்டு. இவற்றுள் 'உண்மை நெறி விளக்கம்' என்பதனை இயற்றியவர் உமாபதி சிவம் அல்லர்; சீர்காழித் தத்துவநாதர் எனவும் அறிஞர்கள் கூறுவர்.

தலைமலை நாதன்

'பெரும்புலவர்'
தேவானூர் திரு. பெ. இராமாநுஜன்

ஆழ்வார், நாயன்மார்களால் பாடல் பெற்றவை என்றும், பக்தி நிறைந்த மேன்மக்களால் போற்றித் துதிக்கப்பட்டவை என்றும், திருக்கோயில்கள் நம் நாட்டிலே விளங்கிவருகின்றன. பாடல்பெற்ற தலங்களைப் பலர் அறிந்திருக்கக் கூடும். மற்றைய திருக்கோயில்களிலே ஒன்று இரண்டுபோக, ஏனையவற்றை அறிந்திருக்க வழியில்லை. எனினும் அத்தகைய கோயில்களுள் "சக்தி" உடையவை என்று, சில அவ்வவ்விடங்களில் உள்ள மக்களால் பூசித்துக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

திருச்சிமாவட்டம் முசிரிவட்டத்தில் உள்ள தலைமலை நாதன் கோயில், இப்பக்கங்களில் பிரசித்தமானது. ஈங்கோய் மலைக்கு வடக்கும் கொல்லிமலைக்குத் தெற்கும் நடுப்பகுதியில் இருப்பது தலைமலை. பெரிய மலைத்தொடர் அல்லவாயினும், சுமார்1500 அடி உயரம் உடைய பசுமை நிறைந்த மலையாகும். அதன் சிகரங்களிலே 1800 அடி உயரத்தில் பெரிய தூணைப்போல உருண்டு திரண்டு உள்ள உச்சியின் முனையில் காண்போர் மயிர்க்கூச்செறியும் வண்ணம் ஒரு திருக்கோயில் அமைந்து இருக்கிறது. அக்கோயிலில் எழுந்தருளியுள்ள ஸ்ரீநிவாச மூர்த்திதான் மூலவர். அவருக்குப் பின்புறம் நின்ற வண்ணம் சேவைதரும் பெருமானைச் சுயம்பு என்றும், திருநாமம் சஞ்சீவிராயன் என்றும் வழங்குகின்றனர். தலைமலையை முன்பு சஞ்சீவிகிரி என்று வழங்கி வந்திருக்கின்றனர். சஞ்சீவிகிரி தலைமலையான விவரம் பின்பு வரையப்படும்.

மூலவருக்கு முன்புறம் உற்சவர், ஸ்ரீ தேவி பூதேவியோடு எழுந்தருளியுள்ளர். தாயார் அலர்மேல் மங்கை, சுவாமி விலக்ஷணனந்தர். "தலைமலை வேங்கடேசுவர பகவான் தோத்திர விலாசம்" என்ற பெயரிலும், வைணவப் பெரியார் வேங்கடராமநுஜதாசர் "தலைமலை நாதர் சதகம்" என்றபெயரிலும் பாடி இருக்கிறார்கள். கல்விக் கடலும் கம்பராமனும் ஆன திரு. எஸ். கே. இராமராசன் "சிரகிரிப் புராணம்" என்ற பெயரில் அரிய காவியம் ஒன்றைச் சுவைமலிந்த 1500 பாடல்களில் இயற்றி இருக்கிறார். இது கையெழுத்துப் பிரதியாக இருக்கிறது. முன்னவை அச்சில் வந்துள்ளன.

ஒவ்வொரு சனிக்கிழமையும் ஒரு சிலர் சென்று சுவாமியைக் கும்பிட்டுத்திரும்புவர். புரட்டாசி மாதத்துச் சனிக் கிழமைகளில், நான்கு பக்கமும் இருந்து மக்கள் வெள்ளம் நிரம்பிவழியும். அவர்கள் தம்மை மறந்து எழுப்பும் "கோவிந்தா கோவிந்தா" என்றபேரொலி, கடவுள் நம்பிக்கை கை கூப்பச்செய்யும். எனது சிற்றூருக்கு அருகில் உள்ள அந்த மலையையும், அதன் உச்சியில் கோயில் கொண்டுள்ள பெருமானையும், இளமையில் பலமுறை சென்று சேவித்து இருக்கிறேன். பிறகு செல்லவில்லை. ஊரில் இருந்த வண்ணமே கண்ணால் கண்டும் மனதால் நினைத்தும் நாள்தோறும் வழிபடுவது என் இயல்பு. இந்நிலையில் மலையேறிச் சென்று சுவாமியை நேருக்கு நேரே தரிசிக்க வேண்டும் என்ற ஆவல் மிகுந்தவனாய் அன்பர்கள் சிலரோடு புறப்பட்டேன். மலையின் அடிப்பகுதியை அடைந்தவுடனே சிகரத்தில் அமைந்துள்ள கோயில் மிக அருகில் இருப்பது போல் தோன்றுகிறது. ஆனால் வளைந்து வளைந்து செல்லும் மலைப் பாதையின் மூலம் மூன்றரைமைல் மேலே ஏறித்தான் கோயிலை அடைய வேண்டும். வழியும் பல இடங்களிலே சிதைந்து கிடக்கிறது. உடல் தளர்ந்து வலிகுன்றியவர்களுக்கு மலை யேறுவது சிறிது கடினமாகவே இருக்கும். பொழுது புலர்வதன் முன்னம் பாதிமலையை அடைந்து விட்டோம். அங்கேசிறிது தங்கிச் சோர்வுதீர்த்துக் கொள்ளும் வகையில் ஒரு புளிய மரத்தின் அடியில் மேடை அமைத்து இருக்கிறார்கள். அதன் அருகே ஒரு பெரிய உருட்டுப் பாறை, குகைபோல் இருபிரிவாக அமைந்துள்ளது தொட்டி போன்ற அதன் அடிப்பகுதியில், மழைநீர் வற்ருது இருக்கிறது. அதை "இராமர்சுனை" "இலட்சுமணர்சுனை" என வழங்குகின்றனர். அந்த நீரால் முகம் முதலியவற்றைச் சுத்தம் செய்து கொண்டு மேலே ஏறத் தொடங்கினோம். உடல் வியர்த்தது. கால்கள் துவண்டன. "ஏன் வந்தோம்" என்று அலுத்துக் கொண்டேன்.

திருக்குளத்தின் அருகே வந்துவிட்டோம். சேவார்த்திகளுக்கு என்று அமைந்துள்ள பெரிய கருங்கல் மாளிகையைக் கண்டோம். குளிர்ந்த மெல்லிய பூங்காற்று "ஜிலுஜிலு", என்று வீசு

கிறது. அங்கே தங்கி அயர்வு போக்கி, குளத்து நீரைச் சிலர் முகந்து கொடுக்கக் குடித்தோம். பிறகு சிகரத்தின் முனையில் அமைந்துள்ள திருக்கோயிலுக்குப் புறப்பட்டோம். சிறிது தூரம் சமதரையில் சென்று படியேறினோம். படிகள் நன்கு அமைந்துள்ளன. நடுவில் ஆஞ்சநேயர் கோவில் இருக்கிறது. அதை வலம்வந்து மேலே சென்றோம். அங்கே கோயில் கொண்டுள்ள கண்ணபிரானை விழுந்து வணங்கிச் செல்கையில் சுவாமியின் நித்திய பூஜைக்கு என்று தளிகை செய்யும் மடைப்பள்ளியைக் கடந்து புளியமரத்தைச் சார்ந்துள்ள திருக்கோயிலை அடைந்தோம்.

சிகரத்தின் மேல் பரப்பு வடக்கும் கிழக்கும் 40 அடி. தெற்கும் மேற்கும் 35 அடி. இச்சிறிய பரப்பில் சுவாமிக்கும் தாயாருக்கும் தனித்தனி கோயில், மகாமண்டபம், அர்த்தமண்டபம், கர்ப்பக்கிருகம் என்ற அமைப்பு வேறே. மூலவர் சீநிவாச மூர்த்தி, கருணை பொழியும் திருக்கண்கள், புன்னகை தவழும் திருமுகத்தோடு சங்குசக்கரதாரியாய்க் காட்சிதருகிறார். உற்சவர் சீதேவி பூதேவியோடு மனத்தைப் பிணிக்கும் வகையில் விளங்குகிறார். மூலவருக்குப் பின்புறம் சஞ்சீவிராயன் என்ற திருநாமத்தில் நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ளார். இவ்வகையில் இத்திருக்கோயிலில் மூலவர் இருவர். தலைமலை நாதனை நேரே சென்று தரிசிக்க வேண்டும் என்று பல வருடங்களாக இருந்த மனக்குறை தீர்ந்தது. தலைமலை சீநிவாச மூர்த்தியை நேருக்கு நேரே கண்டு வணங்கித் தாயார் சந்நிதிக்குச் சென்றோம். சௌந்தர்ய வடிவான உலக அன்னை, அலர்மேல் மங்கைத் தாயாரின் அமைப்பு அற்புதமானது. தாளும் தடக்கையும் கூப்பி வணங்கி, மீண்டும் சுவாமி சந்நிதிக்கு வந்தோம். பெருமானைப் பிரிந்து செல்ல வேண்டிய நிலை, மனம் தடுமாறுகிறது

"திருவளரும் தண்மார்ப! தேவாதி தேவ!
திரள்அரைய பைந்தளிரின் புளியமர்ந்த செல்வா!
மருவாரும் தலைமலையில் வைகிஉல கெல்லாம்
வாழ்த்த அருள்செய்பரமா! பார்த்தனுக்கோர் வலவா
தெருளாமை யால்வினவற் பாலதொன்(று) உண்டு
தீந்தமிழின் சுவையே! எம் சிந்தைகவர் செல்வா!
வருவாரும் வையகமும் நீயும்வே ருகி
மணிமேனி மாலே! மயக்குவதிங் கென்னே? (1)

வலிமிக்க வாலியை நீ வான்ஏற வைத்தாய்!
வலியற்ற பரிதிமகன் தோழமையாக் கொண்டாய்!
பொலிவுற்ற மாவலிபால் மூவடிமண் ஏற்றாய்
புவனம்எலாம் நின்உடைமைஎன்னும் உரை பொய்யோ?
மெலிவுற்ற பஞ்சவரின் நெஞ்சையறி வான்போல்
மெல்லியல் பாஞ்சாலி சொல்லால் நிலைகுலையச் செய்தாய்
நலிவுற்ற அடியவரைக் காக்கும் வகை ஈதோ?
நாயடியேன் தலைமலையின் நாதஅறி யேனே. (2)

என்று கண்ணீர் வார மெய்ம்மயிர் பொடிப்பப் போற்றி வணங்கி மீண்டேன்.

(நூல் அறிமுகம்)

—:o:—

திருத்தணிகைப் பிள்ளைத்தமிழ்: திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த பெருங்கவிஞர் ஆகிய கவிராட்சச கச்சியப்ப முனிவரின் மாணவர்களில் ஒருவராகிய, கந்தப்ப முனிவர் பாடிய இவ் அரும்பெறல் நூலை, மிகவும் செவ்விதின் ஆராய்ந்து, சைவப் பெரியார் இராவ்சாகிப் நல். முருகேச முதலியார், B.A. அவர்கள், ஆராய்ச்சி முன்னுரையுடனும், குறிப்புகளுடனும் வெளியிட்டுள்ளார். விருத்தாசலம் ஸ்ரீ குமாரதேவர் திருமடத்தின் தலைவர், ஸ்ரீ கல்யாணசுந்தர சிவப்பிரகாச பண்டார சந்நிதிகள் அவர்களின் ஆசியுரையுடன், இந்நூல் மிகச் சிறந்த முறையில் வெளிவந்துள்ளது. திரு. நல். முருகேச முதலியார் அவர்கள், மிகவும் சிறந்த முறையில் இந்நூலுக்குக் குறிப்புரை வரைந்துள்ளார்கள். திருத்தணிகை முருகன் அடியார்கட்கு, இந்நூல் ஒரு சிறந்த பாராயண நூலாகப் பெரிதும் பயன்படும், சிறந்த நல்ல திருத்தமான பதிப்பு. பெருமக்கள் பலர் சிறப்புரை வழங்கியுள்ளார். விலை ரூ. 2.50. கிடைக்குமிடம்: "ஸ்ரீ குமாரதேவர் மடம், தெற்குத் தெரு, விருத்தாசலம்—606001, தெ. ஆ. மாவட்டம்."

—ஆசிரியர்

தமிழ் எழுத்துக்கள்

திரு. இரா. நாகசாமி, எம்.ஏ.,
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை.

எழுத்துக்கள் ஆண்டவனின் தோற்றமே :

எல்லாம் வல்ல பெருமானை "எண்ணுமெழுத் தானாய்" என்றும், "சொல்லாகிச் சொல்லுக்கோர் பொருளுமாகி" என்றும், அப்பர் பெருமான் போற்று கின்றார். இதையே நான்மறைகளும் கூறும். உலகில் உள்ள எல்லா மொழிகளும், அவற்றை எடுத் துரைக்க உதவும் எழுத்துக்களும், ஆண்டவனுடைய தோற்றங்களே என்பது ஆன்றோர் கருத்து. அந்த எழுத்துக்களைத் தியானிப்பதாலேயே, அவற்றின் ஒலி களைக் கேட்பதாலேயேதெய்வ அருளைப் பெறமுடியும் என்பது நம் நாட்டோர் முடிவு. அந்த அடிப்படையில் காணும்போது தமிழ்எழுத்துக்கள் ஆண்டவனுடைய அம்சம் என்பதைநாம் நினைவிற்கொள்ளல் தகும்.

தமிழ் எழுத்துக்கள் எவை ?

இன்று அச்சு இயந்திரம் தோன்றி, ஆயிரக்கணக் கான நூல்கள் வெளியிடவும் அதை மக்கள் அனைவரும் படிக்கவும் வாய்ப்புகள் உள்ளன. இன்று தமிழகமெங் கும் எழுத்துக்கள் ஒன்றுபோலவே விளங்குகின்றன. நாம் பார்த்துப் படிக்கும் எழுத்துக்கள் இவ்வாறேதான் இருந்தனவா ? இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர்த் தமிழ் எழுத்துக்கள் எவ்வாறு இருந்தன ? ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் துங்கபத்திரைக் கரையி லிருந்து ஈழம் வரையில் ஒரு குடைக்கீழ் ஆண்ட சோழப் பேரரசர்கள் எழுதிப் படித்த தமிழ் எழுத்துக் கள் எவை ? சங்ககாலத்தில் கரிகால்பெருவளத்தானும், சேரன் செங்குட்டுவனும், பாண்டியன் நெடுஞ்செழி யனும் எழுதிய தமிழ் எழுத்துக்கள் எவை ? என்ற கேள்விகள் எழத்தான் செய்கின்றன. அன்று அவர் கள் எழுதிய தமிழ் எழுத்துக்களுக்கும் இன்று நாம் எழுதும் தமிழ் எழுத்துக்களுக்கும் வேறுபாடு உண்டு. அன்று அரும்பு நிலையிலே இருந்த எழுத்துக்கள் காலத்தால் வளர்ந்து, வேறு சில காரணங்களால் விரிந்து இன்று நல்ல மலராக மலர்ந்து இருக்கின்றன. காலத்தின் கதியிலே சற்றுப் பின்னோக்கிச் செல்வோ மானால் எழுத்துக்கள் படிப்படியாக மாறி வருவதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

சிந்துவெளிச் சித்திர எழுத்துக்கள் :

மிகப் பண்டைய தமிழ் எழுத்துக்கள் எவை ? இக் கேள்விக்கு எளிதில் பதில் கூறிவிட முடியாது. பண் டைத் தமிழ் மக்கள் யார் என்ற கேள்விக்கு ஆராய்ச்சி யாளர் பல்வேறு விடைகளைக் கூறுகின்றனர். இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் சிந்துச் சமவெளி யில் வாழ்ந்த ஹரப்பா பண்பாட்டு மக்களே திராவிடர் கள் என்பது சில ஆராய்ச்சியாளரின் முடிவு. அவர்கள் படிப்படியாகத் தமிழகத்திற்கு வந்திருக்கக் கூடும் என்று கருதுவோரும், தமிழகத்தினின்று படிப்படி யாகச் சிந்துச் சமவெளியை அடைந்து அங்குச் செழுமைபெற்ற பண்பாட்டையுடையவராக விளங் கினர் என்று கூறுவோரும் உண்டு. சிந்துச் சமவெளி யில் வாழ்ந்த மக்கள் ஒருவிதமான சித்திர எழுத்துக் களை உபயோகிக்கின்றனர். இம் மக்கள் திராவிடர் எனின் இவர்கள் வழங்கிய எழுத்துக்களே பண்டைத் தமிழ் எழுத்துக்கள் எனக் கூறலாம்.

இதுகாறும் ஹரப்பா மக்கள் உபயோகித்த சித்திர எழுத்துக்களை யாரும் வாசித்துப் பொருள் காண இயல வில்லை. சென்ற ஆண்டு உருஷிய அறிஞர் சிலர் கம்ப்யூட்டர்களை உபயோகித்து இவ்வெழுத்துக்களை வாசித்து அறிந்துவிட்டதாகக் கூறினர். அண்மையில் ஸ்டாக்ஹோமைச் சேர்ந்த சில விஞ்ஞானிகள் இவ் வெழுத்துக்களை வாசித்து அறிந்ததாகக் கூறியுள்ள னர். இவர்களும் கம்ப்யூட்டர்களையும், அனுமானத் தையும், தங்கள் உள் உணர்வையும் உதவியாகக் கொண்டு இவ்வெழுத்தை வாசித்து அறிந்துள்ளதாகக் கூறியுள்ளனர். ஆனால் இதைப் பற்றிய முழு விவரங் களும் இன்னும் வெளிவரவில்லை. ஆயினும் ஸ்டாக்-ஹோமைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கீழ்வரும் முடிவு களைக் கூறுகின்றனர். ஹரப்பா மக்கள் திராவிடர் களே ; அவர்களிடத்தில் ஜாதி வேறுபாடு இருந்தது என்று குறிக்கின்றனர். இக்கருத்து ஏற்புடைத்தாயின் ஹரப்பா எழுத்துக்களே தொன்மைத் தமிழ் எழுத்துக் கள் எனலாம். இதை உறுதிப்படுத்தும் வகையில் ஒரு சில தடயங்கள் உள்ளன.

தமிழகத்தில் கடைச்சங்க காலத்திலும் அதற்கு முன்பும் வாழ்ந்த மக்கள் இறந்துபட்ட தங்கள் முன்னோர்களுக்கு ஈமச் சின்னங்களை எழுப்பி இருக் கின்றனர். இச்சின்னங்கள் பெரும் கற்களைக் கொண்டு பல்வேறு அமைதிகளில் எழுப்பப்பெற்றவை. இவற்றைத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் அகழ்ந்து பரிசோதித்து உள்ளனர். இவற்றிலிருந்து கண் டெடுக்கப்பட்ட மண்பாண்டங்களில் பல்வேறு இடு குறிகள் காணப்படுகின்றன. இவை கலம் செய்யும் குயவர்களின் குறிகளாக இருக்கக்கூடும் என்று கருது வோர் உண்டு. இவற்றில் சில மிகவும் சாதாரண மான குறிகளாக இருந்தபோதிலும், பல விசேஷமான குறிகளும் காணக் கிடைக்கின்றன. இக்குறிகளை வகைப்படுத்தி ஆராய்ந்து பார்த்ததில் சுமார் எண்பது சதவிகிதத்திற்கு மேற்பட்டவை ஹரப்பா சித்திர எழுத்துக்களில் காணப்படுகின்றன. ஆதலின் ஹரப்பா எழுத்துக்களுக்கும் பண்டைப் பானை ஓடு களில் இருக்கும் எழுத்துக்களுக்கும் தொடர்பு இருந் திருக்க வேண்டும் என்பது தெளிவு.

ஹரப்பா பண்பாட்டைக் குறிக்கும் மற்ற முக்கியச் சான்றுகள் இன்றுவரை தமிழகத்தில் எங்கும் காணக் கிடைக்கவில்லை. இங்கு மற்ருென்று நினைவில் கொள்ளல் தகும். ஹரப்பா சித்திர எழுத்துக்கள் வலப்புறத்திலிருந்து இடப்புறமாக உருதுபோன்று எழுதப்பட்டது என்பது ஆராய்ச்சியாளர் முடிவு. ஆனுல் தமிழ் எழுத்துக்கள் இடமிருந்து வலமாக எழுதப்படுபவை என்பது அனைவரும் அறிந்ததாகும். ஆதலின் இதை இன்னும் ஆராய்ச்சிக்குரிய பொருளாகக் கொள்ளல் வேண்டுமே யொழிய ஏற்புடைத்தாகவோ அல்லது மறுக்கக்கூடியதாகவோ கொள்ள முடியாது.

இதன் பிறகு தெளிவாகத் தமிழ் எழுத்துக்கள் இவைதான் எனறு துணிந்து கூறும் வகையில் உள்ளவை, கி.மு. 3—ம் நூற்ருண்டிலிருந்துதான் தமிழகத்தில் காணக்கிடைக்கின்றன. இவை பெரும் பாலும் மலைகளிலும் குன்றுகளிலும் இயற்கையாக அமைந்த குகைத்தளங்களிலும் காணப்பெறுகின்றன. இவ்விடம் அனைத்திலும் சமணப் பெரியார்கள் வாழ்ந்த தடயங்கள் உள்ளன. இக்கல்வெட்டுக்கள் இக்குகைகளில் வாழ்ந்த சமணப் பெரியார்களுக்குப் பாழிகள் அமைத்து உதவியதைக் குறிக்கின்றன. இவை தவிர உறையூரில் அண்மையில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியில் கிடைத்த பானை ஒடுகளிலும், புதுச்சேரியின் அருகே அரிக்கமேடு என்ற இடத்தின் அருகே கிடைத்த பானை ஓடுகளிலும் இவ்வெழுத்துக்கள் காணப்படுகின்றன. ஆதலின் இவை தமிழகமெங்கும், எல்லா மக்களிடத்திலும் வழங்கிய எழுத்துக்களே, என்பது தெளிவாகும் இவற்றில் பெரும்பாலானவை தமிழ்ச் சொற்களாகவே இருக்கின்றன. ஆயினும் ஒரு சில பாகதச் (பிராகிருதம்) சொற்களும் கலந்தே காணப்படுகின்றன.

தமிளி : (தாமிழி)

இந்த எழுத்துக்களுக்கும், இந்தியாவின் வடபகுதியில் மௌரியப் பேரரசன் அசோகன் உபயோகித்த எழுத்துக்களுக்கும் நெருங்கிய ஒற்றுமை காணப்படுகிறது. இருப்பினும் இவை இரண்டிற்கும் முக்கிய வேடுபாடுகளும் உள. முக்கியமாகத் தமிழ் மொழியின் சிறப்பு எழுத்துக்களாகக் கருதப்படும் ழ, ள, ற, ன என்ற எழுத்துக்கள் அசோகருடைய எழுத்துக்களில் இல்லை. தமிழ் நாட்டில் உள்ள இவ்வெழுத்துக்களில் உள்ளன, அசோகன் வழங்கிய எழுத்துக்களை பம்மி [பிராம்மி] என்பர். தமிழ் நாட்டில் காணப்படும் இவ்வெழுத்துக்கள் அசோகருடைய எழுத்துக்களிலிருந்து தோன்றியவை என்பது சில ஆராய்ச்சியாளர் கருத்து. இவர்கள் இக்கருத்தை வலியுறுத்தும் வகையில் இவ்வெழுத்துக்களைத் 'தமிழ்—பிராம்மி' என்று அழைக்கின்றனர். மற்றும் சிலர் இவற்றைத் 'திராவிட' எழுத்துக்கள் என்று கூறுகின்றனர். திராவிட என்ற பெயர் கி.பி. 4–ஆம் நூற்ருண்டைச் சார்ந்த லலித விஸ்தரபம் என்ற பௌத்த நூலில் காணப்படுகிறது. இதற்கும் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முந்திய சமண சூத்திரங்களில் தமிழ் நாட்டில் அன்று வழங்கிய எழுத்துக்கள் தமிளி (தாமிழி) என்று பாகதப் பெயரால் வழங்கினர். ஆயினும் இவை தொன்மைத் தமிழ் எழுத்துக்களே.

கண்டுபிடிப்பு :

இந்த எழுத்துக்களைத் தமிழ் எழுத்துக்களே என்று முதலில் கண்டுபிடித்தவர் கே.வி. சுப்பிரமணிய ஐயர் என்ற பெருந்தகையார் ஆவர். இவரே முதன் முதலில் தமிழ்ச் சிறப்பு எழுத்துக்களான ழ, ள, ற, ன என்பவற்றின் தொன்மை உருவங்களைக் கண்டுபிடித்தவர் ஆகும், இதன் பிறகு பல அறிஞர்கள் இவ்வாராய்ச்சியில் ஈடுபட்டு வந்துள்ளனர். அண்மையில் திரு. ஐ. மகாதேவன் அவர்கள் இக்கல்வெட்டுக்களை ஏற்புடைய வகையில் படித்து நல்லதொரு ஆராய்ச்சி முடிவை வழங்கியுள்ளனர். இப்பொழுது இவ்வாராய்ச்சியில், பலர் ஈடுபட்டுள்ளனர்.

தன்மை :

இவ்வெழுத்துக்கள் மிகவும் எளிமையான தோற்றம் (வரிவடிவம்) உடையவை. இவற்றில் குறிலைக் குறிக்க ஒரு சிறுகோடும், நெடிலைக் குறிக்க இரு சிறுகோடுகளுமே உபயோகப்படுத்தப்பட்டன. மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியிடுதல் இவற்றில் காணப்படவில்லை. கிருஸ்து ஆண்டு தொடக்கத்தைச் சேர்ந்த கல்வெட்டுக்களில் மெய்யைக் குறிக்கப் புள்ளி இடப்படுவதைக் காண்கிருேம்.

இதுகாறும் நமக்குக் கிடைத்துள்ள தொன்மையான தமிழ் இலக்கணம் தொல்காப்பியமேயாகும். இதற்கு முன்னர் அகத்தியம் என்ற இலக்கணமும். ஐந்திரம் என்ற இலக்கணமும், மற்றும் சில இலக்கண நூல்களும் இருந்தனவென்று அறிவோம். ஆயினும் தொல்காப்பியமே முழுமையாகக் கிடைத்துள்ள நூல்களில் மிகவும் தொன்மையானது. தொல்காப்பியத்தில் மெய்யெழுத்துக்களைக் குறிக்கப் புள்ளியிடுதல் குறிக்கப்பட்டுள்ளன. "மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்" என்பது சூத்திரம். "கிருஸ்து ஆண்டுக்கு முன்னர் கல் எழுத்துக்களில் புள்ளியில்லாத காரணத்தால், புள்ளியிடும் காலத்தே தொல்காப்பியம் தோன்றி இருக்க வேண்டும். கி.பி. முதல் அல்லது இாண்டாம் நூற்ருண்டை ஒட்டி இது தோன்றி இருக்க வேண்டும்" என்று சில ஆராய்ச்சியாளர் கருதுவர். இங்கு ஒன்றை நினைவில் கொள்ளல் வேண்டும். சுமார் எழுநூறு அல்லது எண்ணூறு ஆண்டுகளுக்குப் பின்னர் சில கல்வெட்டுக்களில் புள்ளி இடாமலேயே மெய்யெழுத்துக்கள் எழுதப்பட்டுள்ளதைக் காணலாம். ஆதலின் இதைக் காரணமாகக் கொண்டு தொல்காப்பியம், காலத்தால் பிற்பட்டது என்பது ஏற்புடைத்தன்று, இத்தொன்மை எழுத்துக்கள் வழக்கிலிருந்த காலத்திலேயே தொல்காப்பியம் தோன்றி இருக்க வேண்டும்.

தொல்காப்பியமும் தொன்மைத் தமிழ் எழுத்துக்களும் :

இத்தொன்மை எழுத்துக்களை நோக்கும்போதுதான் தொல்காப்பியச் சூத்திரங்களுக்குப் பொருள் தெளிவாக விளங்கும். உதாரணமாக, "உட்பெறு புள்ளி உருவாகும்மே." என்ற சூத்திரத்திற்கு அடுத்து, "எகர ஒகர இயற்கையும் அற்றே" என்ற சூத்திரம் கூறும் குறில் ஆன எகரமும், ஒகரமும் உள்ளே புள்ளிபெற்று விளங்கும் என்பதாம். இன்றைய எகர, ஒகரங்களின் உள்ளே புள்ளி கிடையாது. ஆனல் தொன்மைத் தமிழ் எழுத்துக்களில் எகரத்தில்

உள்ளே புள்ளி இடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாம். "குற்றியல் இகரம், குற்றியல், உகரம். ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும. எழுத்தோரன்ன" என்று தொல் காப்பியம் கூறும். இவற்றில் ஆய்தம் என்ற எழுத்து மூன்று புள்ளிகளால் காட்டப்படுவதை அறிவோம். ஆனல் மற்ற இரண்டு எழுத்துக்களுக்கும் மூன்று புள்ளிகள் வைப்பது உண்டா என்பதை யாரும் அறிந்தாரிலர். ஆனல் தொன்மை எழுத்துக்களில் இகரம் மூன்று புள்ளிகளாலேயே குறிக்கப்பட்டுள்ளது. இது போன்று ஏனைய சூத்திரங்களுக்கும் பொருள் கூற முடியும். ஆதலின் தொல்காப்பியம் எழுத்து அதிகாரத்தைத் தெளிவாகக் கற்க விரும்புபவர்கள் தொன்மைத் தமிழ் எழுத்துக்களைக் கொண்டே அறிதல் கூடும்,

தமிழ் எழுத்துக்களைத் தவிர ("வடசொல்-கிளவி-வட எழுத்து ஒரீஇ, எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும் மே" சில வடசொற்களும் இக்கல்வெட்டில் காணப்படு படுகின்றன) இச்சொற்களைக் குறிக்க வட எழுத்துக் களும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக ஸுதன், தம்மம் முதலியனவாம். தமிழ்நாட்டில் ஆரியர் சமணர், பௌத்தர் முதலியவர் தமிழ் மக்களோடு இணைந்து வாழ்ந்திருக்கின்றனர். இவர்கள் அன்று பேசியமொழி பாகதம் என்பதாம். ஆரியர் சமஸ்கிருதம் என்ற செய்யுள் மொழியையும். சமணர், 'ஜைனமாகதி' என்ற செய்யுள் மொழியையும், பௌத்தர் பாலி என்ற செய்யுள் மொழியையும் உபயோகித்தனர். எனினும், அவர்களது வழக்கு மொழி பாகதம் ஆகும். இம்மொழிகளுக்கு அக்காலத்தே பல இலக்கணங்கள் தோன்றின. தமிழ் இலக்கண நூல்களும், தமிழகத்தில் தோன்றிய பாகத இலக்கண நூல்களும் ஒன்ருல் ஒன்று வளம் பெற்றன. தமிழ் மொழிக் கல்வெட்டுக்களில் பாகதச் சொற்கள் வரும் பொழுது தமிழ் இலக்கண மரபை ஒட்டியே உபயோகப் படுத்தப்பட்டன.

எளிமையான அமைப்போடு விளங்கிய தொன்மைத் தமிழ் எழுத்துக்கள காலப்போக்கில் சில மாறுதல்களை அடையத் தொடங்கின. எழுத்துக்களை விரைவாக எழுதத் தொடங்கும் போது நேர்கோடுகளாக இருந்த வை சற்று வளைவது இயற்கை. இத்துடன் விரைவாக எழுதும் போது எழுத்துக்களை விட்டுவிட்டு எழுதாமல் ஒன்ருேடு ஒன்று தொடர்ந்து சேர்த்து எழுத முற்படு வதும் இயற்கை. இவ்விரு முக்கிய காரணங்களினுல் பண்டைய எழுத்துக்களில் மாறுதல்கள் படிப்படியாகத் தோன்றின கி. பி. 2ம் நூற்ருண்டிலிருந்து எழுத்துக் களுக்கு அழகு கொடுக்க, தலையில் ஒரு சிறுகோடு இடப்பட்டது. இக்கோடு தொன்மை வடிவங்களுடன் நிலையாக இணைந்து விட்டன. இக்கோடும், காலப் போக்கில் விரைவாக எழுதுகின்ற நிலையில் வளர்ச் சியுற்று இன்றைய வடிவத்திற்குக் காரணமாக அமைந்தது.

கி. பி. 2ஆம் நூற்ருண்டில் எழுதப்பட்ட இரண்டு முக்கிய வழிகளின் தொடக்கம் காணப்படுகிறது. இன்று நாம் தமிழ் எழுத்துக்களென்றும், வட்டெழுத் துக்கள் என்றும் குறிக்கும் இரண்டு பிரிவுகளின் தொடக்கத்தை இரண்டாம் நூற்ருண்டில் காண் கிருேம். சற்றுச் சாய்ந்து, வளைகளோடு எழுதப்பட்ட எழுத்துக்கள் நாளடைவில் வட்டெழுத்துக்களாகப் பரிணமித்தன. நேராக எழுதப்பட்ட வரிவடிவங்கள் இன்றைய தமிழ் எழுத்துக்களாக மலர்ந்துள் ளன. சுமார் ஏழாம் நூற்ருண்டின் இறுதிவரை இவ் விரண்டு எழுத்துக்களும் கலந்தே கல்வெட்டுக்களில் உபயோகப்படுத்தப்பட்டன. பாண்டி நாட்டிலும், மலை யாள நாட்டிலும், சேலம், கோவை முதலிய கொங்கு நாட்டின் பகுதியிலும் வட்டெழுத்து அதிகமாக வழக் கில் வந்தது. சுமார் 12, 13 ஆம் நூற்ருண்டுகளில் கிரந்த எழுத்துக்களுடன் இணைந்த வட்டெழுத்துக் களே வளர்ந்து மலையாள எழுத்துக்களாகப் பரிணமித் துள்ளன.

தனித் தமிழ் எழுத்துக்கள் தொண்டை மண்டலத் தும், சோழ மண்டலத்திலும், சிறப்பாக வழக்கில் இருந்து வளர்ந்தது, 10, 11 ஆம் நூற்ருண்டுகளில் சோழப் பேரரசர்கள் தமிழகம் முழுவதும் ஒரு குடைக் கீழ்க் கொணர்ந்தனர். இவர்கள் எழில் மிகுந்த தமிழ் எழுத்துக்களைக் கல்வெட்டுக்களில் குறித்து வைத்துள் ளனர். ஊர்தோறும் கற்கோயில்கள் எழுப்பப்பட்டு ஏராளமான கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டன. ஆதலின் இவ்வெழுத்துக்கள் விரைவில் வளர்ச்சி பெற்றன. பின்னர் ஆண்ட விஜயநகர நாயக்க மன்னர் காலத்தில் எழுத்துக்கள் வனப்புடன் எழுதப் பெறவில்லை.

தமிழ்மொழி கல்வெட்டுக்களுடன் முதலில் பாகதச் சொற்களும், பின்னர் செய்யுள் மொழியாகச் சீர்ப்பட்ட சம்ஸ்கிருதச் சொற்களும் தமிழ்க் கல்வெட்டுக்களிலே காணப்படுகின்றன. வடமொழிச் சொற்கள் இடை யில் வரும்போது நம் இலக்கண மரபிற்கு ஏற்ப வட எழுத்துக்களே உபயோகிக்கப்பட்டன. தமிழகத்தில் தோன்றிய வடமொழி எழுத்துக்கள், தமிழ் எழுத்தை அடிப்படையாகக் கொண்டே வளர்ந்தன. இவ் வெழுத்துக்களைக் கிரந்தம் என்று கூறுவர். தமிழ் நாட்டில் வடமொழியை எழுதக் கிரந்த எழுத்துக்களே சுமார் 1300 ஆண்டுகளுக்கு மேல் வழக்கில் இருந்தன. பல்லவர்கள் கடல்கடந்த நாடுகளிலும், தமிழ்த் தொண்டைப் பரப்பினர். சைவ சமயமும், பௌத்த சமயமும், சிறப்பாக அந்நாடுகளில் பரவின. இரு சமயத்தாரும் உபயோகித்த எளிதான பல்லவ கிரந்த எழுத்துக்கள் அங்குப் பரவின. இன்று கீழை நாடு களில் பல எழுத்துக்களாக உள்ளவை பல்லவ கிரந்த எழுத்துக்களில் இருந்து தோன்றியவையே. சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னர் வரையில் இக்கிரந்த எழுத்துக்களே தமிழகத்தில் சிறப்பாக வழக்கில் இருந் ததை அனைவரும் அறிவர். இப்பொழுது இது மறைந்து வருகிறது.

நாகரி எழுத்துக்கள் இந்தியாவின் வடபகுதியில் வழக்கில் இருந்தன. இருப்பினும் ஒருசில காலங்களில் தமிழகத்திலும், இதை உபயோகித்திருக்கின்றனர். 8-ஆம் நூற்ருண்டின் தொடக்கத்தில் பல்லவ மன்னன் ஒருவனுலும், வேணாட்டை ஆண்ட ஆய்குல மன்னன் ஒருவனுலும், நாகரி எழுத்துக்கள் உபயோகப்படுத்தப் பட்டன. சோழப் பேரரசர்கள் தங்களுடைய காசுகளில் இவ்வெழுத்தைக் கையாண்டு இருக்கின்றனர். இதே

எழுத்து ஒரு சில மாறுதல்களைப் பெற்று விஜய நகர மன்னர்களால் உபயோகப்படுத்தப்பட்டது. இவ்வெழுத்துக்களை நந்தி நாகரி என்று அழைப்பர். இதே மன்னர்கள் காலத்தில் தெலுங்கு, கன்னட எழுத்துக்களும் தமிழ் நாட்டில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன.

இவை தவிர ரோமானிய எழுத்துக்கள், சீனதேசத்து எழுத்துக்கள், ஈழ எழுத்துக்கள், அரவுநாட்டு எழுத்துக்கள், போர்ச்சுகீசிய, டச்சு எழுத்துக்கள், மராட்டி எழுத்துக்கள் முதலிய பலமொழி எழுத்துக்கள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன.

தமிழகத்தில் தொன்றுதொட்டு பல இலக்கண நூல்கள் தோன்றியுள்ளன. இவை வெவ்வேறு காலங்களில் தோன்றியவை. இவ்விலக்கணங்களைக் கற்கமுற்படும்போது அவ்வக்காலங்களில் வழக்கில் இருந்த எழுத்துக்களைக் கொண்டு கற்றறிதல் வேண்டும்.

74. சிம்மாசனாதிபதிகள்

எம்பெருமானார் என்னும் ஸ்ரீ இராமாநுசர் நியமித்தருளிய 74 சிம்மாசனாதிபதிகளின் பெயர்கள் வருமாறு ;—

1. முதலியாண்டான்
2. கந்தாடையாண்டான்
3. மாருதிப் பெரியாண்டான்
4. மாருதிச் சிறியாண்டான்
5. ஈசுவர ஆண்டான்
6. ஜீயராண்டான்
7. ஆண்டு கொண்டான்
8. ஆட்கொண்டான்
9. ஈயுண்ணி யாண்டான்
10. அம்மங்கி யாண்டான்
11. சோமாசி யாண்டான்
12. கூரத்தாழ்வான்
13. தெற்காழ்வான்
14. நெய்யுண்டாழ்வான்
15. ஈயுண்ணிப்பிள்ளை யாண்டான்
16. மிளகாழ்வான்
17. அனந்தாழ்வான்
18. கோமடத்தாழ்வான்
19. வேதாந்தி யாழ்வான்
20. மாடபூசி ஆழ்வான்
21. சேட்டலூர் ஆழ்வான்
22. கிடாம்பி ஆழ்வான்
23. உக்கலாழ்வான்
24. அரணபுரத்தாழ்வான்
25. உருப்பூட்டூர் ஆழ்வான்
26. சொட்டைநம்பி
27. பிள்ளை திருமலை நம்பி
28. தொண்டனூர் நம்பி
29. மருதூர் நம்பி
30. மழலூர் நம்பி
31. திருக்குறுங்குடி நம்பி
32. முடும்பை நம்பி
33. பராங்குச நம்பி
34. வில்லிபுத்தூர் நம்பி
35. வடுக நம்பி
36. வங்கிபுரத்து நம்பி
37. செடி எடுத்த நம்பி
38. சொக்கத்தூர் நம்பி
39. வங்கிபுரத்து ஆச்சி
40. புண்டரீகாட்சர்
41. பராங்குச பட்டர்
42. சிறுபள்ளி தேவராச பட்டர்
43. கோவிந்த பட்டர்
44. நம்பியூர் அரங்கராச பட்டர்
45. உள்ளூரப் பெரிய பெருமாள் பட்டர்
46. வரந்தரும் பெருமாள் பட்டர்
47. எம்பார்
48. சிறிய கோவிந்தப் பெருமாள்
49. சுந்தரத் தோளுடையார்
50. குறுகைப்பிரான் பிள்ளான்
51. ஆர்க்காட்டுப் பிள்ளான்
52. இராமாநுசப் பிள்ளான்
53. திருமலை நல்லான்
54. வங்கிபுரத்து ஆச்சான்
55. கோமாண்டூர் ஆச்சான்
56. கிடாம்பி ஆச்சான்
57. கொங்கில் ஆச்சான்
58. ஈச்சம்பாடி ஆச்சான்
59. கணியனூர்ச் சிறிய ஆச்சான்
60. மஞ்சப்பூர்ச் சிறிய ஆச்சான்
61. என்னாச்சான்
62. எச்சான்
63. ஆசூரி ஆதிகேசவப் பெருமாள்
64. கிடாம்பிப் பெருமாள்
65. மகாமுனிப் பெருமாள்
66. அம்மங்கிப் பெருமாள்
67. பிள்ளை திருநறையூர் அரையர்
68. இராச மகேந்திரம் பெருமாள் அரையர்
69. பிள்ளை திருநாராயணபுரத்து அரையர்
70. பிள்ளை திருக்குறுங்குடி அரையர்
71. பிள்ளை திருவாய்மொழி அரையர்
72. திருவரங்கப் பெருமாள் அரையர்
73. ஆழ்வார் திருவரங்கப்பெருமாள் அரையர்
74. இராச நாராயணப் பெருமாள் அரையர்

" திருமாலை யாண்டான், திருக்கோட்டி நம்பி, திருவரங்கப்
பெருமாள் அரையர், திருமலை நம்பி, பெரிய நம்பி,
அருமால் கழல்சேர் எதிராசர் தாளிற் சிங்காதனராய்
வரும் ஆரியர்கள் எழுபத்து நால்வர் என் வான் துணையே.''

—திருவரங்கத்து அந்தாதி

"சேவலங் கொடியோன்"

முன்னுரை :

தமிழ்நூற் பயிற்சி ஓரளவாயினும் உடையவர்கள் அனைவரும், யாப்பருங்கலக் காரிகை என்னும் இலக்கண நூலைப் பற்றி அறிந்திருப்பர். அகவற்பா வெண்பா கலிப்பா வஞ்சிப்பா என்னும் தமிழ்ச் செய்யுட்களுக்கு உரிய இலக்கணங்களை விளக்குவது இந்நூல். 'காரிகை கற்றுக் கவிபாடுதலில் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்றே' எனவும், 'காடும் செடியும் அன்றோ தமிழ்க் காரிகை கற்றதுவே' எனவும், பிறவாறும் வழங்கும் பழமொழிகள், யாப்பருங்கலக் காரிகை என்னும் செய்யுள் இலக்கண நூலின் சிறப்பினையும், தமிழ் மக்களிடையே அது மிகவும் போற்றி மதித்துப் பயிலப் பெற்றுவரும் மாட்சிமையினையும், நன்கினிது உணர்த்தும்.

குணசாகரர் :

இந்நூலினை இயற்றிய ஆசிரியர் அமிதசாகரர் என்பவராவர். அவர்தம் காலம் கி.பி. 10-ஆம் நூற்றுண்டு ; அஃதாவது இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே என்பர். இந்நூலுக்கு உரை எழுதியவர் குணசாகரர் என்பவர். இவர் அமிதசாகரரின் மாணவராக, அவர்தம் சமகாலத்தவராக வாழ்ந்திருந்தவர் எனக் கொள்ளுதல் கூடும். இக் குணசாகரர் தாம் வரைந்த யாப்பருங்கலக் காரிகை உரையின் இறுதியில், ஒழிபியல் என்னும் பகுதியின் முடிவில், செய்யுட்களில் வருவதற்குரியன அல்லாத எழுத்துக் குற்றம், சொற்குற்றம், பொருட்குற்றம், யாப்புக்குற்றம், அலங்காரக்குற்றம், ஆனந்தக்குற்றம் என்பனவற்றைப் பற்றி விளக்குகின்றுர். விளக்கிவிட்டு, அக் குற்றங்கள் ஒன்றும் இல்லாத சிறந்த பாடல் ஒன்றை மேற்கோள் காட்டுகின்றுர்.

> "தாமரை புரையும் காமர் சேவடிப்
> பவழத் தன்ன மேனித் திகழ்ஒளிக்
> குன்றி ஏய்க்கும் உடுக்கைக் குன்றின்
> நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேற்
> சேவலங் கொடியோன் காப்ப
> ஏம வைகல் எய்தின்றால் உலகே"

என வரும் அழகிய பாடல், எல்லாக் குற்றமும் தீர்ந்த செய்யுட்கு மேற்கோளாகக் குணசாகரரால் எடுத்துக் காட்டப் பெற்றுள்ளது.

முருகன் துதி :

இப்பாடல், குறுந்தொகை என்னும் சங்க நூலின் கடவுள் வாழ்த்துப்பாடல் ஆகப் பாரதம் பாடிய பெருந்தேவனுர் என்னும் பழம்பெரும் புலவராற் பாடப்பெற்றதாகும். இப்பாடல் தமிழ்க் கடவுள் ஆகிய முருகனைப் பற்றிய துதியாக அமைந்திருக்கின்றது. முருகனைப் பற்றிய இத்துதிப்பாடல், சமண சமயத்தைச் சார்ந்தவர் என்று கருதப்படும் முனிவர் ஆகிய குணசாகரரால், எல்லாக் குற்றமும் தீர்ந்த இனிய சிறந்த செய்யுளுக்கு மேற்கோளாக எடுத்துக் காட்டப் பெற்றிருப்பது, இப் பாடலின் இணையற்ற மாட்சிமையினை எழிலுற விளக்கும் சான்ருக அமையும். ஆதலின் இச்சிறந்த பாடலின் பொருள் நலத்தினை, ஈண்டு இயன்ற அளவு ஒருசிறிது காண்போம்.

பாடலின் பொருள் :

"தாமரை மலரைப் போன்ற அழகிய சிவந்த திருவடிகளையும், பவழத்தை ஒத்த திருமேனியினையும், விளங்குகின்ற ஒளி மிக்க குன்றிமணியைப் போன்ற உடையினையும், கிரவுஞ்சம் என்னும் மலையினது நடுவிடம் பிளக்கும்படி செலுத்திய அழகிய ஒளி மிகுந்த நீண்ட வேல் ஆகிய படையினையும், சேவல் ஆகிய அழகிய கொடியினையும் உடைய, முருகப்பெருமான் காப்பாற்றுவதனுல், இவ்வுலகமானது இன்ப மயமான நாட்களை எய்தி வருகின்றது. ஆதலின் உயிர்களுக்கு இடையூறு இல்லை." என்பது, இப்பாடலின் திரண்ட பொருள். முருகப் பெருமானின் இத்தகைய திருவுருவத்தினைத் தியானம் செய்க ; செய்யின் எல்லா நலமும் எய்தலாம் என்பது, இதன் கருத்து.

(1) இப்பாடல் நம்மனோர் பலகாலும் எண்ணிச் சுவைத்து மகிழ்தற்கு ஏற்றவகையில் மிகவும் சுருக்கமாக, எளிய இனிய சொற்களால் இயன்றிருப்பது. வியந்து மகிழ்தற்குரியது. முருகனுக்கும் ஆறு என்னும் எண்ணுக்கும் மிகுந்த தொடர்பு உண்டு. முருகனின் சிறந்த தலங்கள் ஆறு ; முகங்கள் ஆறு ; மந்திர எழுத்துக்களும் ஆறு. ஆதலின் இப்பாடலும் ஆறு வரிகளில் அமைந்திருப்பது, ஒரு பொருத்தமாகக் காணப்படுகின்றது.

(2) மேலும், இப்பாடலின்கண் முருகனுடைய திருவடி, நிறம், ஒளி, ஆடை, வேல், சேவற்கொடி என்னும் ஆறு பொருள்களைப் பற்றியே ஆசிரியர் குறிப்பிட்டுப் புனைந்துரைத்திருத்தலும், கருதற்பாலதாக உள்ளது.

(3) முருகனின் சிவந்த நிறமும், அழகிய தோற்றமும், மணமுடைமை முதலிய தெய்வத்தன்மைகளும். சரவணப் பூம்பொய்கையில் பதுமப்பாயலில் அப்பெருமான் தோன்றியருளிய சிறப்பும், ஆகியவற்றை நினைக்கும்தொறும் நமக்குத் தாமரை மலரின் நினைவே, பெரிதும் முதற்கண் முந்துற்றுக் கிளர்தலின், அவ்வியல்புக்கு ஏற்ப, இப்பாடலும் தாமரை எனத் தொடங்குதல் தகுதிப்பாடு மிக்கதாகத் திகழ்கின்றது. "தாமரை" என்பது ஒரு மங்கல மொழியாதலும், ஈண்டு நாம் மனங்கொள்ளத் தக்கது.

(4) தாமரை மலர், முருகனின் திருமுகம் முதலிய பிற உறுப்புகளுக்கும் ஒப்புமையுடையதாயினும், முருகனின் திருவடியையே முதற்கண் நினைவுகூர்ந்து, அதற்கு உவமையாக உரைக்கப்பெற்றது. கடவுளரைப் பாடுங்கால் அவர்தம் திருவடிகளை நினைவு கூர்வதே கவிஞர்களின் இயல்பான பண்பு. இதனைத் திருவள்ளுவர் முதலாகிய எல்லாச் சான்றோர் பாடல் களிலும் காணலாம். 'நின்னிற் சிறந்த நின் தாளிணை யவை' எனப் பரிபாடல் பாடுதற்கேற்பக் கடவுளைக் காட்டிலும், அவர்தம் திருவடிகளே மிகவும் சிறந்தவை என்று கொண்டு, சான்றோர் அனைவரும் பாடுதலின் இப்பாடலிலும் அம்மரபு செவ்விதின் அமைந்தது.

(5) குறுந்தொகை என்னும் சங்கநூல், நானிலத்து ஐந்திணை ஒழுக்கமும் பற்றி நுதலி எழுந்ததாகலின், அப்பொருளையே இப்பாடல் கருவாகக்கொண்டு திகழ் கின்றது. 'தாமரை புரையும் காமர் சேவடி' என்ற தனால் மருதநிலத்தின் கருப்பொருள் ஆகிய தாமரை யும், 'பவழத்தன்ன மேனி' என்றதனால் நெய்தல் நிலத்துக் கருப்பொருள் ஆகிய பவழமும், 'குன்றி ஏய்க்கும் உடுக்கை' என்றதனால் முல்லைக்கு உரிய தாகக் கருதப்பெறும் குன்றிமணிக் கொடியும், 'குன்றின் நெஞ்சுபக' என்றதனால் குறிஞ்சிக்குரிய மலையும், ஆக நானிலமும் குறிக்கப்பட்டன.

(6) பாலைக்கெனத் தனியே நிலம் இல்லாமை யாலும், முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்தே பாலை என்று படிவம் கொள்ளுகின்றன ஆதலாலும், அம்முறையில் குறிப்பாகப் பாலைநிலமும் ஈண்டு உணர்த்தப்பட்டது. முல்லைக்குரிய குன்றியையும், குறிஞ்சிக்குரிய குன்றையும் ஒரே வரியில் இயையுமாறு வைத்ததனால், பாலைநிலம் இங்குச் சுட்டப்பெற்றது எனக் கொள்ளலாம்.

(7) மருதம் நெய்தல் முல்லை ஆகிய ஏனை நிலங் களைக் கருப்பொருள்களாலும், குறிஞ்சியை மலையாகிய முதற்பொருளாலும் சுட்டியமை, 'சேயோன் மேய மைவரை யுலகம்' எனப்படும் குறிஞ்சி நிலவுரிமை முருகனுக்கே யுரியதாதலை யுணர்த்துதற்கு ஆகும்.

(8) முருகன் இளமையும், அழகும், வீரமும் உடைய வன் ஆதலின் 'தாமரை புரையும் காமர் சேவடி' என்று இளமையினையும், 'பவழத்தன்ன மேனித் திகழ்ஒளி' என்று அழகினையும், 'குன்றின் நெஞ்சுபக எறிந்த' என்று வீரத்தினையும், ஆசிரியர் விதந் தெடுத்துப் புகழ்ந்தார்.

(9) மேலும், தம்நிகர் இல்லாத தலைவர்க்கு அளியும் தெறலும் (இரக்கமும், தண்டனையும்) என்னும் இரண்டு குணங்கள் இன்றியமையாதன. முருகன் தன்நிகர் இல்லாத தனிப்பெருந் தலைவன், ஆதலின் அப்பெருமானுக்கும் இவ்விரு குணங்களும் உண்டு. எனவே 'சேவலங்கொடியோன் காப்ப' என்றதனால் அளியும், 'குன்றின் நெஞ்சுபக' என்றதனால் தெறலும் சுட்டப்பெற்றது.

(10) இப்பாடலில் மருதநிலத்துக் கருப்பொருள் (தாமரை) முதலிலும், குறிஞ்சி நிலத்து முதற்பொருள் (மலை) ஈற்றிலும் அமைந்ததனால், முறையே அவற்றிற் குரிய ஊடலும் கூடலும் ஆகிய உரிப்பொருள்களால் 'ஊடுதல் காமத்திற்கின்பம், அதற்கின்பம் கூடி முயங்கப்பெறின்' என்னும் முதுமொழியின்படி நிகழும் இன்பத்தின் இயல்பு உணர்த்தியவாறுமாயிற்று.

(11) 'சேவலங் கொடியோன்' என்பது சேவலையே யன்றி, மயிலையும் உணர்த்தியதாகக் கொள்ளலாம். முருகனுக்கு மயிற்கொடியும் உண்டு என்று, 'பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ' எனவரும் திருமுருகாற்றுப்படை வரியால் (122) உணரலாம். ஆண்மயிலுக்குச் சேவல் எனப் பெயர் வழங்குதல் மரபு அன்று. ஆயினும்,

> "சேவற் பெயர்க்கொடை
> சிறகொடு சிவணும்
> மாயிருந் தூவி
> மயிலலங் கடையே"

எனவரும் தொல்காப்பிய நூற்பாவின் உரையில், 'செவ்வேள் ஊர்ந்த மயிலுக்காயின் அதுவும் நேரவும் படும்' எனவரும் பேராசிரியர் விளக்கத்தினால், ஈண்டுச் "சேவலங் கொடியோன்" என்புழிச் சேவல் மயிலைக் குறிப்பதாகக் கொள்ளுதலும் பொருந்தும்.

(12) முருகன் கோழிக் கொடியை உடையவன். கோழி கூவினால், பேய்கள் ஓடி மறைந்து ஒழியும், இருளும் தீங்கும் நீங்கும். ஆதலின் உலகில் நலமுற வாழ விரும்புவோர் அனைவரும் சேவற் கொடியைச் சிறப்பாகக் கொண்டுள்ள முருகனைத் தொழுது பணிதல் வேண்டும். இதனையே "கோழிக்கொடியன் அடிபணியாமல், குவலத்தே வாழக் கருதும் மதியிலி காள்!" என்னும் கந்தர் அலங்காரப் பாடல் வரியால், அருணகிரிநாதர் அறிவுறுத்தருளியுள்ளார். சேவலைக் கொடியாக உடைய முருகன் காப்பதனாலேயே உலகத் திலுள்ள உயிர்களெல்லாம் இன்பமாக வாழ்கின்றன: வாழ இயலும் என்பது,

> "சேவலங் கொடியோன் காப்ப
> ஏம வைகல் எய்தின்றால் உலகே"

எனவரும் இக்குறுந்தொகைப் பாடலால், சிறந்த முறையில் செவ்விதின் விளக்கப்பெற்றுள்ளது.

முடிவுரை :

இங்ஙனம் பற்பல நுண்பொருள்கள் பொருந்திய இச்சிறந்த இனிய செய்யுள், குணசாகரர் குறிப்பிட்டு வியந்தவாறு, எல்லாக் குற்றமும் தீர்ந்த சிறந்த நல்ல செய்யுளே என்பதில் ஐயமில்லை. சிறந்த இந்தச் செய்யுளைக் கொண்டு, முருகனைப் பலகாலும் துதி செய்து தியானித்து, முருகன் அருளைப் பெற்று உய்ய முயலுவோமாக!

—ஆசிரியர்

* "The Cock, that is the trumpet to the morn, Doth with lofty, and shrill-sounding throat, Awake the god of day; and, at his warning, Whether in sea or fire, in earth, or air, The extravagant and erring spirit lies to his Confine"

—William Shakspeare, Hamlet.

திருமூழிக்களத்து விளக்கு

டாக்டர் திரு. என். சுப்பு ரெட்டியார், M.A., Ph.D.

(முற்றொடர்ச்சி)

அடுத்து, கொக்கினங்களையும் குருகினங்களையும் வேண்டுகின்றாள் பராங்குச நாயகி. எம்பெருமானிடம் இரண்டில் ஒன்று கேட்டு வந்து சொல்லுமாறு குறிப்பிடுகின்றாள். பாசுரம் இது:

" தக்கிலமே கேளீர்கள்;
தடம்புனல்வாய் இரைதேரும்
கொக்கினங்காள்: குருகினங்காள்:
குளிர்மூழிக் களத்துஉறையும்
செக்கமலத்து அலர்போலும்
கண்கைகால் செங்கனிவாய்
அக்கமலத்து இலைபோலும்
திருமேனி அடிகளுக்கே "

இந்தப் பதிகத்தில் உயிரான பாட்டு இது. தம்மை அடைந்த அடியார்களுடன் உண்டான சேர்க்கையில் இனிமையால் பிரிந்தார்க்கு உயிர் தரிக்க வொண்ணாத படியிருக்க தம்முடைய வடிவழகை மறந்து தன்னை நினையாதிருத்தல் கூடும் என்பது அவளது உட்கிடக்கை. இவ்வடிவழகைப் பிரிந்தார் எங்ஙனம் உயிர் தரிப்பர் என்பதனை அறிவித்து விட்டால் உடனே புறப்பட்டு வந்து விடுவார் என்பதாகக் கருதுகின்றாள். எனவே, அவரது வடிவழகை அப்பறவைகட்குக் குறிப்பிடுகின்றாள். அவருடைய உறுப்புக்களெல்லாம் செந்தாமரை போல் இருப்பதால் அவருடைய திருமேனி தாமரையின் இலைபோல் உள்ளது என்கின்றாள். தாமான தன்மையில் எம்பெருமானுக்கும் தடாகத்திற்கும் ஒற்றுமை காட்டி அவனை 'வாசத்தடம்' என்று கூறினவரன்றோ? ஆழ்வார் எம்பெருமானை முதன் முதலாகக் காண்பவர்களோடு அவருடைய திருக்கண்கள் முதலுறவு பண்ணும்; அத்திருக்கண்ணுக்குக்குத் தோற்றவர்களை அவருடைய திருக்கைகள் சேர்த்து அணைத்துக்கொள்ளும்; கைகள் அணைக்குங்கால் அந்த ஊற்றின்பத்திற்குத் தோற்றார் அவருடைய திருவடிகளில் விழுவர்; திருவடிகளில் விழுந்தாரை நல்ல சொற்களை நல்கி அவர்களைத் தரிப்பிக்கும் அவனுடைய புன்சிரிப்பு. இங்ஙனம் உறுப்புக்களின் வனப்பையும் வடிவழகையும் காட்டி அடிமை கொண்டார் அவர். அவ்வடிவழகிற்குத் தோற்றுப் பசலையைத் தரித்திருப்பார் அவருக்குத் தகாதவரோ என்று கேட்குமாறு பணிக்கின்றாள், ஆழ்வார் நாயகி.

"தக்கிலமே கேளீர்கள்" என்பதற்கு நம்பிள்ளை ஈடு. "நாம் ஒன்றிலே துணியும்படி கேட்டுப் பாருங்கள். அவர் இன்னும் இது வேணுமென்றிருந்தாராகில் பிராணன்களை வருந்தி நோக்கிக் கொண்டு கிடக்கவும், வேண்டாமென்றிருந்தாராகில் நாமும் ஒன்றிலே துணியும்படி அறுதியாகக் கேட்டு விடுங்கோள்' என்பதாக. அவர் இன்னும் 'இவள்வேண்டும்' என்று இருந்தாராகில் பின்னினசடையினாலும் தூக்கிலிட்டுக் கொள்ளத் துணிந்த பிராட்டியைப்போல் ஏதாவதொரு வழியில் துணிவதாக உறுதிகொண்டு 'விருப்பம் உண்டா? இல்லையா? இந்த இரண்டில் ஒன்று அறுதியிட்டுக் கேட்டு வரும்படி வேண்டுகின்றாள்.

மேலும் தூது செல்ல ஆயத்தமாக உள்ள குருகுக் கூட்டத்திலுள்ள ஓர் இளங்குருகினை விளித்துஇவ்வாறு பேசுகின்றாள்.

பூந்துழாய் முடியார்க்குப்
பொன்னாழிக் கையார்க்கு
ஏந்துநீர் இளம்குருகே
திருமூழிக் களத்தார்க்(கு)
ஏந்துபூண் முலைபயந்துஎன்
இணைமலர்க்கண் நீர்ததும்பத்
தாம்தம்மைக் கொண்(டு) அகல்தல்
தகவுஅன்று என்று உரையீரே "

எம்பெருமானுடைய வடிவழகு நினைக்க நினைக்க ஆழ்வாரை உருக்கி விடுகின்றது என்பது இப்பாடலில் தெரிவிக்கப்படுகின்றது. "அன்னார் திருமுடியிலே திருத்துழாய் மாலை சாத்திக் கொண்டிருக்கும் அழகு ஒன்று மட்டிலும் போதுமே; அதற்கு மேல் கையும் திருவாழியும் ஆஆ! அழகு! 'சுடராழியும் பல்லாண்டு' என்று ஆலத்திவழிக்க வேண்டும் படியன்றோ உள்ளது? இவ்வழகுகளை நினைத்ததனாலன்றோ நான் பசலை நிறம் அடைந்தும் கண்ணீர் சோர்ந்தும் நிற்கின்றேன். இந் நிலையை அவருக்குப் புலப்படுத்துங்கள்" என்று தெரிவிக்கின்றாள் பராங்குசநாயகி. "எம்பெருமான் என்னை விட்டுப் பிரிந்து போகும்பொழுது தன்னுடைய திருமேனியை இங்கு வைத்து விட்டன்றோ போயிருக்க வேண்டும்? அந்தத் திருமேனியையும் கொண்டு அகன்றாரே. தமக்கு உரிமைப்பட்ட பொருளைக் கொண்டு போவது நியாயமா? பக்தர்கட்கல்லவா அவர் உடம்பு இருப்பது" என்று உரைக்குமாறு பணிக்கின்றாள். "இங்ஙனம் செய்தது தகுதியன்று" என்று தெரிவிக்குமாறும் வேண்டுகின்றாள், 'தமக்கு உரிமைப்பட்ட பொருள்' என்பதைத் "தனக்கே ஆக எனைக் கொள்ளும் ஈதே" என்று மூதலித்தவரன்றோ இவர்?

இந்நிலையில் வானத்தில் உலாப் போகும் சில மேகங்களைக் காண்கின்றாள் ஆழ்வார் நாயகி; உடனே அவற்றைத் தூது போகுமாறு வேண்டுகின்றாள்.

திருமேனி அடிகளுக்குத்
தீவினையேன் விடுதூதாய்
திருமூழிக் களம்என்னும்
செழுநகர் வாய் அளிமுகில்காள் !
திருமேனி அவட்கு அருளீர்
என்றக்கால் உம்மைத்தன்
திருமேனி ஒளி அகற்றித்
தெளிவிசும்பு கடியுமே?"

வடிவழகையே அடையாளமாகக் கொண்டு விளங்கும் எம்பெருமானுக்குத் 'திருமேனி அடிகள்' என்று ஒரு திருநாமம் சாத்துகின்றாள் பராங்குசநாயகி. வடிவழகினால் ஆன்மாக்கள் அனைத்தையும் தோற்பித்து அடிமை கொள்பவருக்கு இது பொருத்தமான பெயரன்றோ? எதிரிகளையும் அவ்வடிவம் கவரும் அல்லவா? கண்ணன் தூது போகுங்கால், அவனுக்கு அவையில் எவரும் மரியாதை செலுத்தலாகாது என்று ஆணையிட்டிருந்தான் துரியோதனன். கண்ணபிரான் அங்கு எழுந்தருளுங்கால் அவையிலிருந்த அரசர்கள் அனைவரும் கண்ணனின் சோதி வடிவுகண்டு பரவசராய் எழுந்து மரியாதை செலுத்தினர். துரியோதனனும் துடை நடுங்கி எழுந்து விட்டு உடனே தன் உறுதி தடுமாறியதற்கு வருந்தி 'என்னே இத்திருமேனி அழகு!' என்று கண்ணனை உற்று நோக்கினனாம். இதனைப் பெரியாழ்வார் குறிப்பிடுகின்றார். "அப்படிப்பட்ட திருமேனியை இழந்து உங்கள் காலில் விழும்படியான 'தீவினையேன் ஆயினேனே என்கின்றாள். எதிர்மறை இலக்கணையால் 'நல்வினையேன்' என்பது குறிப்பு. பரமன் அடியார்களின் திருவடிகளில் வீழ்தல் நல்வினைப் பயனன்றோ? நான் விடு தூதாய் நீங்கள் திருமூழிக்களத்திற் கேகி அத்திருமேனியடிகளை நோக்கி, 'திருப்புளியடியிலே கிடக்கின்ற ஒருத்தி உம்முடைய திருமேனியில ஆசை வைத்து நைகின்றாள்; அவளுக்கு உமது திருமேனியைக் கொடுத்தருளுவீர்' என்று சொல்லுவீர்களாக" என்று குறையிரக்கின்றாள். இச் சொல்லுதவி புரியின், அவர்கள் புதிய பொலிவினைப் பெற்றுத் தெளிவிசும்புப் பேறும் பெறுவர் என்கின்றாள்.

மேலும் மேகத்தை நோக்கி இவ்வாறு பேசுகின்றாள்;

" தெளிவிசும்பு கடிதுஓடித்
  தீவிளைத்து மின்இலகும்
ஒளிமுகில்காள்; திருமூழிக்
  களத்துஉறையும் ஒண்சுடர்க்குத்
தெளிவிசும்பு திருநாடாத்
  தீவினையேன் மனத்து உறையும்
துளிவார்கள் குழலார்க்குஎன்
  தூதுஉரைத்தல் செப்புமினே"

இங்கு மேகங்களை ஆசாரியர்களாகக் கொள்ளல் வேண்டும். விண்ணில் விரைவாகச் சஞ்சரித்தலும் கொள்ளி வட்டம்போல் மின்னல் விளங்கப் பெறுதலும் முகில்களின் இயல்பு. ஆசாரியர்கட்கும் லீலா விபூதி நித்தியவிபூதி என்ற இடங்களில் சஞ்சரிக்க வல்லமையுண்டாதலால் 'தெளிவிசும்பு கடிதோடுகை அவர்கட்கும் பொருந்தும். நன்றாக மழைபொழியும் சமயத்தில் தான் மேகத்தில் மின்னல் தோன்றும். அங்ஙனமே சிறப்புப் பொருள்களை அருளும் நிலையில் ஆசாரியர்களும் இருப்பர். மேலும் மேகத்தை 'ஒளிமுகில்' என்று விளித்து எம்பெருமானையும் 'ஒண்சுடர்' என்று குறிப்பிட்டிருப்பதிலும் ஒரு தனிச் சிறப்பு உண்டு. ஆசாரியர்கள் எம்பெருமானினின்றும் வேறுபட்டவரல்லர் என்றும், இருவரும் எல்லாவற்றிலும் ஒப்புடையவர் என்றும் காட்டற்காகவே இங்ஙனம் கூறப் பெற்றதாகக் கொள்ள வேண்டும்.

பரமபதத்தில் காட்டும் பெருவிருப்பத்தை எம்பெருமான் தன்பக்கல் காட்டுவதாக ஆழ்வார் நாயகி கொள்வதால், 'தெளிவிசும்பு திருநாடாகத் தீவினையேன் மனத்துறையும்' என்று குறிப்பிடுகின்றாள். நெஞ்சில் எழுந்தருளியிருந்தும் அவனைக் கண்ணால் காண முடியவில்லையே என்று நைகின்றாள். துன்புறுபவர்களைக் காப்பதற்கென்று திருமூழியில் தனிமாலையிட்டிருக்கும் எம்பெருமானுக்குத் தன் விண்ணப்பத்தைத் தெரிவிக்குமாறு வேண்டுகின்றாள். ஈண்டு ஆறாயிரப் படியின் அருளிச் செயல் சுவைமிக்கது! "அவளுக்கு அருளீர் என்ன அமையுமா? இன்னாருக்கு அருளீர் என்ன வேண்டாவோ என்னில், யாவள் ஒருத்தியுடைய நெஞ்சை உமக்குத் திருநாடாகக் கொண்டு நீர் உறைகின்றீரோ, அவளுக்கு அருளீர் என்று சொல்லிக்கொள் என்கின்றாள்" என்பதை எண்ணி எண்ணி மகிழ்வோமாக.

சீதாப்பிராட்டியை ஆயிரக்கணக்கான வானரங்கள் தேடுவதைப் போலவே, கண்ணில் கண்டவற்றை எல்லாம் ஏவுகின்றாள் ஆழ்வார் நாயகி, அனுப்பப் பெற்ற சில பறவைகள் தன் காரியத்தைத் தலைக்கட்டும் என்று பொறுக்கக்கூடிய நிலையிலில்லை அவள். அடுத்துச் சில வண்டுகளைப் பார்த்து,

" தூதுரைத்தல் செப்புமின்கள்
    தூமொழிவாய் வண்டினங்காள்"

என்று வேண்டுகின்றாள். அவள் விரும்பாராகிலும் வண்டுகளின் பேச்சு இனிமையாக இருப்பதால் வரவேற்கப் பெறும் என்பதாகக் குறிப்பிடுகின்றாள். இனிய பேச்சினால் எம்பெருமானையும் வசப்படுத்திக் கொள்ள வல்லவர்கள் ஆசாரியர்கள் என்பது குறிப்பு வண்டுகள் செல்லக் கூடிய இடமோ 'போது இரைத்து மது நுகரும் பொழில்' சூழ்ந்துள்ள திருமூழிக்களம் ஆகும். மலர்கள் பூத்து மண்டிக் கிடக்கும் சோலைகளாதலால் வண்டுகள் மகிழ்ச்சி பொங்க மதுபானமும் பண்ணலாம் படியான இடம் என்பதையும் குறிப்பிடுகின்றாள்.

" மாதரைத்தம் மார்பகத்தே
  வைத்தார்க்கு என்வாய்மாற்றம்
தூதுஉரைத்தல் செப்புதிரேல்
  சுடர்வளையும் கலையுமே "

வண்டுகள் செய்தியைச் சொல்லுமளவு வேண்டப்படுவது! அவற்றின் சொற்களைக் கேட்டுக் கொண்டிருக்கவும், கேட்டுப் பாராட்டுவதற்கு அருகே பெரிய பிராட்டி இருப்பதால், பரிந்துரைத்தலுக்கும் (புருஷகாரம்) குறைவில்லை என்கின்றாள். உலக அன்னையாகிய பெரிய பிராட்டியார் சீவான்மாக்களின் துன்பத்தை எடுத்துரைத்து எம்பெருமானின் கருணை வெள்ளமிட்டோடக் காரணமாக இருப்பாள் என்பது வைணவக் கொள்கை. "என்ன சொல்ல வேண்டும் தெரியுமோ? என்னுடைய கைவளையும் சேலையும் பற்றிச் சொல்லுவீர்களாக" என்று பணிக்கின்றாள். அவை இரண்டும் தளர்ச்சியுற்றமையைக் கூற வேண்டும் என்பதாகவும் கொள்ளலாம்; அல்லது இவை தன்னுடையவையாகும் என்பதாகவும் கொள்ளலாம். அறிவித்த அளவிலே அவர் வரவு தப்பாது என்பது குறிப்பு,

அடுத்து, இன்னொலி செய்துகொண்டு பறக்கும் வண்டினங்களையும் தும்பிகளையும் பார்த்துப் பேசுகின்றாள், அவையோ அவள் இருக்கும் சோலையில் வயிறார மதுநுகர்ந்து மகிழ்ச்சி பொங்கிய நிலையிலுள்ளவை. அவரோ தம் அழகுக்கு ஆபத்து நேராத வண்ணம் திண்ணிதான மதில் சூழ்ந்த திருமூழிக்களத்

தில் உள்ளார்; காப்பதற்கென்றே தனி மாலையிட்டுக் கொண்டு இருக்கின்றார். அவருடைய காயாம்பூ மேனி யின் வடிவழகில் தனக்குள்ள விருப்பத்தைச் சொல்லு மாறு பணிக்கின்றாள். இவ்விடத்தில் ஆறாயிரப்படி அருளிச் செயல்; "வண்டினங்காள்; தும்பிகாள்; உன் அழகைக் காணப்பெறாதே அவள் இழந்துபோம். இத்தனையோவென்று சொல்லிக்கோள் என்கிறாள்" என்பதாக.

இங்ஙனம் வண்டினங்களுடன் உரையாடிக் கொண் டிருக்கும்பொழுது குருகினங்கள் அடங்கிய பறவைக் கூட்டம் ஒன்று வருகின்றது, அவற்றைப் பார்த்துப் பேசத் தொடங்குகின்றாள் பராங்குச நாயகி.

'ஒருநாள் ஓர் தூயமாற்றம்
படர்பொழில்வாய்க் குருகினங்காள்;
எனக்கொன்று பணியீரே"

என்று தனக்காகத் தூது போய் வரும்படி வேண்டு கின்றாள். யாரிடம் போய் வரவேண்டும் என்பதைக் குறிப்பிடுங்கால்,

"சுடர்வளையும் கலையுங்கொண்டு
அருவினையேன் தோள்துறந்த
படர்புகழாள்"

என்கின்றாள். தன்னுடைய வளையலையும் சேலையை யும் கவர்ந்து கொண்டு சென்றவர் அவர். ஆதரித்து வந்து தன்னைக் கலந்தவர் தன்னைவிட்டு போகும்படி யான பாபத்தைப் பண்ணினவள் என்பதை 'அருவினையேன்' என்று குறிப்பிடுகின்றாள். அவ ருடைய புகழோ சொல்லி முடியாது; பரந்த புகழை யுடையவர், அங்ஙனம் கவர்ந்து சென்றவர் கண்காணு இடத்திற்கு ஓடிவிடவும் இல்லை

"திருமூழிக்
களத்துறையும் பங்கயக்கண்
சுடர்ப்பவள வாயன்"

அவர் அண்மையிலேயே, திருமூழிக் களத்தில் நித்தியவாசம் செய்கின்றார் என்பதையும் குறிப்பிடு கின்றாள். அவரது நோக்கையும் முறுவலையும் அனுபவித்தவள் எங்ஙனம் ஆற்றியிருக்க முடியும் என் பதனை எடுத்துக் கூற வேண்டும் என்பது குறிப்பு.

சிறிது நேரத்தில் ஆழ்வார்நாயகி சில அன்னங் களைப் பார்க்க நேரிடுகின்றது. அவற்றைப் பார்த்து வேண்டுகின்றாள், அவருடைய பெருமைக்கு இங் ஙனம் ஒருத்தியைக் கலங்கவைப்பது தகுதியன்று என் பதை உணர்த்துமாறு செப்புகின்றாள்.

"தகவுஅன்று என்றுஉரையீர்கள்
தடம்புனல்வாய் இரைதேர்ந்து
மிகஇன்பம் படமேவும்
மெல்நடைய அன்னங்காள்!
மிகமேனி மெலிவுஎய்தி
மேகலையும் ஈடுஅழிந்துஎன்
அகமேனி ஒழியாமே
திருமூழிக் களத்தார்க்கே"

'தகவு அன்று என்று உரையீர்கள்' என்பன இதயத்தில் தைக்கும்படியான சொல் என்பது ஆழ்வார் நாயகியின் திருவுள்ளம்: எம்பெருமானது பிரிவினால் உடலும் மெலிந்து மேகலையும் தங்காதபடி சீர்குலைந் தது. இனி தன் 'அகமேனி' ஒழிவதற்கு முன் தன் நிலையைத் தெரிவிக்குமாறு அன்னங்களை வேண்டு கின்றாள். எல்லா ஆன்மாக்களும் எம்பெருமானுக்கு உடலாக இருப்பினும் (சரீர—சரீரிபாவனை) தன் ஆன்மாவை 'அகமேனி' என்று சிறப்பிக்கின்றார் ஆழ்வார். இவ்வுலகில் எம்பெருமானுக்குக் கிடைத் தற்கரிய 'மகாத்மா' அன்றோ ஆழ்வார்? ஈண்டு ஆசாரியர்களே அன்னமாக விளக்கப் பெறுகின்றனர் என்பது அறியத்தக்கது. தங்கட்குப் பேரின்பம் பயக்கும் நுண்பொருள்களைத் தேடுவதில் நோக்கியவர் களாதலாலும், நல்ல நடத்தையையுடையவர்களா யிருத்தலாலும் அவர்கள் 'மென்னடைய அன்னங் கள்' எனப்பட்டனர்.

இங்ஙனம் ஆழ்வார் பிராட்டியின் தன்மையை ஏறிட்டுக் கொண்டு பேசிய அநுபவத்தை நினைந்த வண்ணம் திருமூழிக்களத்தில் கிழக்கு நோக்கிய வண்ணம் மதுரவேணி நாச்சியாருடன் சேவை சாதிக் கும் திருமூழிக்களத்தானை வணங்கிக் களிக்கின்றோம்; நம்மாழ்வார் பெற்ற அனுபவத்தையும் பெறமுயலுகின் றோம், நம்மாழ்வார் அநுபவமே சீதாப்பிராட்டியார் பெற்ற அநுபவமாகும். இதை ஆழ்வாரே.

"ஒழிவின்றித் திருமூழிக்
களத்துஉறையும் ஒண்சுடரை
ஒழிவில்லா அணிமழலைக்
கிளிமொழியாள் அலற்றியசொல்"

என்று குறிப்பிடுவதைக் காணலாம். இதனையொட் டியே ஆறாயிரப்படி அருளிச்செயலும் 'எம்பெருமானைப் பிரியில் தரிக்கமாட்டாத ஸ்வபாவையாயிருப்பாளொரு பிராட்டி அவனைப் பிரிந்து அலற்றின பாசுரத்தாலே. தத்ஸத்ருசஸ்வபாவரான (பிராட்டிக்குச் சமமான இயல்புடைய) வண்குருகூர்ச் சடகோபன் எம்பெரு- மானைப் பிரிந்தலற்றிய இப்பத்து" என்று குறிப்பிடு கின்றது. இராமர், கிருஷ்ணர் முதலாய அவதாரங்கள் எடுத்த பிறகு இறுதியில் தன் சோதிக்கு எழுந்தருளும் நிலை ஏற்படுகின்றது; அர்ச்சாவதாரம் அப்படியின்றி, 'சம்சாரத்தின் கிழங்கு எடுத்தாலல்லது பேரேன்' என்றிருக்கும் இருப்பையாதலால் 'ஒழிவின்றி உறை யும்' என்று சிறப்பிக்கின்றார். இந்தப் பத்துப் பாசுரங் களையும் எம்பெருமான் சந்நிதியிலேயே ஓதி 'நோயாளுக்குமே' என்று கூறியவாறு சம்சாரமாகிய நோயினைத் தீர்க்கும் உணர்வினைப் பெறுகின்றோம். பெறவே,

"காண்கின்ற ஐம்பூதங்
கட்டும்இரு சுடர்க்கும்
சேண்கலந்த இந்திரற்கும்,
தேவர்க்கும், மாண்கரிய
பாழிக் களத்தார்க்கும்
பங்கயத்து நான்முகற்கும்
மூழிக்களத்தான் முதல்"

என்ற பிள்ளைப்பெருமாள் அய்யங்காரின் பாசுரமும் நம் நினைவிற்கு வருகின்றது. அந்த நினைவுடன், 'மூழிக்களத்தானே முதற்கடவுள்' என்ற எண்ணத் துடன், மனநிறைவு பெற்று நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

திருச்சிராப்பள்ளி

அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயில்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

" திருச்சி ராப்பள்ளி என்றலும் தீவினை
நரிச்சி ராது நடக்கும் நடக்குமே"

—திருநாவுக்கரசர்.

முன்னுரை:

திருச்சிராப்பள்ளி, காவிரிக்குத் தென்கரையில் உள்ள, தேவாரப் பாடல் பெற்ற சிவத்தலங்களில் ஒன்று. தென்னிந்திய இருப்புப் பாதையின் முதன்மை மிக்க சந்திப்பு, திருச்சிராப்பள்ளியேயாகும். இது தமிழகத்தின் நடுவணதாக அமைந்து, சிறப்பும் செழிப்பும் மிக்க ஒரு பெருநகரமாக விளங்கி வருகின்றது. திருவரங்கம், திருவானைக்கா என்னும் புகழ்பெற்ற இருபெருங் கோயில்கள், திருச்சிராப்பள்ளிக்கு மிகவும் அண்மையில் உள்ளன.

தலத்தின் தொன்மை :

இத்தலமானது, சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மிகவும் புகழ் பெற்றுத் திகழ்ந்திருந்தது. 'ஊர் எனப்படுவது உறையூர்" என்னும் நிலையில் மிகவும் புகழோங்கிப் பிறங்கிய உறையூர் நகரம், பண்டைக் காலத்தில் சோழர்களின் தலைநகரங்களுள் ஒன்றாக இருந்து வந்தது. "உலகில் வளர் அணிக்கெல்லாம் உள் உறை ஊர் ஆம் உறையூர்" என்று சேக்கிழார் பெருமான் இதனைச் சிறந்தெடுத்துப் புகழ்ந்து பாடியிருக்கின்றார்.

(1) "நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன்
ஓடாப் பூட்கை உறந்தை..."

—சிறுபாணாற்றுப்படை.

(2) "பிறங்குநிலை மாடத்து உறந்தை"

—பட்டினப்பாலை.

(3) "வளங்கெழு சோழர் உறந்தைப் பெருந்துறை"

—குறுந்தொகை.

(4) "அறம்துஞ்சு உறந்தை"

—புறநானூறு,58.

(5) "மறங்கெழு சோழர் உறந்தை"

—புறம்36

(6) "ஆரங் கண்ணி ஆடுபோர்ச் சோழர்
அறங்கெழு நல்லவை உறந்தை"

—அகம் 39.

(7) "மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து
அறங்கெட அறியாது அல்கும்"

—நற்றிணை.

என்றெல்லாம் பலவகைகளில் சங்க நூல்கள், உறையூரின் ஒப்புயர்வற்ற சிறப்பினைப் புகழ்ந்துரைக்கின்றன. உறையூர் இளம்பொன் வணிகனார், உறையூர் ஏணிச்சேரி மோசியார், உறையூர் மருத்துவன் தாமோதரனார், உறையூர் முதுகண்ணன் சாத்தனார், உறையூர் முதுதத்தனார், முதலிய சங்ககாலப் புலவர்கள், இந்நகரத்தில் தோன்றி வாழ்ந்திருந்தவர்கள் எனத் தெரிகின்றது.

உறையூரின் மண்வளத்தினால், முன் ஒருகாலத்தில் ஒரு சிறிய சேவற் கோழியானது, மிகப் பெரிய யானையினை எதிர்த்து நின்று போரிட்டு வென்று கொன்றது. அதனால் உறையூர்க்குக் "கோழி" என்ற காரணப் பெயர் ஒன்று ஏற்பட்டு வழங்குவதாயிற்று. இதனை,

"முறஞ்செவி வாரணம் முன்சமம் முருக்கிய
புறஞ்செவி வாரணம்புக்கனர் புரிந்தென்"

எனவரும் சிலப்பதிகார வரிகள் உணர்த்துதல் காணலாம். (முறஞ்செவிவாரணம்-யானை. சமம்-போர். முருக்கிய-கொன்ற. புறஞ்சிறைவாரணம்-கோழி, உறையூர், திருச்சிராப்பள்ளி)

இத்தகைய சிறப்புமிக்க உறையூர் நகரத்தைத் தன்னுடைய ஒரு பகுதியாக உள்ளடக்கிக் கொண்டு, இன்றைய திருச்சிராப்பள்ளி நகரம் திகழ்கின்றது. குறுங்குடி மருதனார் என்னும் சங்ககாலப் புலவர், இதனை,

"கறங்கிசை விழாவின் உறந்தைக் குணாது
நெடும்பெருங் குன்றம்..."

என்று தாம் பாடிய அகநானூற்றுப் பாடல்(4) ஒன்றில், அழகுறக் குறிப்பிட்டுச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இப்பகுதிக்குப் பழைய உரையாசிரியர்,

"உறையூர்க் குணாது குன்றம் என்றது,
உறையூர்க்குக் கிழக்குப் பக்கத்தில் உள்ள
சிராப்பள்ளி மலை"

என்று பொருள் விளக்கம் செய்திருக்கின்றார். இதனால், இற்றைக்கு ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே திருச்சிராப்பள்ளி மலையும், அதனைச் சார்ந்துள்ள உறையூர் நகரமும், மிகவும் புகழோங்கிச் சிறந்து திகழ்ந்தமை தெளியப்பெறும். திருச்சிராப்பள்ளி என்பது, திரு சிரா மலை எனவும், சிராமலை எனவும்கூட வழங்கப்பெறும். திரிசிரன் என்னும் அரக்கன் ஒருவன் இருந்து அரசாண்டு, இறைவனைப் பூசித்துப் பேறு பெற்றமையினால், இத்தலத்திற்குத் திரிசிராமலை எனப் பெயரமைந்தது என்பர். இக்காரணம் பற்றியே, திரிசிராபள்ளி, திரிசிரபுரம், திரிசிரகிரி என்னும் பெயர்களும், இதற்கு அமைந்தன. சிரா என்னும் சமண முனிவர் ஒருவரின் பள்ளி (இருப்பிடம்) இம்மலைமேல் அமைந்திருந்ததனாலேயே, இம்மலைக்குச் சிராமலை, சிராப்பள்ளி எனப் பெயர்கள் வழங்குவன ஆயின என்றும், வரலாற்று ஆராய்ச்சியாளர் கூறுவது உண்டு.

"கழிந்தது நென்னற்றுக் கட்டுவிட்டு, நாறி
ஒழிந்தது உடல் இரா வண்ணம் ;—அழிந்தது
இராமல்ஐயா கொண்டுபோ என்னுமுன் நெஞ்சே
சிராமலையான் பாதமே சேர்"

—சிவத்தலத்திருவெண்பா,
ஐயடிகள்காடவர்கோன் நாயனார்,
பதினொன்றாம் திருமுறை.

"முலையுங் குழலும் முளைப்பதற்கு முன்னே
கலையும் வளையுங் கழன்ருள்—மலையிற்
சிராப்பளியா னேறிவருஞ் சேவின்மணி யோசைக்
கிராப்பளியுங் கொள்ளா ளிவள்" —தனிப்பாடல்

தலவரலாறுகள்

தட்சிண கைலாசம் :

ஒரு காலத்தில் ஆதிசேடனுக்கும் வாயுதேவனுக்கும் தம்மில் வலிமைமிக்கவர் யாவர் என்பது குறித்து, ஒரு பெரும் பூசல் நிகழ்ந்தது. அதுபோது ஆதிசேடன், "யான் திருக்கயிலாய மலையை, என்னுடைய ஆயிரம் தலைகளாலும் மூடி மறைத்துக் கொள்கின்றேன். உனக்கு ஆற்றல் இருந்தால், நீ சூருவளிக் காற்றினை வீசி, எங்ஙனமாவது என்னைப் பெயர்த்து எறிந்து, திருக்கயிலாய மலையின் ஒருசில சிகரங்களையாவது சிதைத்துச் சிதறச்செய்து காட்டுக" என்ருன். அவ்வறைகூவலை ஏற்றுக்கொண்ட வாயுதேவன், தன் ஆற்றல் முழுவதையுட திரட்டிச் சூருவளிக்காற்றினை மிகக் கடுமையாக விசி, ஆதிசேடனைப் பெயர்த்தெறிய நெடுநேரம் மிகவும் முயன்ருன், இறுதியில் அவனுடைய வலிமைமிக்க சூருவளிக்காற்றின் வேகத்தைத் தாங்கொணுத ஆதிசேடன், சிறிதே தன் தலைகளில் ஒன்றைத் தூக்கிப் பெயர்த்து நெளிந்தான். அந்நிலையில் வாயுதேவனின் வலிமைமிக்க சூருவளி வீச்சினுல், திருக்கயிலாய மலையின் சிகரங்கள் மூன்று சிதைந்து சிதறின. அங்ஙனம் சிதைந்து சிதறிய திருக்கயிலாய மலையின் மூன்று சிகரங்களே, திருக்காளத்திமலை, திருச்சிராப்பள்ளிமலை, திருக்கோணமலை என இன்று வழங்கி வருகின்றன. ஆதலின் இது தென்கயிலை, தட்சிண கயிலாசம் எனப் போற்றப்படும் என்பது தலவரலாறு. இம்மலை 273 அடி உயரமும், 477 படிக்கட்டுகளும் கொண்டதாக விளங்குகின்றது.

தாயாக வந்த தயாளர் :

சோழநாட்டில், காவிரி கடலோடு சேருவதும், பல வளங்களும் நிறைந்து சோழர்களுக்குத் தலைநகரமாய் விளங்கியதும், இயற்பகைநாயனுரும், பட்டினத்தடிகளும் அவதரிப்பதற்குக் காரணமாய் இருந்ததுமாகிய காவிரிப்பூம்பட்டினம் என்னும் ஓர் ஊர் உண்டு. இது புகார் எனவும் வழங்கும். இந்தப் பதியில் வணிகர் குலத்தில் பெருங்குடியில் பிறந்த இரத்தின குப்தன் என்பவன், தன் கற்புடைய மனைவியோடு இல்லறம் நடத்திவருங்கால், புத்திரப் பேறின்றி இறைவனை வழிபட்டு வந்தான். இறைவன் திருவருளால் ஓர் புதல்வியைப் பெற்றெடுத்து அவளுக்கு இரத்தினுவதி என்னும் பெயரிட்டு வளர்த்து வந்தான். இரத்தினுவதி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்துவந்து, மணப்பருவத்தை அடைந்தாள். இரத்தினகுப்தன் இரத்தினுவதியைத் திரிசிராமலையில் வாழும் தனகுப்தன் என்னும் வணிகனுக்குத் தனது இல்லத்திலேயே மணம்செய்து கொடுத்துப் பல சீர்வரிசைகளுடன் ஊருக்கு அனுப்பி வைத்தான். திரிச்சிரா மலைக்கு வந்த நாள் முதல், இரத்தினுவதி திரிசிராமலைப் பெருமான் திருக்கோயிலை நாள்தோறும் அன்புடன் வழிபட்டு வரலாயினுள். அதனுல் அப்பெருமானின் அருளினுல் அவள் கருப்பவதி ஆகிப் பேறுகாலம் எய்தினுள்.

இச்செய்தியை, அவள் காவிரிப்பூம்பட்டினத்தில் உள்ள தன் தாய்க்குத் தெரிவித்தாள். தாயும் மகளுக்கு வேண்டிய மருந்து எண்ணெய் முதலியவைகளுடன் புறப்பட்டு வரும்போது, காவிரியாற்றில் வெள்ளப் பெருக்கு மிகுதியாகி, அவளை வரமுடியாதபடி தடுத்துவிட்டது. மகளும் "தாய் இன்று வருவாள்; நாளை வருவாள்; நமக்கு வேண்டிய பொருள்களையெல்லாம் எடுத்து வருவாள்" என்று எண்ணிக்கொண்டிருந்தாள். கருவுயிர்க்கும் காலம் நெருங்கியும் தாய் வரவில்லை. அதனுல் இரத்தினுவதி, மிகவும் வருந்தித் தான் வழிபட்டுவந்த சிராமலைச் செவ்வந்திநாதரை நினைத்துத் துதித்தாள். அவளது அன்பிற்கு இரங்கிய சிவபெருமான், அவளது தாயின் வடிவங்கொண்டு, பிரசவ வேதனையால் வருந்திக் கொண்டிருந்த அவளது வீட்டிற்கு வந்து சேர்ந்தார். இரத்தினுவதி தன் தாயே, இறைவனின் அருளால் உற்ற நேரத்தில் வந்து சேர்ந்ததாக எண்ணி மகிழ்ந்தாள். தாயின் வடிவத்தில் வந்த சிவபெருமானும், இரத்தினுவதிக்கு அவளது தாய் செய்யத்தக்க மருத்துவங்களையெல்லாம் செவ்விதிற் செய்தார். இரத்தினுவதி சுகமாகப் பிரசவித்தாள். அழகிய ஓர் ஆண் குழந்தை பிறந்தது. தாயாக வந்தவர் சிலநாள் தங்கிக் குழந்தையையும் தாயையும் பாதுகாத்து வந்தார் இது இவ்வாருக, வெள்ளம் வடிந்தவுடன் உண்மைத்தாய் நதியைக் கடந்து இரத்தினுவதியின் வீட்டிற்கு வந்தாள். இரத்தினுவதியும் கண்டாள்; திகைத்தாள். இரு தாயருள் எவர் உண்மைத்தாய் என்று ஐயுற்றுச் சிந்தித்து வியந்தாள். தாயாக வந்த சிவபெருமான், உடனே மறைந்து ஆகாயத்தில் இடபவாகனத்தில் காட்சி கொடுத்தார். எல்லோரும் தரிசித்து இன்புற்ருர்கள். அன்றுமுதல் செவ்வந்திநாதருக்குத் தாயுமானவர் என்ற பெயர் உண்டாயிற்று இரத்தினுவதியும் பெருமானை வழிபட்டதால் அடியார்களுள் ஒருத்தியாக இன்றும் விளங்குகின்ருள். (இவ்வரலாறு கோயில் பிரம உற்சவத்தின் 5 ஆம் நாள் திருவிழாவன்று சிறப்பாக நடைபெறுகிறது), இத்தல வரலாற்றையுணர்த்தும் அழகிய ஓவியங்கள் பல இக்கோயிற் சுவரில் வரையப்பட்டுள்ளன.

இரத்தினுவதியின்பொருட்டுச் சிவபெருமான் தாயாக வந்து மருத்துவம் செய்த இத்தல வரலாற்றைக் குறித்து, பின்வரும் கருத்தமைந்த பழைய செய்யுள் ஒன்று வழங்கி வருகின்றது; "திரிசிரபுரத்திலுள்ள பெருமைமிக்க ஈசர், செட்டி மகளுக்காக வேடம் தரித்து வந்து மருத்துவம் செய்கின்ற தாயாக ஆயினர் அம்மானை; வேடம் தரித்து வந்து மருத்துவம் செய்யும் தாயாக ஆயினர் என்ருல், மகப்பேற்றுக்காகத் தரப்பெறும் மருந்து எண்ணெயின் சிக்கு (நாற்றம்) அல்லாமல், அவர்க்கு நல்ல மணம் (வாசனை) ஏது? அம்மானை; மட்டுவார் குழல் (மணம் நிறைந்த கூந்தலையுடையவள் ஆகிய) அம்மை இடப்பாகத்தே இருக்க, அவருக்கோ மணம் (வாசனை திருமணம்) அரிது? அம்மானை" (மட்டு-மணம், வாசனை) என்று பெண்கள் இருவர் தம்முள் வினவியும், விடை கூறியும் பேசிக் கொள்ளும் முறையில் அவ்வழகிய பழைய பாடல் அமைந்திருக்கின்றது.

"சிரபுரநா ஈசர் செட்டிமகட் காவேடம்
தரித்து மருத்துவம்செய் தாயானுர் அம்மானை;
தரித்து மருத்துவஞ்செய் தாய்ஆனுர் ஆமாயின்
மருத்தெண்ணெய்ச் சிக்கின்றி மணம்இவர்க்குஏது அம்மானை;
மட்டுவார் குழல்இருக்க மணம்அரிதோ? அம்மானை —தனிப்பாடல்

உச்சிப்பிள்ளையார் :

திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள திருவரங்கம் பெரியகோயிலின் விமானம், பிரமதேவனின் தவநலத்தால் திருப்பாற்கடலினின்று வெளிப்பட்டுத் தோன்றியதாகும். அதனைப் பிரமதேவர் தேவர் உலகில் நெடுங்காலம் பூசித்துவந்தார். திருவரங்கநாதருக்கு நித்திய பூசை புரிந்து வரும்படி, பிரமதேவர் சூரியனை நியமித்தார். பின்னர்ச் சூரியகுலத்தில் தோன்றிய இட்சுவாகு அரசன், இவ்விமானத்தினைத் தேவலோகத்தினின்று தனது தலைநகரமாகிய அயோத்திக்கு வழிபடக் கொண்டுவந்தான். இந்த இட்சுவாகு அரசனின் குலத்தில் திருமாலின் அவதாரமாகத் தோன்றிய இராமபிரான், இவ்விமானத்தினை இலங்கையினின்று தனது முடிசூட்டு விழாவைக் காண வந்திருந்த விபீடணனுக்கு அன்புடன் அளித்தார். இதனை அவன் மிக்க பக்தியுடன் தனது தலையின்மேல் இலங்கைக்கு எடுத்துச் சென்றான். அயோத்தியினின்று தெற்கு நோக்கி இலங்கைக்குச் செல்லும் வழியில், அவன் நம் தமிழகத்தில் சோழநாட்டிற் பாயும் கங்கையிற் புனிதமான காவிரியாற்றின் கரையை அடைந்தான். அப்போது அவன் மிகவும் களைப்புற்று இருந்தான். அதனால் அங்கே சிறிது நேரம் தங்கி இளைப்பாறிச் செல்ல நினைத்தான். ஆயினும் தன் தலையின்மீது வைத்திருந்த திருவரங்க விமானத்தைக் கீழே தரையில் இறக்கி வைப்பதற்கு அவன் மனம் இசையவில்லை. அதனால் என்ன செய்வதென்று நினைத்துச் சிறிது நேரம் தயங்கி நின்றான்,

அப்போது விநாயகப் பெருமான், ஓர் அந்தண இளைஞனாக வடிவங்கொண்டு வந்து, அவன் எதிரில் நின்றார், அவர்தம் தோற்றப் பொலிவைக் கண்ட விபீடணன், அவரை அழைத்து " இதனைச் சிறிதுநேரம் வைத்துக்கொண்டிரு : யான் விரைவில் வாங்கிக்கொள்கின்றேன் " என்று, அன்புடன் வேண்டிக் கொண்டான். அந்தண இளைஞனாக வந்த விநாயகரும், விபீடணனிடமிருந்து அத்திருவரங்க விமானத்தை வாங்கிச் சிறிதுநேரம் வைத்துக்கொண்டிருந்துவிட்டு, அதனைத் தம்மால் மேலும் சிறிதுநேரம் வைத்துக் கொள்ள இயலவில்லை என்று, காவிரிக்கும் கொள்ளிடத்திற்கும் நடுவே உள்ள திருவரங்கம் என்னும் புனித இடத்தில் வைத்து, மறைந்துவிட்டார்.

விபீடணன் அந்தணச் சிறுவன் மறைந்து விட்டதையும், திருவரங்க விமானம் தரையில் வைக்கப்பெற்றிருப்பதையும் கண்டு, மிகவும் மனம் வருந்தினான். அதனைத் தரையில் இருந்து எடுப்பதற்கு எவ்வளவோ முயன்று பார்த்தான். அவனால் எடுக்க முடியாதபடி, அஃது அங்கேயே அழுந்திப் பதிந்து நிலைகொண்டு விட்டது. அதுகண்டு. அவன் கலங்கிக் கவலையுற்று மிகவும் கதறி அழுதான். திருவரங்கநாதர் அவனைத் தேற்றித் தாம் காவிரிக்கரையிலேயே தங்கியிருக்க விரும்புவதாகவும், அங்ஙனம் தங்கினாலும் தம்மிடம் அன்பு மிகக்கொண்ட அவனுக்கு அருள்செய்துவரும் பொருட்டுத் தாம் என்றும் " தென்திசை இலங்கை நோக்கிப் " பள்ளி கொண்டருளுவதாகவும் உறுதி மொழிந்தார். விபீடணனும் வேறு வழியின்றி இலங்கைக்குத் திரும்பிச் சென்றான். ஆயினும் அவன் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை திருவரங்கம் போந்து, பெருமாளை வழிபட்டுச் செல்கின்றான் என்பது வரலாறு.

இங்ஙனம் திருவரங்க விமானத்தைக் காவிரிக்கும் கொள்ளிடத்திற்கும் இடையே உள்ள ஆற்றிடைக் குறையில் வைத்துவிட்டு மறைந்த விநாயகர், திருச்சிராப்பள்ளி மலை உச்சியில் ஏறி அமர்ந்துகொண்டு, தம்மை வழிபடும் அடியார்களுக்கு அருள்புரிந்து வருகின்றார். ஆதலின் அவருக்கு உச்சிப்பிள்ளையார் என்ற காரணப்பெயர் ஏற்பட்டது. இங்குக் கோயிலில் செவ்வந்தி விநாயகர் என்றும், மலையின்கீழே அடிவாரத்தில் மாணிக்கவிநாயகர் என்றும், வேறு இரு விநாயகர் சந்நிதிகளும் சிறப்புற அமைந்துள்ளன.

மூர்த்திகள் :

இங்கு இறைவன் மலைமேல் எழுந்தருளியிருத்தலின், திருமலைக்கொழுந்து எனவும் ; கருவுற்றிருந்த வணிகப் பெண்ணிற்குத் தாயாக வந்து மருத்துவம் புரிந்தமையின், தாயுமானவர்-தாயான செல்வர்-மாத்ருபூதேஸ்வரர் எனவும் ; சாரமாமுனிவரால் செவ்வந்திப்பூக்கள் கொண்டு பூசிக்கப்பெற்றதனால் செவ்வந்தி நாதர் எனவும் ; பெயர் பெற்று விளங்குகின்றார். இங்குள்ள அம்பிகையின் பெயர் மட்டுவார் குழலம்மை என்றும், சுகந்த குந்தளாம்பிகை என்றும் வழங்கும்.

' மட்டுவார் குழலா ளொடு மால்விடை
இட்ட மாவுகந் தேறு மிறைவனார்
கட்டு நீத்தவர்க் கின்னருளே செயும்
சிட்டர் போலுஞ் திருச்சிராப்பள்ளிச் செல்வரே "

வழிபட்டு அருள்பெற்றோர் :

இத்தலத்திலுள்ள சிவபெருமானை வழிபட்டு, அகத்தியர், அருச்சுனன், அனுமான், இந்திரன். இராமன், உமாதேவியார், சப்தகன்னியர், சப்த ரிஷிகள், சாரணர்கள், சாரமாமுனிவர், சூராதித்த சோழன், திரிசிரன், பிரமதேவன், ஜடாயு முதலியோர் அருள் பெற்றனர். அனுமான் பூசித்ததற்கு அறிகுறியாக அனுமக்கொடியும், அனும முத்திரையும், இக்கோயிலுக்கு உரியனவாக, இன்றும் இருந்து வருகின்றன. நந்தி கோயிலும், ஆஞ்சநேயர் கோயிலும், இதன் துணைக் கோயிலாக விளங்குகின்றன. இத்தலத்தில் வேதாந்த சித்தாந்த சமரச ஞானவித்தகச் சான்றோராகிய தாயுமான சுவாமிகள் (கி.பி. 1705-1742) வாழ்ந்திருந்தார். அண்மைக் காலத்தில் பெரும் புகழ்பெற்று விளங்கியிருந்து எத்தனையோ பல தலபுராணங்களையும், அரிய பிரபந்தங்களையும் இயற்றிப் பாடியருளிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் (கி.பி 1815—1877), இத்தலத்திலேயே அவதரித்தவராவர்.

தீர்த்தங்கள் :

இத்தலத்துக்குரிய தீர்த்தங்கள், காவிரி, சிவகங்கை பிரமதீர்த்தம், நன்றுடையான் தீர்த்தம், தீயதிலான் தீர்த்தம் முதலியனவாகும். இவற்றுள் பின் இரண்டு தீர்த்தங்களின் பெயர்களும் " நன்றுடையானைத் தீயதில்லானை " எனத் தொடங்கும் திருஞானசம்பந்தரின் தேவாரத் தொடரைப் பின்பற்றி அமைந்தனவாகும். இங்கே இப்போதுள்ள தேசியக் கல்லூரிக்கு அருகில், காவிரியம்மன் கோயில் உள்ளது. சின்னையா

பிள்ளை சத்திரத்திற்கு அருகில் ஓடத்துறைப் பிள்ளையார் கோயில் என ஒரு கோயில் உண்டு. முற்காலத்தில் காவிரியாறு அவ்விடத்துக்கு அருகில் ஓடியது, அதன் ஓடம்விடும் துறையில், இருந்தமையால், அவ் விநாயக ருக்கு ஓடத்துறைப் பிள்ளையார் எனப் பெயர் ஏற்பட்டது என்று மக்கள் கூறுகின்றனர்.

" குடகு காவிரி நீளலே சூடிய
தரிசிராமலே மேலுறை வீர "

என்று திருப்புகழில் உள்ள பகுதியால் காவிரியாறு முற்காலத்தில் சிராமலேக்கு அருகில் ஓடியதாகக் கருத இடமுண்டு.

தல இலக்கியங்கள் :

இத்தலத்திற்குத் திருஞான சம்பந்தர் குறிஞ்சிப் பண்ணில் அருளிச் செய்த தேவாரப் பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசர் அருளிச் செய்த திருக்குறுந்தொகைப் பதிகம் ஒன்றும் உள்ளன. இத்தலத்தில் வாழ்ந்திருந்த சமரச ஞானச் சான்றோராகிய தாயுமான சுவாமிகள் பாடிய சிரகிரித் தட்சிணாமூர்த்திப் பதிகமும், தனிப் பாடல்கள் பலவும், அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்ப் பாக்களும், இத்தலத்தைப் புகழ்ந்து கூறுகின்றன. சிராமலேக்கோவை முதலிய பிற்காலப் பிரபந்தங்கள் சிலவும் இத்தலத்திற்கு உண்டு. திரிசிரபுரம் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய யமகஅந்தாதி ஒன்றும், அவருடைய மாணக்கராகிய சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார் இயற்றிய சிலேடை வெண்பா ஒன்றும், மற்றும் பழைமையான பதிற்றுப்பத்தந்தாதிநூல் ஒன்றும், இத்தலத்திற்கு உள்ளன. மேலும் சைவ எல்லப்ப நாவலர் செவ்வந்திப்புராணம் என்னும் பெயரால் ஒரு தல புராணம் பாடியுள்ளார்.

மண்டபங்கள் :

இக்கோயிலில் வசந்தோற்சவத்திற்காகத் தளவாய் முதலியார் என்பவரால் கட்டப்பெற்ற பதினாறுகால் மண்டபம் ஒன்று உண்டு. அதற்குத் தளவாய் மண்டபம் என்று பெயர். திருமதிலில் தளவாய் முதலியாருடைய உருவம் செதுக்கப்பட்டுள்ளது, தளவாய் முதலியார் பெயரால் தளவாய்குளம் என்ற தீர்த்தம் இங்கு அமைந்துள்ளது. மற்றும் இப் பதினாறுகால் மண்டபத்திற்கு அருகே மணிமண்டபம் ஒன்றும் உள்ளது. 1918—ஆம் ஆண்டில் திரு, உலகநாதச் செட்டியார் என்பவரின் நன்கொடையால் இம் மண்டபம் அமைக்கப்பெற்றது. இதில் $2\frac{1}{2}$ டன் எடையும், 4 அடி 8 அங்குலம் நீளமும், 4 அடி 6 அங்குலம் அகலமும் உடைய மிகப்பெரிய மணி ஒன்று அமைக்கப் பெற்றுள்ளது. நாள்தோறும் காலையில் 4, 6, 10 மணிகளிலும், மாலையில் 6 மணியிலும், இரவு 10 மணியிலும், இப்பெரிய மணி ஒலிக்கப்பெறுகின்றது. அடிவாரத்திலிருந்து மலே உச்சிக்குச் செல்லும் இடைவெளியில் அழகிய நூற்றுக்கால் மண்டபம் ஒன்றும் இங்கு உள்ளது. இங்குச் சமயச் சொற்பொழிவுகளும், மற்றும் பல கலைநிகழ்ச்சியும் சிறப்புக் கூட்டங்களும் நடைபெறும். மற்றும் அதன் எதிர்ப்புறத்தே மௌன மடம் என்றும் ஒரு திருமடமும் உள்ளது. இம்மடத்தின் தலைவராக விளங்கியிருந்த மௌன சுவாமிகள் என்பவரே, தாயுமான சுவாமிகளை ஆட்கொண்டு ஞானோபதேசம் புரிந்தவராவார். அவர் திருமூலர் மரபில் வந்த சிறப்புடையவர். தாயுமான சுவாமிகள் இவரை 'மூலன் மரபில் வந்த மௌனகுருவே' என்று தமது மௌனகுரு வணக்கத்தில் பாடித் துதித்துள்ளார். இம்மௌனமடமும் அதனைச் சார்ந்த அறக் கட்டளைகள் பலவும் தருமபுர ஆதீனத்தின் அருளாட்சியில் மிகவும் சிறப்புற நல்ல முறையில் இருந்து வருகின்றன.

குடைவரைக் கோயில் :

திருச்சிராப்பள்ளி மலையின்மேல், உச்சிப்பிள்ளையார் கோயிலுக்குச் செல்லும் வழியின் இடையில், மகேந்திர வர்மன் அமைத்துள்ள குகைக்கோயில் தெற்குப் பார்த்த நிலையில் அமைந்துள்ளது. முன்மண்டபமும், அதற்குக் கருவறையும் அமைந்துள்ளன. மண்டபம் 30 அடி நீளம், 15 அடி அகலம், 9 அடி உயரம் உள்ளது. மண்டபத்தின் கிழக்குப்புறச் சுவரில் கருவறை மேற்குப் பார்த்தவண்ணம் அமைக்கப்பெற்றுள்ளது. இதன் அகலமும் நீளமும் 7 அடி 10 அங்குலம் உள்ள சதுரமாகவும், உயரம் 7 அடியாகவும் அமைந்துள்ளது இந்தக் கருவறையின் தரையில் 2 அடிச் சதுரமுள்ள குழி ஒன்று காணப்படுகிறது. இது, இங்கு முன்பு சிவலிங்கம் ஒன்று நிறுவப்பெற்றிருந்ததை உணர்த்தும். இதன் பக்கத்தில் ஓர் அடிச் சதுரம் உள்ள மற்றொரு குழி உள்ளது. இக்குழி, மகேந்திரவர்மனின் உருவம் அமைக்கப்பெற்றிருந்த இடமாகும். மகேந்திர வர்மன் சமண சமயத்தை விடுத்துச் சைவனாக மாறிச் சிவலிங்கத்தை வழிபடும் நிலையில் அவ்வுருவம் அமைக்கப்பெற்றிருந்ததாகத் தெரிகின்றது, மகேந்திர வர்மனின் உருவச் சிவலிங்கத்தின் அருகே பக்கத்தில் அமைந்திருந்ததாக அங்குள்ள கல்வெட்டுக்கள் கூறுகின்றன ஆனால் இப்போது அங்குச் சிவலிங்கமோ, மகேந்திரவர்மனின் உருவமோ காணப்படவில்லை. கருவறையின் வாயிலில் இரண்டு துவாரபாலகரின் உருவங்கள் பாறையில் செதுக்கி அமைக்கப்பெற்றுள்ளன. ஒரு காலை ஊன்றி, இன்னொரு காலை மடக்கி நின்று, கதாயுதத்தைத் தரையில் ஊன்றி, அதன்மேல் இரண்டு கைகளையும் வைத்துக் கொண்டுள்ள நிலையில், துவாரபாலகரின் உருவங்கள் நிற்கின்றன.

கருவறையின் எதிரே உள்ள மேற்குப்புறப் பாறையின் மண்டபச்சுவரில், சுமார் 7 அடிச் சதுரத்தில் அழகுமிக்க கங்காதரமூர்த்தியின் உருவம் புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பெற்றிருக்கின்றது. இந்தச் சிற்பத்தில் நடுநாயகமாக விளங்குபவர் சிவபெருமான். குறள் உருவமுள்ள ஒரு பூதகணத்தின்மேல் தமது வலக் காலை வைத்து, இடக் காலைத் தரையில் ஊன்றி நிற்கிறார். அவருடைய கை இடுப்பில் ஊன்றி நிற்கிறது. வலக் கையில் ஒரு பாம்பைப் பிடித்திருக்கிறார். அப் பாம்பு படமெடுத்து ஆடுகிறது. மற்றொரு வலக் கையைத் தூக்கி விரல்களினாலே தமது சடாமுடியின் ஒரு புரியை அவிழ்த்துப் பிடித்திருக்கிறார். அந்தப் புரிசடையிலே ஆகாய கங்கை, ஒரு மகள் உருவமாக மேலிருந்து வந்து அமர்கிறாள். அவளுடைய செருக்கும் வேகமும் அடங்கிவிட்டன. மற்றோர் இடக் கையில் சிவபெருமான் ஏதையோ ஒரு பொருளை வைத்திருக்கிறார். இந்த இடது கைக்கு மேலே, கங்கைக்கு எதிர்ப் புறத்தில் ஓர் எலி காணப்படுகிறது.

சிவபெருமானுடைய காலடியின் இருபுறத்திலும் இரண்டிரண்டுபேர் தரையில் மண்டியிட்டு அமர்ந்து கையைத் தூக்கிச் சிவபெருமானைக் காட்டியவண்ணம் அவரைத் துதி செய்கிறார்கள். அதுபோலவே வேறு இரண்டுபேர், சிவபெருமானுக்கு இருபுறத்திலும் ஆகாயத்தில் பறந்தபடி தமது கையை உயர்த்தி அவரைப் போற்றுகிறார்கள். இவர்கள் தேவர்கள் போலும்.

வெள்ளப்பெருக்குடன் உலகத்தையழிக்க வேகமாக வந்த கங்கையின் ஆற்றலை அடக்கி, உலகத்தை அழிக்க விடாமல் தமது சடையின் ஒரு சிறு புரியில் ஏற்றுக்கொண்ட சிவபெருமானை, மனிதரும் தேவரும் புகழ்ந்து போற்றி வணங்குவதை, இந்தச் சிற்பம் விளக்குகின்றது.

சிவபெருமான் வலக் காலைப் பூதகணத்தின்மேல் வைத்துக், கையை இடுப்பிலேயூன்றி உடம்பைச் சற்றுச் சாய்த்து நிற்கும் எழிலும், தமது சடைமுடியிலிருந்து ஒரு புரியை மட்டும் எடுத்து அதை விரல்களால் பிடித்துக் கங்கையைத் தாங்கும் எளிமையும், ஆற்றலும், செருக்கு அடங்கிய கங்கையின் அமைதியும், தரையில் அமர்ந்தும்-வானத்தில் இருந்தும்-மக்களும் தேவரும் கடவுளை வாழ்த்தும் உருக்கமும், இந்தச் சிற்பத்தைக் காண்பவருடைய கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன,

கல்வெட்டுக்கள் :

திருச்சிராப்பள்ளி குகைக் கோயிலின்கண் மகேந்திர வர்மன் அமைத்துள்ள கல்வெட்டுக்கள், அவன் சமணனாக இருந்து சைவனாக மாறிய வரலாற்றுச் செய்தியை வலியுறுத்தி மெய்ப்பிப்பனவாக உள்ளன. அப்பகுதிகள் வருமாறு :—

(1) "விபச்ச ஒழுக்கத்தைவிட்டுத் திரும்பி இலிங்கத்தை வழிபடுகின்ற குணபரன் என்னும் அரசன் இந்த லிங்கமாகிய சிவபிரானை வழிபட்டு, உலகத்தில் நெடுங்காலம் வாழ்வானாக"

(2) "சோழநாட்டின் முடிபோல விளங்குகிறது இந்த மலை. இம்மலையின் முடியில் அமைந்து மணி போன்று இருக்கிறது இந்தக் (குகைக்) கோயில். மணியின் ஒளிபோன்று பிரகாசிக்கிறது சங்கரனுடைய (அருள்) ஒளி"

(3) "சத்திய சந்தனுடைய பருவுடப்பு கல்லில் செதுக்கியமைக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து அவனுக்கு அழியாப் புகழுடம்பு தோன்றியுள்ளது".

(4) இக்குகையின் வலப்புறத் தூண் ஒன்றில் வடமொழிச் சாசனம் எழுதப்பட்டுள்ளது. நான்கு செய்யுட்களாக அமைந்துள்ளது இந்தச் சாசனம். இச் சாசனத்தின் கருத்து இது :

(5) "மலைகளில்சிறந்ததான இந்த மலையின் உச்சியிலே, வியக்கத்தக்க இந்தக் கற்கோயிலிலே, குணபரன் என்னும் அரசன் கல்லினால் திருமேனி அமைத்து ஸ்தாணுவை ஸ்தாணுவாக்கி, அவனுடன் தன்னையும் உலகத்திலே அழியாப் பொருளாக்கிக் கொண்டான்". (ஸ்தாணு—சிவபெருமான்; அசைக்க இயலாத நெடுந்தூண்).

(6) கிரீசன் (மலையில் வாழ்பவன்) என்னும்பெயரை மெய்ப்பிக்கும் பொருட்டு, மலைமகள் கணவனாகிய கிரீசனுக்கு (சிவனுக்கு) சத்துருமல்லன் என்னும் மன்னன் இந்த மலைமேலே ஒரு கோயிலை அமைத்தான்".

(7) "தரையிலே அமைக்கப்பட்ட கோயிலிலே இருந்துகொண்டு, சோழர் காவிரி இவர்களின் பேராற்றலை நான் எவ்வாறு காணமுடியும் என்று அரன் (சிவன்) கேட்டபடியினாலே, தன்னுடைய நீதியான ஆட்சியினாலே மநுவை ஒத்த குணபர மன்னன், மேகங்கள் தவழ்கின்ற இந்த மலைக்கோவிலைச் சிவனுக்கு அமைத்துக் கொடுத்தான்".

(8) "தன் உள்ளத்திலே சிவபெருமானை எப்போதும் நிலைநிறுத்தியுள்ள புருஷோத்தமன், இந்த மலையிலே அரனுக்கு ஒப்பற்ற திருமேனியைக் கல்லினால் விருப்பத்தோடு அமைத்து மேன்மையான இந்த மலையை அழகுபடுத்தினான்".

(9) இக்குகையின் உட்புறத் தூண்களின்மேல் உள்ள தூலத்தில் எழுதப்பட்டுள்ள வடமொழிச் சாசனம் ஒரு செய்யுள் வடிவாக அமைந்திருக்கிறது. அதன் கருத்து இது :

"லலிதாங்குரன் என்னும் பல்லவ மன்னனால் அமைக்கப்பட்ட லலிதாங்குர பல்லவேஸ்வரக் கிருகம்",

(10) மேலே கண்ட சாசனங்களிலே குணபரன், சத்துருமல்லன், புருஷோத்தமன், லலிதாங்குரன் என்னும் பெயர்கள் கூறப்படுகின்றன. இப்பெயர்கள் மகேந்திரவர்மனுடைய சிறப்புப் பெயர்கள் ஆகும்,

இவ்வாறே மகேந்திரவர்மன் அமைத்த இக்குடைவரைக் கோயிலில் 104 செய்யுட்கள் கொண்ட கல்வெட்டு ஒன்று உள்ளது. அதன்கண் முதல் 102 செய்யுட்கள் ஒரு கலித்துறை அந்தாதி நூலாக உள்ளன. 103—ஆம் செய்யுள் கலித்துறையாகவும், 104—ஆம் செய்யுள் வெண்பாவாகவும் காணப்படுகின்றது. இந்நூல் வேம்பையர்கோன் நாராயணன் என்ற ஒருவரால் இயற்றப்பட்டதாகத் தெரிகின்றது.

மகேந்திரவர்மன் (கி.பி. 600—638).

திருச்சிராப்பள்ளி மலைக்கோயில், பல்லவப் பேரரசர்களில் தலைசிறந்தவனாக விளங்கியிருந்த மகேந்திர வர்மன் (கி.பி. 600—630) என்னும் அரசனோடு தொடர்புடையது. சைவ சமய ஆசிரியர்களுள் ஒருவராகிய திருநாவுக்கரசர் பெருமானும், மகேந்திரவர்மனும், ஒரே காலத்தில் விளங்கியிருந்தவர் ஆவர். திருநாவுக்கரசர் மகேந்திரவர்மனின், அரசவையிலேயே, சமண சமயத் தலைமைபூண்டு தருமசேனராக விளங்கியிருந்தார்.

திருவதிகை வீரட்டானேசுவரரின் திருவருளால், தம்முடைய சூலைநோய் தீர்ந்து, திருநாவுக்கரசர் சைவராக மாறியபோது, அவரை நீற்றறையிலிட்டும், அவர் மீது யானையை ஏவியும், அவருக்கு நஞ்சு ஊட்டியும், அவரைக் கற்றூணைப் பூட்டிக் கடலில் விடுத்தும், பலவகைகளில் துன்புறுத்தி நலிவு செய்து, அவற்றால் அவர்க்கு இடர்ப்பாடு ஏதும் விளையாமைகண்டு வியந்து,

அவர்தம் தெய்வத்தன்மை உணர்ந்து, மனம் திருந்திச் சைவனாகமாறித் திருவதிகையில் தன்பெயரால்; குணபர ஈச்சுரம் என்னும் கோயில் எடுப்பித்தவன், மகேந்திர வர்மன் என்னும் இந்த அரசனேயாவான்.

திருநாவுக்கரசரால் ஆட்கொள்ளப்பெற்று மனம் திருந்திச் சைவனாக மாறிய மகேந்திரவர்மனால், தமிழ் நாட்டிற்குப் பலதுறைகளிலும் விளைந்த நலன்களுக்கு அளவேயில்லை. மலைப்பாறைகளைக் குடைந்து குகைக் கோயில்களை உண்டாக்கும் புதிய முறையை முதன் முறையாகத் தமிழ்நாட்டில் ஏற்படுத்தியவன் மகேந்திர வர்மனே ஆவான். ஒரே கருங்கற்பாறையைக் குடைந்து, அதன்கண் அழகியதொரு மண்டபத்தை யும், கருவறைக் கோயிலையும் அமைக்கின்ற புதிய முறை, மகேந்திரவர்மனாலேயே முதன்முதல் தமிழகத் தில் ஏற்படுத்தப்பெற்றது. பிற்காலத்தில் கோயிற் கட்டிடக்கலை விரிவாக வளர்ச்சி அடைவதற்கு முதன் முதல் வழிவகுத்தவன் மகேந்திரவர்மனே ஆவான்,

மகேந்திரவர்மன் சிறந்த வீரன். ஒப்புயர்வற்ற வடமொழிப்புலவன், இசைக்கலையில் சிறந்த மேதை, சிற்பம், ஓவியம் முதலிய கலைகளில் பெரிதும் தேர்ச்சி மிக்கவன். திருச்சிராப்பள்ளி வல்லம் பல்லாவரம் மண்டகப்பட்டு, தளவானூர், மகேந்திரவாடி, மாமண்டூர், மேலச்சேரி, சித்தன்னவாசல், சீயமங் கலம், குரங்கணில்முட்டம் சிங்கவரம், திருக்கழுக் குன்றம், திருக்கோகர்ணம், மாமல்லபுரம் முதலிய இடங்களில் உள்ள சிறந்த குகைக் கோயில்களை அமைத்தவன், இம்மகேந்திரவர்மனே ஆவான்.

இவற்றுள் திருச்சிராப்பள்ளியில் மகேந்திரவர்மன் அமைத்த குகைக்கோயில், சிறப்பாகக் குறிப்பிடத்தக்க தாகும். திருச்சிராப்பள்ளி மலையில் இரண்டு குகைக் கோயில்கள் உள்ளன. இவ்விரண்டில் மேலேயிருப் பதே, மகேந்திரவர்மன் அமைத்த குகைக் கோயில்: கீழே உள்ள குகைக்கோயில், அவனது மகனாகிய மாமல்லன் என்னும் நரசிம்மவர்மனால் அமைக்கப் பெற்றதாகும்.

திருவருட்பா

திருவிளங்கச் சிவயோக சித்திஎலாம் விளங்கச்
சிவஞான நிலைவிளங்கச் சிவானுபவம் விளங்கத்
தெருவிளங்கு திருத்தில்லைத் திருச்சிற்றம் பலத்தே
திருக்கூத்து விளங்கஒளி சிறந்ததிரு விளக்கே
உருவிளங்க உயிர்விளங்க உணர்ச்சியது விளங்க
உலகமெலாம் விளங்கஅருள் உதவுபெருந் தாயாம்
மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்தொருபால் விளங்க
வயங்குமணிப் பொதுவிளங்க வளர்த்தசிவக் கொழுந்தே (1)

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்தபேர் ஒளியே
அன்புரு வாம்பர சிவமே. (2)

அகரநிலை விளங்குசத்தர் அனைவருக்கும் அவர்பால்
அமர்ந்தசத்தி மாரவர்கள் அனைவருக்கும் அவரால்
பகரவரும் அண்டவகை அனைத்தினுக்கும் பிண்டப்
பகுதிகள்அங் கனைத்தினுக்கும் பதங்கள்அனைத் தினுக்கும்
இகரமுறும் உயிர்எவைக்கும் கருவிகள்அங் கெவைக்கும்
எப்பொருட்கும் அனுபவங்கள் எவைக்கும்முத்தி எவைக்கும்
சிகரமுதல் சித்திவகை எவைக்கும்ஒளி வழங்கும்
திருச்சிற்றம் பலந்தனிலே தெய்வம்ஒன்றே கண்டீர். (3)

...அருட்திரு இராமலிங்க அடிகளார்

அம்பிகை வழிபாடு

ந. ரா. முருகவேள், M. A., M.O.L.

முன்னுரை :

அம்பிகை வழிபாடு அல்லது சக்தி வணக்கம் என்பது, மிகத் தொன்னெடுங் காலமாக, நம் இந்திய நாட்டில் இனிது நிகழ்ந்து வருகின்றது. மொகஞ்-சதாரோ, அரப்பா என்னும் இடங்களில் நிகழ்த்தப் பெற்ற அகழ்வாராய்ச்சிகளிற் கிடைத்த பல பொருள்களில், உலக அன்னையின் மண் சிலைகள் பலவும் காணப் படுகின்றன. ஆராய்ச்சியாளர்களின் கருத்தின்படி, சிந்துவெளி நாகரிக காலம், ஏறத்தாழக் கி.மு. 4000-ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று புலனாதலின், அம்பிகை வழிபாடு அதற்கும் முன்னரே நிலவி வந்த பழமையுடையது என்பது புலனாகும்.

தொல்பொருள் ஆராய்ச்சித்துறைப் பேரறிஞர் ஆகிய சர் ஜான் மார்ஷல் (Sir John Marshall) என்பவர் சிந்துவெளிப் பகுதியிற் கிடைத்த அன்னையின் சிலைகளைப்போலவே, பாரசீகம், ஏஜியன், எலம், மெசபட்டோமியா, டிரான்ஸ்காஸ்பியா, பாலஸ்தீனம், சைப்ரஸ், கிரீட், எகிப்து, துருக்கி முதலிய பல்வேறு பகுதிகளிற் கிடைத்த சிலைகளும் இருப்பதனால், அம்பிகை வழிபாடு மிகப் பழங்காலத்திலேயே பல நாடுகளிலும் பரவியிருத்தல் வேண்டும் என்று விளக்குகின்றார்.

வேத, இதிகாச உபநிடதங்கள் :

இருக்கு வேதத்தில் அம்மை வழிபாடு பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. அதன்கண் 'தேவிசூக்தம்' என்னும் ஒரு தனிப் பகுதியுள்ளது. உஷஸ், ராத்ரி, அதிதி, வாக், புரந்தி, திஷனா, ஈனா, வாருணி போன்ற பெண் தெய்வங்களின் பெயர்கள் பல, இருக்கு வேதத்தில் வருகின்றன. எனவே அன்னை வழிபாடு இருக்கு வேதத்திற்குப் புதியதோ, புறம்பானதோ அல்ல என்பதுடன், அதற்கும் மிக முற்பட்டதென்று உணரலாம்.

கேனோபநிடதம், பொன்நிறம் உடைய உமையம்மை பற்றிக் குறிப்பிடுகின்றது மகாபாரதம் அம்பிகையைக் கண்ணபிரானின் தங்கையாகவும், சிவபிரானின் மனைவியாகவும் சிறப்பிக்கின்றது, தேவிபாகவதம், தேவிமகாத்மியம், பிரமவைவர்த்த புராணம், ஸ்காந்த மகாபுராணம், பிரமாண்டபுராணம் முதலிய பல நூல்கள், அம்பிகை வழிபாட்டின் பெருமையினை விரித்துரைக்கின்றன.

ஐதரேய பிராம்மணம், காத்தியாயன சிரௌத சூத்திரம், தைத்திரியம் ஆரண்யகம் இருக்குசம்மிதை முதலியவற்றிலும், அம்பிகை வழிபாடு பற்றிய குறிப்புக்கள் அறியப்படுகின்றன.

பல நாடுகளில் :

அம்பிகை வழிபாடு அல்லது சக்தி வணக்கம் என்பது, நம் இந்தியநாட்டில் மட்டுமேயன்றி, உலகின் பல பகுதிகளிலும் பரவி இருந்ததெனத் தெரிகின்றது. நாகரிக மேம்பாட்டில் ஓங்கிச் சிறப்பும் பழமையும் மிக்குத் திகழ்ந்திருந்த எகிப்து நாட்டு மக்கள், முழுமுதற் கடவுளை ஒஸைரிஸ் (Osiris) என்னும் தந்தையாகவும், ஐஸிஸ் (Isis) என்னும் தாயாகவும் வழிபட்டு வந்தனர்.

சாலடியார் என்னும் பழம்பெரு மக்கட்பகுதியினரும், ஊர் (Ur) என்னும் தம்முடைய சிறந்த தலைநகரில், தாம் எழுப்பிய மாபெருங் கோயிலின் கண், ஒளிவடிவாக விளங்கும் கடவுளை ஸமஸ் (Samas) என்னும் பெயருடைய அப்பன் ஆகவும், இஸ்தர் (Istar) என்னும் பெயருடைய அம்பிகையாகவும் அமைத்து, வழிபாடு செய்து வந்தனர்.

சுமேரிய நாட்டு மக்கள், நம்மைப்போலவே அன்னை அல்லது தேவி வழிபாடு உடையவர்களாக விளங்கியிருந்தனர். சுமேரிய நாகரிகம், எகிப்திய நாகரிகத்திற்கும் காலத்தால் மிகப் பழமையானது.

சிந்துவெளியும் சுமேரியநாடும் :

இந்தியச் சிந்துவெளி மக்களிடையும், சுமேரிய நாட்டு மக்களிடையும் நிலவி வந்த அம்பிகை வழிபாட்டிற் பலதிற ஒப்புமைப் பண்புகள் இருந்தமை புலனாகின்றது.

(1) காளைமாடும் சிங்கமும் முறையே, சிவபிரானுக்கும் அம்மைக்கும் உரிய ஊர்தியாக நம்மாற் கொள்ளப் படுவது போன்று, சுமேரிய மக்களும் தம்முடைய ஆண் தெய்வத்திற்குக் காளைமாட்டையும், பெண் தெய்வத்திற்குச் சிங்கத்தையும் ஊர்தியாகக் கொண்டு வழிபட்டு வந்தனர்.

(2) சுமேரிய மக்களும் சிந்துவெளி மக்களும், அம்பிகையைப் போர்க்கு உரிய தெய்வமாகவே கருதிப் போற்றினர்.

(3) தேவியை நாம் 'பார்வதி' எனவும் 'மலைமகள்' எனவும் கூறுதற்கு ஏற்ப, சுமேரிய மக்களும் தமது பெண் தெய்வத்தை மலைநிலப் பகுதிக்கு உரிய தெய்வமாகவே கருதிப் போற்றினர். கன்னிமை நிலையிலும், மணந்த நிலையிலும் வைத்து வழிபட்டனர்.

(4) சுமேரிய நாட்டுப் பெண்தெய்வம் ஆகிய நானா (Nana) என்பதே, நானாதேவி எனப்படும் இந்தியப் பெயரில் இடம் பெற்றுள்ளது. இங்க்ளாஜ் (Hin-Glaj) என்னும் இடத்தில் நானாதேவிக்குப் புகழ்மிக்க கோயில் ஒன்று அமைந்திருப்பதும், ஈண்டு நாம் உணர்ந்து இன்புறுதற்குரியது.

(5) உமா என்னும் இந்தியச் சொல்லே, பாபிலோனில் உம்மா (Umma) என்றும், ஆர்க்கேடியாவில் உம்மி (Ummi) என்றும், சித்தியோவில் உம்மோ (Ummo) என்றும், மருவி வழங்கி வருவதாக அறிஞர்கள் (Dr. R.G. Hazra) கருதுகின்றனர்.

(6) அன்னை மரியாள் (Mary) சிறப்பைப் புகழ்ந்து கொண்டாடுவதன்மூலம் கிறித்துவ சமயமும், தாரா தேவியின் புகழைப் போற்றுவதன்மூலம் பௌத்த சமயமும்கூட, ஒருவகையில் தாய்மைத் தெய்வத்தின் தன்னிகரற்ற மாட்சிமையினை உடன்பட்டுத் தழுவிக் கொண்டுள்ளன எனலாம்.

சாக்தமதம் :

இந்து மதத்தின் ஒரு சிறந்த பகுதி, சாக்தமதம். சிவபிரானைப் போற்றும் சைவமும், விஷ்ணுவை வழிபடும் வைணவமும், கணபதியை வணங்கும் காணபத்தியமும், முருகனைப் பணியும் கௌமாரமும், சூரியனைத் துதிக்கும் சௌரமும் போலவே, சக்தியை வழுத்தும் சாக்தம் என்னும் சமயமும், நம் இந்தியதேசம் முழுவதும் பரவியுள்ளது. சாக்தசமயம் இடையிற் சில குறைபாடுகளை அடைந்ததாயினும், அஃது இந்து மதத்தின் ஆற்றல்மிக்க ஒரு பெருங்கூறு என்பதில், சிறிதும் ஐயமில்லை. ஒன்றோடு ஒன்று முரண்பட்டு நின்ற பிற கூறுகளின் வேற்றுமைகளைப் போக்கி, அவற்றைச் சாக்தமதம் ஒற்றுமைப்படுத்தி வைத்துள்ளது.

அம்பிகையைச் சிவபிரானுக்கு மனைவி, திருமாலுக்குத் தங்கை, கணபதி முருகனுக்குத் தாய் என்பதனால், பௌராணிக ஒற்றுமை ஏற்படுகின்றது. மேலும் சாக்தேய மதத்தினரின் அவிகார பரிணமவாதம், தார்க்கிகர்களின் ஆரம்பவாதம், சாங்கியர்களின் பரிணமவாதம், வேதாந்திகளின் விவர்த்தவாதம் ஆகியவற்றின் வேற்றுமைகளைப் போக்கி, ஒருமைப்பாடு உடையதாகச் செய்கின்றது. கபில முனிவரின் சாங்கியம், பதஞ்சலி முனிவரின் யோகம் எனும் இரு பெருந் தரிசனங்களையும், ஒருங்கே இணைத்துத் தழுவிக் கொண்டுள்ளது, சாக்தமதம். கபிலரின் நிரீசுவர சாங்கியம் இதனால் தூய்மையுற்று, இறையுண்மையை உடன்படும் ஈசுவர சாங்கியம் ஆக மாறி நின்றது.

சக்திபீடங்கள் :

சக்திவழிபாடு நாட்டிற் பரவியிருக்கும் பான்மையை, நமது கிராமப்புறங்களிற் பெரிதும் காணலாம். ஒவ்வொரு கிராமத்திலும், வெவ்வேறு பெயரிலும் வடிவிலும், சக்திவழிபாடு நடைபெறுகின்றது, திருவொற்றியூர் வட்டப்பாறையம்மன், மாமல்லபுரம் கருக்கினில் அமர்ந்தாள், பெரியபாளையத்தம்மன், திருமுல்லைவாயிற் பச்சையம்மன், இரேணுகாபுரம் படைவீட்டம்மன், தில்லைமகாகாளியம்மை, தஞ்சாவூர் மாரியம்மன், சமயபுரம் மகாமாரியம்மன், கோயம்புத்தூர்க் கோனியம்மன், பாரியூர்க் கொண்டத்துக் காளி, நாட்டரசன்கோட்டைக் கண்ணுத்தாள், காரைக்குடிக் கொப்புடையம்மன், திருநெல்வேலி உச்சயினிமாகாளி, திருவாரூர் இரேணுகையம்மன், பண்ணாரி மாரியம்மன் முதலிய பல தேவதைகள், தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் ஆங்காங்கே சிறப்பாக வழிபடப் பெறுகின்றன.

மகாராஷ்டிரத்தில் துளஜாபவானியும், காஷ்மீரத்தில் க்ஷீரபவானியும், குஜராத்தில் அம்பாஜியும், உத்தரப்பிரதேசத்தில் விந்த்யாவாசினியும், வங்காளத்தில் காளியும், அசாமில் காமரூபியும், மைசூரில் சாமுண்டியும், கேரளத்தில் பகவதியும், காஞ்சியில் காமாட்சியும், மதுரையில் மீனாட்சியும், காசியில் விசாலாட்சியும், தமிழகத்தின் தென்கோடியில் கன்னியாகுமரியும், சிறப்பாக வழிபடப் பெற்றுத் திகழ்ந்து வருதல், அம்பிகை வழிபாட்டின் அருமை பெருமைகளைப் புலப்படுத்துவதாகும்.

இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், அம்மையின் அருட்டலங்கள் பல அமைந்திருக்கின்றன. அவற்றைச் சக்திபீடங்கள் என்பர். தந்திரசூடாமணி, குப்ஜிகாதந்திரம், ஞானார்ணவதந்திரம், தந்திரசாரம், மத்ஸ்யபுராணம், ஸ்காந்தபுராணம், தேவிபாகவதம் முதலியவற்றில் சக்திபீடங்களின் பெயரும், எண்ணிக்கையும், சிறு சிறு வேறுபாடுகளுடன் கூறப்படுகின்றன. சக்திபீடங்கள் மொத்தம் 64 என்பர், அவைகள் இந்தியநாடு முழுவதும் பல்வேறு பாகங்களிலும் பரவலாக அமைந்திருத்தல், மிகப் பழங்கால முதலே நிலவிவந்த இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டையும், அம்மை வழிபாடு ஆகிய சக்தி வணக்கத்தின் செல்வாக்கினையும் வலியுறுத்தும் சான்றாகும் என்பர், இராதாகுமுத முகர்ஜி என்னும் சரித்திரப் பேராசிரியர்.

அம்பிகையை வழிபட்டோர் :

இந்தியாவில் காஷ்மீரம், வங்கம், அசாம், திபெத்து முதலிய மாநிலங்களில், சக்திவணக்கம் அல்லது அம்பிகை வழிபாடு, மிகவும் பிரசித்தமாக இன்றும் நிலவி வருகின்றது.

தத்தாத்திரேயர், பரசுராமர், அகத்தியர், துர்வாசர், திருமூலர், காளிதாசர், சங்கரர், மூககவி, அபிராமி பட்டர், குமரகுருபரர், சிவஞான முனிவர், திருப் போரூர்ச் சிதம்பர சுவாமிகள், இராமகிருஷ்ண பரமஹம்சர், அரவிந்தர் ஆகிய சான்றோர்கள் பற்பல ரும், அம்மையை வழிபட்டு அருள் பெற்றவரேயாவர்.

கல்கத்தாவில் உயர்நீதிமன்ற நீதிபதியாக விளங்கி யிருந்தவரும், ஆர்தர் அவ்லான் (Arthur Avlon) என்னும் புனைபெயர் கொண்டவரும் ஆகிய சர். ஜான் உட்ராப் (Sir John Woodroffe) என்பவர், அம்பிகையின் வழிபாட்டை விவரிக்கும் சாக்தசமய இலக்கியங்களையெல்லாம் ஆராய்ந்து, அவற்றின் நுட்பங்களை விளக்கியதுடன், சாக்தசமயம் பற்றி நிலவியிருந்த பல தவறான கருத்துக்களையும் மறுத் துரைத்துப் போக்கினர்.

அம்பிகையை ஆற்றலும் ஆவேசமும் மிக்கவளாக, மறக்கருணை நெறியில், புரட்சி நிலையில் (Revolutionary Way) வழிபடுவது, வடநாட்டவர் மரபு. அம்மையை அழகும் அருளும் மிக்கவளாய் அறக்கருணை நெறியில், கிளர்ச்சி நிலையில் (Evolutionary Way) வழிபடுவது தென்னாட்டவர் பண்பு. இத்தென்னாட்டு முறையினையே ஸ்ரீவித்யை என்பர். மந்திரம் தந்திரம் எந்திரம் என்னும் மூன்றும், ஸ்ரீவித்யையின் மூன்று கோணங்களாக விளங்குகின்றன. ஸ்ரீவித்யையில் தேர்ச்சிபெற்ற ஒருவன், உள்ளத்தால் சாக்தனாகவும், நோக்கத்தால் சைவனாகவும். அனுட்டானத்தால் வைணவனாகவும் இருத்தல் இயலும். இங்ஙனம் அம்மை வழிபாடு பல வகைகளிலும் சிறந்து, நம்மனோர்க்கு இம்மையிலும் மறுமையிலும் நன்மை விளைவிக்கும் நலம் நிறைந்த தாகத் திகழ்கின்றது.

இந்துமதத்தின் எழிற்கூறு :

அம்பிகை வழிபாடு நம் இந்து மதத்திற்கேயுரிய ஒரு பெரும் சிறப்புக் கூறும் இயல்புமாகும். இந்து மதத்தில் பெரும் சிறப்பாகக் கடைப்பிடிக்கப்பெறும் இவ்வம்பிகை வழிபாடு, அயற் சமயத்தவர்களாகிய கிறித்தவர் முதலியவர்களையும் பெரிதும் கவர்ந்துள் ளது. மேரியம்மையின் சிறப்பைப் புகழ்ந்து கொண் டாடுவதன் மூலம் கிறித்தவ சமயமும், தாராதேவியின் புகழைப் போற்றுவதன் மூலம் பௌத்த சமயமும் கூட, ஒரு வகையில், தாய்மைத் தெய்வத்தின் தன்னிக ரற்ற மாட்சிமையினை உடன்பட்டுத் தழுவிக் கொண் டுள்ளன. “இந்து மதத்தின் சிறப்புக் கூறாகத் திகழும் தாய்மைத் தெய்வ வழிபாட்டைக் கிறித்தவர்களாகிய நாமும் தழுவிக்கொண்டு போற்றலாம்”* என அயல் நாட்டு அறிஞர் ஒருவர் ஆர்வம் பெருகக் கூறுகின்றார். இதனால் தாய்மைத் தெய்வவணக்கம் ஆகிய அம்பிகை வழிபாட்டின் சிறப்பினை யாவரும் தெளிந்து இனிதுணரலாம்.

* “Another feature of Hinduism may be helpful to Christianity. Hinduism has given much attention to the female aspect of God. From the Rigveda to Ramakrishna, the idea of God as Mother as well as Father has been expressed in Hinduism. Gods are often worshipped together with their consorts...Occasionally the goddess is even given greater honour. From the Christian side, Roman Catholics have seen the necessity to fulfil this need. They have given exaggerated importance to the Virgin Mary......Hinduism has an insight for Christianity. Probably as Christlanty becomes naturalized in India the idea of God as Mother will find a rapid entrance into Christian thought, as it is so deeply rooted in the soil of India. There is no reason why we should not think of God as Mother?”

—Frank Whaling,
An Approach to Dialogue with Hinduism and Christianty, P. 82.

தனம் தரும்; கல்வி தரும்; ஒருநாளும் தளர்வு அறியா
மனம் தரும்; தெய்வ வடிவும் தரும்; நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும்; நல்லன எல்லாம் தரும்; அன்பர் என்பவர்க்கே
கனம் தரும்; பூங் குழலாள் அபிராமி கடைக்கண்களே !

—அபிராமி அந்தாதி

பெரியாழ்வார்

திரு. உ. வே. டி. இராமசுவாமி ஐயங்கார், B.A,. B.L.,
சென்னை.

உலகங்கள் அனைத்தையும் ஆக்கி, அளித்து அழிக்கும் இறைவனை வழிபட்டு, அவனல் நமக்கு நன்மைகளைப் பெறுவித்துக் கொள்வது மக்கள் இயல்பு. இவ்வியல்புக்கு மாருக எல்லாம் வல்ல இறைவனைத் தாம் காப்பவர்போல் அவனுக்கு ஆசிகூறும் மனப்பான்மையுடையாரும் பலர் உண்டு. அவர்களுள் முதலிடம் பெற்றவர் பெரியாழ்வார். இவர் எம்பெருமான்பால் தாம் கொண்டுள்ள அன்பின் மேலீட்டினல் அவன் யாவன், தாம் யார் என்பதை மறந்து, அவன் பாதுகாப்பில் தாமிருப்பது போக, தமது பாதுகாப்பில் அவன் இருப்பதுபோல் பாவித்து, அவனுக்குப் பல்லாண்டு பாட முன்வந்தவர். இப்படிப்பட்ட அன்பின் பெருக்கை ஒருவர் "சோராத காதல் பெருஞ் சுழிப்பு" என்று பேசினர். சுழியின் தன்மை, கீமுள்ள நீரை மேலே கொண்டு வந்து, மேலுள்ளதைக் கீழே அழுத்தும். இந்தக் காதல் சுழியும் மேலுள்ள ஆண்டவனை ரக்ஷ்ய வஸ்து (காக்கப்படும் பொருள்) ஆக்கி, கீழ்ப்பட்ட மனிதனை ரட்சகனை (காப்பவன்) ஆக்குகின்றது, ஆகவே, தொல்லைமாலை ஒன்றும் பாராது, அவனைப் பல்லாண்டென்று காப்பிட வல்லவரானர் ஆழ்வார்.

இவ்வாழ்வார், ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆனிமாதம் சுவாதி நட்சத்திரத்தில் திருவவதரித்தார். பிராம்மண குலத்தில் பிறந்தமையால் ஸ்ரீ வைஷ்ணவப் பிராம்மணர்களுக்கு உண்டான உபநயன பஞ்ச சம்ஸ்காரங்களைக் காலத்தில் பெற்று, எம்பெருமானுக்கு அடிமைத்தொழில் பூண்டு வாழத் திருவுள்ளமாய், பெருமாள் மிகவும் உகந்த திருத்துழாய்க் கைங்கரியத்தைக் கடைப்பிடித்து, அதற்காக அழகியதோர் நந்தவனம் நிருமித்து, அதில் தாமே கொத்தி, வெட்டி, நீர்பாய்ச்சி, களையறுத்து, திவ்வியமான திருத்துழாயையும், நறுமணம் வீசும் மலர்களையும் வளர்த்து, அவைகளை எடுத்துத் தொடுத்து, அவ்வூரில் கோயில் கொண்டருளியிருக்கும் வடபெருங் கோயிலுடையானுக்குக் கொண்டு சமர்ப்பித்து இன்புறுவர். இவருக்கு இளமையிலேயே 'விஷ்ணுசித்தர்' என்று திருநாமம் வழங்கி வந்திருக்கலாம். இது இடுகுறிப் பெயர் மட்டுமின்றிக் காரணப் பெயருமாகும்படி, இவ்வாழ்வார் பின்னல் "அரவத்து அமளியினேடும் அழகிய பாற்கடலோடும் அரவிந்தப் பாவையும் தானும் அகம்படிவந்து புகுந்து" "வட தடமும் வைகுந்தமும் மதில் துவராபதியும் இடவகைகள் இகழ்ந்திட்டு"த் தம்பால் இடவகை கொண்டதாகப் பாசுரம் பாடியுள்ளதால், இவரேயன்றி வேறு யாவர் விஷ்ணுசித்தராவார்?

இப்படி இவரது சித்தத்தில் விளங்கிய பெருமாள், இவருடைய மகிமையை உலகத்துக்கு வெளிப்படுத்தவும், பல சமயமதிகளால் நிலை தவறிப்போன உலகோர்களுக்கு உண்மைச் சமயம் எதுவென விளக்கவும், ஒரு ஏற்பாடு செய்தருளினன். அந்நாட்டை ஆண்டுவந்த பாண்டிய மகாராஜனுக்கு, உண்மையான பரதத்துவம் எது? என்றறிய ஓர் ஆசை எழுந்தது. உடனே தனது பிரதான மந்திரியான செல்வநம்பி என்பவரைக் கலந்து, ஒரு வித்யா சுல்கம் ஏற்படுத்தினன். அதாவது, பணம் நிறைந்த ஒரு பொற்கிழியைத் தன் கொலுமண்டபத்தில் கட்டி, எல்லாப் புலவர்களையும் வரவழைத்து, அவரவர்கள் கண்டறிந்த உண்மைப் பொருளை விளக்கி, யார் அந்தக் கிழியை அறுத்துப் போவாரோ அவரே பெரியவரென்றும், அவர் எடுத்துக் காட்டிய தத்துவமே பரதத்துவமாகும் என்றும், நாடெங்கும் பறையறைவித்தான். அரசியல் நிகழ்ச்சிகளில் சிறிதும் மனம் செலவிடாத விஷ்ணுசித்தருக்கு, இந்தச் செய்தியே தெரியாது. ஆனல் முன்னிரவு இவருக்கு ஒரு கனவு ஏற்பட்டது. அதில் இவர் முன்பு அவ்வூர்ப் பெருமாளாகிய 'ஆல்மேல் கிடந்தான்' வந்து தோன்றி, "நீர் நாளைய தினம் அரசனுடைய சபைக்குப் போய் நம்மைப் பரதத்துவமாக நீர் உணர்ந்தபடியை உபதேசித்துக் கிழியை அறுத்து வருவீர்!" என்று நியமித்தருளினன். "கல்விப் பயிற்சி சிறிதும் செய்யாத அடியேன் தேவரீருக்குத் திருத்துழாய்ப் பாத்தி கொத்தியதால் ஏற்பட்ட அடியேனுடைய கையில் தழும்பைக் காட்டியா, சகலகலா வல்லவர்களான புலவர்களை வெல்ல இயலும்? என்று விஷ்ணுசித்தர் விண்ணப்பித்து நிற்க, அதற்குப் பெருமாளும், "அது நமது கவலை! நீவிர் கலங்க வேண்டாம். சென்று வென்று வாரும்" என்று அருள் புரிந்தார். விஷ்ணுசித்தரும் தாம கண்ட கனவுக்கு வியந்து, அதில் கட்டளையிடப்பட்ட வண்ணமே அரசன் மாளிகையை மறுநாள் அடைந்தார். "பீதகவாடைப் பிரானர் தாமே பரம குருவாக வந்து, எல்லா வேதாந்தங்களும் கற்றதனல் அறியக்கூடிய மெய்ப்பொருளை ஆழ்வாருக்கு உணர்த்திவிடவே, அவ்வனுக்கிரக விசேடத்தால் ஆழ்வார் திருமகள் கேள்வனை நாராயணனுடைய மேன்மையை, அந்த அரசசபையில் ஏனைய பண்டிதர்களும் உணரும்வண்ணம் வெகு தெளிவாய் எடுத்துரைத்து, அதனல் அரசன் மனத்தைக் களிக்கச்

செய்து, உடனே தாஞகத் தாழ்ந்து வந்த கிழியையும் அறுத்து, உள்ளிருந்த திரவியத்தை எடுத்துக் கோயி லுக்குக் கொடுத்தார்.

உடனே அரசர்பெருமானும், இவர் செய்தருளிய பேருபகாரத்தைப் பெரிதும் பாராட்டி, இவருக்குத் தகுந்த உபசாரங்கள் செய்து, தனது பட்டத்து யானை மீது ஏற்றி ஊர்வலம் செய்வித்ததுமன்றி, இவருக்குப் 'பட்டர்பிரான்' என்று திருநாமம் சாத்தி, 'பட்டர் பிரான் வந்தான்' 'வேதப் பயன் கொள்ளவல்ல விஷ்ணுசித்தன் வந்தான்'' என்று ஈண்டிய சங்கம் எடுத்தூதி, பல விருதுகள் கூறுவித்தான். இப்படி இவர் நகரத்து மக்கள் சூழ ஊர்வலம் செய்வதை, புத்திரனுடைய மகோத்சவத்தைப் பெரிதுவக்கும் பிதாவைப்போல் கண்டு களிகூரப் பெருமாளும் ஆகாயத்தில், "கருமுகில் தாமரைக் காடு பூத்து நீடிரு சுடர் இருபுறத்தேந்தி, ஏடவிழ் திருவொடும் பொலிய, ஓர் செம்பொற் குன்றின்மேல் வருவதுபோல் கருடன் மேல் வந்து தோன்றினன்''. சேவித்தார் ஆழ்வார். சகல தாபங்களையும் போக்கிப், பேரின்பத்தை உடலுக் கும் உணர்வுக்கும் ஊட்டும் அந்த வடிவழகைக் கண்ணால் கண்டவுடன். ஆனந்த பரவசராய், அவ்வானந்தத்தில் விளைந்த அன்பினால் ஆதரம் பெருகி, காணக் கிடைக்காத இக்காட்சியை, இத்தனை மக்களும் ஏககாலத்தில் பெற்றமையால், பிரபுவுக்கு ஏதாவது கண்ணெச்சில் (திருஷ்டி) தோஷம் ஏற் படுமா? என்று அஞ்சினவராய், சிசுவுக்கு மாதா பிதாக்கள் காப்புக்கள் கட்டிக் காப்பாற்றுவதுபோல், இப்பேரழகுக்கு ஊறு எதுவும் வராதிருக்கவேண்டுமே என்றெண்ணி,

> "பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு
> பல்கோடி நூறாயிரம் மல்லாண்ட திண்டோள்
> மணிவண்ணா! உன் சேவடி செவ்வி திருக்காப்பு"

என்று காப்பிடத் தொடங்கினர். இந்த உயர்தர மனோநிலையைக் குறித்துத்தான், நாம் முதலில் வியந்து விரித்துரைத்தது.

இப்படித் தொடங்கி, 473 பாடல்கள் கொண்ட திருமொழியைப் பாடியருளி, ஆழ்வார்கள் கோஷ்டி யில் கொள்ளப்பட்டார் விஷ்ணுசித்தர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்துள், முதலாயிரத்தில் பெரியாழ் வார் திருமொழி ஒன்றே, பாசுரங்கள் அதிகமாயுள்ள பிரபந்தம். நாலாயிரப் பிரபந்த சேவாகாலம் தொடங்கும்பொழுதெல்லாம், திருப்பல்லாண்டு தொடங்குவது முறை. பின்பே மீதிப் பிரபந்தங்கள் படனம் செய்யப்படும். அவ்வாறே, சேவாகாலத்தின் இறுதியிலும் பல்லாண்டு முதற் பாசுரத்தைச் சொல் வது வழக்கம். வேதத்திற்கு முன்னும் பின்னும் பிரணவத்தை உச்சரிப்பதுபோல், இந்தத் தமிழ் வேதத்தின் பாராயணத்தில், திருப்பல்லாண்டு அனுசந்தானம் இன்றியமையாததாக அமைந்து விட்டது.

பெரியாழ்வார் திருமொழிக்கு மற்றொரு ஏற்றம்: இது ஒரு தமிழ்ப்பாகவதம் என்று சொல்லும் நிலையில் அமைந்தமை. ஸ்ரீமத் பாகவத தசமஸ்கந்தத் தில் சுக மகரிஷி அனுபவித்த அனுபவங்களையெல் லாம், இங்கே பெரியாழ்வார் தம்மை யசோதையாகப் பாவித்து அருளிச் செய்யும் பாசுரங்கள் வடிவில் நமக் குத் தந்தருள்கிறார். கண்ணனுடைய பாலலீலைகளை அனுபவிப்பதில், சுகப்பிரமத்தின் வேற்றவதாரமோ அல்லது இது ஒரு தனித்தமிழ்ச் சுகமோ! என்று வியக்கும்படி, மேன்மைபொருந்தியுள்ள பாசுரங்கள், பிள்ளைத்தமிழுக்குள் வெகு ரஸ பூர்த்தியுடையவை, தாலாட்டுப் பருவம் முதல் அம்புலிப் பருவம், செங்கீரைப்பருவம், அச்சோப்பருவம் முதலியவை களை, ஒன்றும் விடாமே அனுபவிக்கும் அனுபவம், அப்பாசுரங்களைப் பயின்ற பாக்கியசாலிகளுக்கே வெளியாகுமேயன்றிச் சொல்லெடுத்துச் சொல்ல வல்லதன்று. "கன்னற்குடம் திறந்தாலொத்தூறிக் கண கண சிரித்து உவந்து முன் வந்து நின்று முத்தம் தரும் என் முகில்வண்ணன் திருமார்வனுடைய'' அழகிய லீலைகளைப் பெரியாழ்வார் பாசுரங்களில் அனுபவிக்கும்போது, நாம் ஒவ்வொருவரும் ஒரு யசோதையாய்ப் போய்விடுகிறோம்.

"என்ன நோன்பு நோற்றாள் கொலோ இவனைப் பெற்ற வயிறுடையாள்'' என்று பிறர் மதிப்பதொரு புறமிருக்க, "ஞாலத்துப் புத்திரனைப் பெற்றார் நங்கைமீர்! நானே மற்றாருமில்லை'' என்னுமளவில் சுகானுபவம் விஞ்சிப் பெருகும்.

பெரியாழ்வாருடைய பகவத் பக்தியும், பகவத் விஷயத்தில் ஆர்த்தியும் மிகவுயர்ந்தவை. "உன்ன நாள்பசியாவ தொன்றில்லை, ஓவாதே நமோநாரணா வென்று எண்ணநாளும் உன பாதம் நண்ணநாள் அவை தத்தறுமாகில், அன்றெனக்கு அவை பட்டினி நாளே'' இப்படி பெருமாளுக்குப் பசித்திருந்தார் இவ்வாழ்வார்; "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே'' என்று பாடியவரைக் காட்டிலும் 'பட்டினி நாளே' என்று பாடியவர் பெருமை பெரிது போலும்! உயிர் பிரிந்திடும் நேரத்தில் எம்பெருமானை எண் ணவோ, அழைக்கவோ இயலாது பரிதவிக்கும்படி நேரிடுமோ என்றெண்ணி, பெரியாழ்வார் முன் எச்சரிக்கையாய், "அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்'' என்று, சொல்லலாம் போதே அவன் நாமம் எல்லாம் சொல்லி வைத்தார். "நான் மறக்கினும் சொல்லும் நா'' என்பது ஒரு சைவ சமய குரவர் வாக்கு. இங்கே, ஆழ்வார் மறக்கினும், அவர் நா பிறிதொரு விஷயம் புகலாதாம். "நாக்கு நின்னை யல்லா லறியாது, நானதஞ்சுவன் என் வச மன்று''. ஆழ்வாருக்கும் நமக்கும் இந்திரியங்கள் வசப்படாது போவதில் ஒப்புமை இருந்தாலும், நம் இந்திரியங்கள் விஷ விஷய வசம்; அவர் இந்திரியங் கள் பகவத் விஷயவசம். "என்னையும் என்னுடைமை யையும் உன் சக்கரப் பொறி யொற்றிக் கொண்டு

நின்னருளே புரிந்திருந்தேன். இனி என் திருக் குறிப்பே?" என்று நாமும் பெரியாழ்வாரைப்போல் எம்பெருமானுடைய சங்கல்பத்தை எதிர்பார்த்த வண்ணம் இருக்கக் கற்றோமாயின் உயர்ந்து உய்ந்து போனவர்களாவோம்.

இவ்வளவு ஏற்றமுடைய ஆழ்வாருக்குப் பிறிதொரு ஏற்றமும் அமைந்தது. ஆண்டாள் என்றும், கோதை என்றும், உலகம் போற்றும் ஒரு குழந்தையைத் தமது நறுந்துழாய்ப் பாத்தியில் கண்டெடுத்து, அவளை வளர்த்து, அவள் பகவத் பக்தி மலர்ந்து வருவதைக் கண்ணாரக் கண்டு, கடைசியில் அவளை அரங்க நகரப்பனுக்குக் கன்னிகாதானம் செய்யும்படியான ஒப்பற்ற பாக்கியம், இவ்வாழ்வார் ஒருவருக்கே கிடைத்தது. இவர் பெருமாளுக்குத் தொடுத்துச் சூட்டும் மாலைகளை, ஆண்டாள் திருமுடியில் சூடியபின்னரே, பெருமாள் தாம் சூட்டியருளத் திருவுள்ளமானமை கண்டு, அவ்வண்ணமே கோதையின் குழலின் நறுமணம் சேர்த்து, அம்மாலைகளைத் திருமாலுக்கு அளித்து வந்தார். கடைசியில், பெருமாள் நியமனப்படி, ஆண்டாளைப் பெருமாளுக்கே மணம்செய்வித்துப் பெருமாளுக்கே மாமனாராய் விளங்கினார்.

இப்பொழுது இவ்வாழ்வாருக்குப் பெரியாழ்வார் என்று பெயர் ஏற்பட்டதற்குக் காரணம் துலங்குகிறது. "அப்பன் நீ அம்மை நீ. அன்புடைய மாமனும் மாமியும் நீ" என்று மிக நெருங்கிய பந்துக்களின் முறையைச் சொல்லி, சேதனன் எம்பெருமான் பக்கல் சர்வவித பாந்தவ்யம் கொண்டாடுதல் முறை. ஆழ்வார் விஷயத்திலோ இம்முறை மாறி, பெருமாள் இவரைச் சர்வவித பந்துவாய்க் கொண்டாடும் நிலையில், இவர் புகழும், செயலும் நிற்கின்றன. அப்பனாயிருந்து ஆசி கூறியும், அம்மையாயிருந்து தாலாட்டி, நீராட்டி, பூச்சூட்டி, அமுதூட்டியும், மாமி மாமன் முறையில் ஒரு பெண்மணியைக் கொடுத்து வாழ்வித்தும், இவ்வாழ்வார் பெருமாளுக்குச் செய்துள்ள உபகாரம் அனந்தமாகையால், பெருமாளுக்குப் பெரிய இவ்வாழ்வார், உண்மையில் பெரியாழ்வாரே.

முதலியாண்டான் திருவார்த்தைகள்

ஸ்ரீ ராமாயணத்திற்கு ஸ்வாபதேசார்த்தம் போல, ஸ்ரீ வைஷ்ணவப் பெருஞ் சான்றோர்களுள் ஒருவராகிய முதலியாண்டான் பணித்த சில வார்த்தைகள் வருமாறு:

1 பிராட்டிக்குச் சிறையிருப்பு இன்னாததாக இருந்தாற்போலவே, ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கை இன்னாததாக இருக்கும்.

2. பிராட்டி, இலக்குவன்பால் அபசாரப்பட்டு உடனே இராமபிரானைப் பிரிய நேர்ந்தது; அதுபோல பாகவத அபசாரம் சேதனர்களுக்குத் திருவடியின் தொடர்பை இழந்துவிடச் செய்யும்.

3. பிராட்டிக்த அசோகவனம் போல, சேதனர்களுக்குப் ப்ரக்ருதி சம்பந்தமான இவ்வுடம்பு விளங்கும்.

4. பிராட்டிக்கு அரக்கிகளின் தொடர்புபோலவே, சேதனர்களுக்கு மனைவி மக்களின் தொடர்பும் ஆகும்.

5. பிராட்டிக்கு மாரீசனாகிய மாயமான்போல, சேதனர்களுக்கு இவ்வுலகப் பொருள்களில் நுகர்ச்சி இருக்கும்.

6. பிராட்டிக்கு ஸ்ரீ ஆஞ்சநேயர் நேர்பட்டாற்போன்றது, சேதனர்களுக்கு ஆசார்யன் நேர்படுதல்.

7. பிராட்டிக்கு ஸ்ரீ ஆஞ்சநேயர் புகழ்ந்துரைத்த இராமபிரானின் பண்புகளைப் போன்றவை, சேதனர்களுக்கு ஆசார்யன் உபதேசிக்கும் கடவுட் பண்புகள்.

8 பிராட்டிக்த ஸ்ரீ ஆஞ்சநேயர் அடையாளங் கூறிக் கணையாழி அளித்ததுபோன்றது, சேதனர்களுக்கு இறை அருளை விளக்கி ஆசார்யன் செய்தருளும் திருமந்திர உபதேசம்.

9. பிராட்டி ஸ்ரீ ஆஞ்சநேயர்க்குச் சூடாமணி கொடுத்தருளினாற் போன்றது, ஆசார்யன் விஷயத்தில் 'தலை யல்லால் கைம்மாறு இலேனே' என்று சேதனர்கள் இருக்கும் நிலை.

10. பிராட்டிக்குத் திரிசடையின் நட்பும் பேச்சும் பெருந்துணையாய் இருந்ததுபோல, பாகவதர்களின் நட்பும் அவர்களின் திருமொழிக்கும் சேதனர்களுக்குப் பெருந்துணையாக விளங்கும்.

—ஆசிரியர்

ஆசாரிய சுவாமிகளின்

அருளுரைகள்

மனிதன் உடலுக்கும் உயிருக்கும் ஒரு சம்பந்தம் இருக்கிறது. இதனைப்போலவே மனித வாழ்க்கைக் கும், ஆலயத்திற்கும் சம்பந்தமிருக்கிறது. உயிர் இல்லாவிட்டால் உடல் பலனற்றதாகி விடுவதுபோல, ஆலய சம்பந்தமற்றவர் வாழ்க்கையும் பயனற்றதாகி விடுகிறது.

தவசிகள் மகான்கள் ஆங்காங்கு மரத்தடியில் அமர்ந்து ஆண்டவனை நோக்கித் தவமிருந்தார்கள். அருகே ஒரு குளமோ, கிணறோ இருக்கும். தவசிகள் தங்கியிருந்த மரம் தலவிருட்சம் ஆயிற்று. அருகே இருந்த நீர்நிலை தீர்த்த கட்டமாயிற்று.

அந்த மரத்தின் அடியில் ஆலயங்கள் முன்பு எழுந் தன. பிற்காலத்தில் மன்னர்களும், பிரபுக்களும் ஆங்குப் பெரிய சிறிய ஆலயங்கள் அமைத்தார்கள். மகான்கள் தொட்டு அனுபவித்த தீர்த்தம் புனிதமான தாயிற்று. நோய் நொடி தீர்க்கும் தன்மையும் சிறப் பும் பெற்றன. இந்திர தீர்த்தம், சந்திர தீர்த்தம் என்று சிறப்பித்தும் போற்றப்பட்டன.

ஆலயங்கள் பிற்காலத்தில் சிறப்பாக அமைந்த போதும், இன்றளவும், ஸ்தல விருட்சங்களும் தீர்த்தங்களும் போற்றிக் காக்கப்பட்டு, புனிதம் நிறைந்ததாக மதிக்கப்பட்டுமே வருகின்றன. இந்து மக்களின் இல்லங்களில் சுவாமி படம் இல்லாத வீடுகள் அநேகமாக இருக்காது. ஒவ்வொரு வீட் டிலும் ஏதாவது ஒரு சாமிபடம் இருக்கும். வீட்டில் இருப்பவர்கள் குளித்ததும் வீட்டில் உள்ள அனைவரும் சேர்ந்து கூட்டுப் பிரார்த்தனை செய்ய வேண்டும். இவ் வாறு வழிபாடு நடத்தும்போது பக்திப் பாடல்கள் பாடிப் போற்ற வேண்டும். அருளாளர்கள் பாடிய பாடல்களைத்தான் பாட வேண்டும். சினிமா பாடல் மெட்டில் எழுதிய பாடல்களைப் பிரார்த்தனைப் பாடல் களாகப் பாடுவது சரியல்ல. அருளாளர் பாடல்களில் பலிதமாக உயிர் எழுத்துக்கள் அமைந்திருக்கும். புதிய பாடல்களில் மெட்டும் ராகமும் நன்றாக இருக் கலாம். அதில் உள்ளம் உருகும் உணர்வை ஏற்படுத் தும் ஆற்றல் இருக்காது.

வீட்டுப் பிரார்த்தனையால் குடும்பச் சேமம் ஏற் படும். தான், தன் குடும்பம் மட்டுமே சேமமாக இருந்தால் போதுமா? சூழலும் சுகமாக இருந்தால் தானே பயமோ, கவலையோ இல்லாமல் வாழமுடியும். ஊரின் சேமத்திற்காகவும், நாட்டின் சேமத்திற்காகவும் ஆலயங்களில் சென்று பிரார்த்தனை செய்ய வேண்டும். ஆலயப் பிரார்த்தனை தேசபக்திக்கும், சமுதாய மேன்மைக்காகவுமே ஏற்பட்டவை.

ஆண்டவன் சந்நிதியில் ஏழை பணக்காரன் உயர்வு தாழ்வு ஏதும் இல்லை. திருவிழா என்றால் எல்லா ஜனங்களும் சேர்ந்து ஒத்துழைத்து ஜனசக்தியைத் திரட்டுவதற்காகவே தேரும் திருவிழாவும் ஏற்படுத் தப்பட்டன. தேர்த் திருவிழா என்றால் வீடு சுத்தம் செய்து, தெரு சுத்தம் செய்து, தண்ணீர் தெளித்து மகுடதோரணம் கட்டிச் சுகாதார ஏற்பாடுகள் பூராவும் நடத்தப்படுகின்றன. பொது நன்மைக்குப் பாடுபட மக்களைப் பயிற்றுவிக்கும் பயிற்சிக்கூடமாக ஆலயங் கள் விளங்குகின்றன.

கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றார்கள். ஏன் தெரியுமா? சுயநலம் மிகுந்து அகம்பாவம் உடையவர்கள் வாழும் இடமாக அந்த ஊர் அமைந்துவிடும். ஆலயமும் தெய்வபக்தியும இருக்குமிடத்தில் அக்கிரமம் ஏற்படாது. மனிதனை மனிதன் மதிப்பான். அந்தக் காலத்தில் கோயிலை மையமாக வைத்தே வீடுகள் அமைத்தார்கள். இப் பொழுதெல்லாம் வீடு கட்டிய பிறகு கோயிலை அமைத் துக் கொள்கின்றோம்.

கோயிலில் உயர்ந்த ராஜகோபுரம் ஏன் அமைத் தார்கள் தெரியுமா? ராமனை நாம் பார்க்காவிட்டாலும் ராமன் நம்மைப் பார்த்துக்கொண்டே இருக்கிறான் என்று ஒரு வாசகம் இருக்கிறது. நாம் கோயிலைப் பார்த்தாலும் பார்க்காவிட்டாலும், கோபுரம் நம்மைப் பார்த்துக்கொண்டேயிருக்கிறது என்பதை மனத்தில் வைக்க வேண்டும். அதனால்தான் கோபுர தரிசனம் கோடி புண்ணியம், கோபுர தரிசனம் பாப விமோசனம் என்று வாக்கியங்கள் அமைக்கப்பட் டிருக்கின்றன.

கோயில்களில் தட்டு இல்லாமல் பூஜை நடப்பதற் காக, மன்னர்களும் செல்வந்தர்களும் மான்யங்கள் வழங்கினார்கள். ஆடுகளும் மாடுகளும் கோயிலுக்குக் காணிக்கையாக விடப்பட்டன. ஆடுமாடுகளை வெட்டு வதற்காக அல்ல. கால்நடைகள் விருத்தியேற்பட்டுக் கோயிலின் வருவாய் பெருகும் என்றுதான் இந்த ஏற்பாட்டைப் பெரியவர்கள் ஏற்படுத்தியிருக் கிறார்கள்.

மக்கள் நலனில், பண்பாட்டில், ஒற்றுமையில் ஆலயம் பிரதான பங்கு வகித்திருந்ததால், அன்றைய ஆலய பூஜை தட்டின்றி நடைபெற அரசு கஜானுவில் இருந்து பணம் உதவி செய்தார்கள் அன்று மக்க ளிடம் தெய்வபக்தி அதிகம் இருந்ததால் குற்றம் குறைகள் குறைந்திருந்தன. இன்று ஆலயங்களை அலட்சியப்படுத்திய காரணத்தால் சிறைக்கூடங்களும் கோர்ட்டுகளும், போலீஸ் ஸ்டேஷன்களும் அதிகம் ஏற்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டு வருகிறது.

மண்ணைத் தோண்டாதே என்ெறாரு வாசகம் உள் ளது ஆலயத்துக்குச் சேர்ந்த நிலத்தில் வரப்பைக்கூட வெட்டக்கூடாது. ஆலயத்திற்கு நிலம் மான்யமாக விட்டவர்கள் இந்த தர்மம் சூரியன் சந்திரன் உள்ள வரை நடைபெறவேண்டும், எவராவது இதற்கு இடர் செய்வார்களானுல் கங்கைக் கரையில் காராம் பசு வைக் கொன்ற பாபத்திற்கு உள்ளாவார்கள் என்று சாபம் கொடுத்துக் கோயில் சுவர்களில் கல்வெட்டு வெட்டி வைத்திருப்பார்கள்.

சிவன்கோயிலில் பிரசாதமாகத் திருநீறு கொடுத் தால்கூட நெற்றியில் தரித்துக்கொண்டதுபோக எஞ்சி இருப்பதை அருகே இருக்கும் கிண்ணத்தில் போட்டு விடுவார்கள். சிவன்சொத்து குலநாசம் என்ற மொழியையும் சொல்லியிருக்கிருர்கள். சிவன்கோயில் பிரசாதத்தையே அதிகம் உபயோகிக்கக்கூடாது என்ருல் சிவன் கோயில் நிலத்தைத் தனதாக்கலாமா? குத்தகைக்கு ஏற்றுக்கொண்டு குத்தகையைக் கொடுக் காமல் இருக்கலாமா?

பெருமாள் கோவில் பிரசாதங்களை உண்ணலாம். பெருமாள் சொத்தையும் மோசடிசெய்து அனுபவிக்கக் கூடாது. பெருமாள் சொத்து பெருநாசத்தை ஏற் படுத்திவிடும் என்பார்கள். பொதுவாக ஆலயசொத்து பொதுசொத்து, ஆண்டாண்டு காலம் இருக்கவேண் டிய சொத்து. அதனை அபகரிப்போன், அபகரிக்க நினைப்போன் ஆகியோர் கிராமப் பொதுஉடமைக்கு விரோதிகள். ஆலய சொத்தைப் பாதுகாக்க ஒவ் வொருவரும் முனவரவேண்டும். நமக்கேன் என்று பது கூடாது. ஆலயங்களில் விளக்கு எரிகிறதா பூஜை நடக்கிறதா என்று கவனிக்கவேண்டும்.

கோயிற் பூசை நடைபெருமல் போனுல் நாட்டில் பஞ்சமும் பசிப்பிணியும் பரவும்; வானம் வழங்காது; கிணற்றில் நீர் ஊருது; நோய் மலிந்து நிற்கும். தினசரி ஆலய பிரார்த்தனைக்கு ஒவ்வொருவரும் செல்லவேண் டும். தினசரி போக முடியாதவர்கள் வாரத்தில் ஒரு தினமேனும் ஆலயத்திற்குச் சென்று வணங்கவேண் டும். தமிழ்நாட்டில் உள்ள கோயில்களின் கோபுரங் களைக் கண்டு அயல்நாட்டாரே வியக்கின்ருர்கள். இதனைப் பூமியில் கட்டி, பிறகு நிமிர்த்தி வைத்தார் களோ என்று வியக்கிருர்கள்.

நான் இந்தியா பூராவும் சுற்றிப் பார்த்திருக்கிறேன். உயர்ந்த கோபுரங்கள். அதிலும் சிறந்த சிற்பங்கள் உள்ளவை, தமிழ்நாட்டில் உள்ள கோயில் கோபுரங் களே ஆகும். நாம் பார்க்காவிட்டாலும் நம்மைப் பார்க்கக் கோபுரங்கள் உயர்ந்துநிற்கின்றன. கோபுரங் களைத் தரிசனம் செய்து நாம் உய்யவேண்டாமா?

ஆலயம் மடம் இவைகள் நாட்டின் நன்மதிப்புக்கும், மக்களின் நல்வாழ்வுக்கும் சிறந்த சிந்தனையாளர் களால் தோற்றுவிக்கப்பட்டவை. மடத்திற்கு வருமானம் போதாவிட்டால், கிராமம் கிராமமாக முகாம்போட நான் புறப்பட முடியும். ஆங்காங்கு மக்களுக்கு நீதியும் தர்மமும் போதிக்க முடியும். மக்களுக்காகப் பூஜை பிரார்த்தனை செய்ய முடியும். பக்தர்கள் பூஜைக்கு வேண்டியவற்றை வழங்கி எங்கள் சேவை குறைவுபடாமல் செய்து விடுவார்கள்.

மடங்களைப்போல ஆலயங்கள் ஊர் ஊராக முகாம் போட முடியுமா? நகரத்தான் முடியுமா? மடம் வந்து பெற்றுக்கொள்ளும்; ஆலயங்கள் இருக்கும் இடங் களுக்கு மக்கள்தான் சென்று வழங்கவேண்டும்.

உள்ளூர்க் கோயிலில் விளக்கு எரிகிறதா எனபதைப் பார்க்காதவர்கள், டூர் பஸ் வைத்து க்ஷேத்திர தரிசனம் செய்யப் புறப்பட்டால் பயன் கிடைக்காது. பெற்ற தாயாரைப் பிச்சையெடுக்கவிட்டு, மகன் கும்பகோணத்தில் கோதானம் செய்தால் பயன் கிட்டுமா?

அந்தந்த ஊரில் உள்ளவர்கள் அந்தந்தக் கோயில் களை, பாதுகாக்க முன்வரவேண்டும். சேலத்திற்கு முகாம் இடுவதற்கு முன்பு, மூவர் தேவாரம் பாடிய திருக்கோயில்கள். ஆழ்வாராதிகள் மங்களா சாசனம் செய்த திருக்கோயில்கள் இங்கு இருக்கின்றனவா என்று விசாரித்தேன். இல்லையென்று சொன்னுர்கள். ஆயினும் மாரியம்மன் கோயில் விவகாரம் தமிழ்நாடு பூராவும் செய்தி பரவியிருக்கிறது.

பரம்பொருள் எங்கும் நிறைந்ததாக யாவும் அறிந்த தாக எல்லாம் வல்லதாக விளங்குகின்றது. அதனை அப்படியே அனுபவிக்கச் சாதாரண மனிதர்களால் ஆகாது. எனவே பல்வேறு மூர்த்தங்களாக அறிந்து அனுபவித்தவர்கள் நமக்கு உருவாக்கித் தந்திருக் கிருர்கள்.

உதாரணமாக மின்சாரம் இருக்கிறது. எதையும் செய்யவல்ல ஆற்றல் அதற்கு இருக்கிறது. விளக்கில் மின்சாரம் பொருத்தப்படும்போது அது ஒளியைத் தருகிறது. இந்த ஒலிபெருக்கியில் மின்சாரம் பொருத்தப்படும்போது ஒலியை நெடுந்தொலைவு கொண்டு செல்லும் ஆற்றல் உடையதாகிறது. விசிறி களில் மின்சாரம் செயல்படும்போது காற்றைத் தரு கிறது. இயந்திரங்களில் பொருத்தப்படும்போது பெரிய இயந்திரம் முதல் சிறிய இயந்திரம்வரை செயல்பட வைக்கிறது. மின்சாரத்தைப்போலப் பரம் பொருளும் அதனுல் செயல்படும் கருவிகளைப்போல

விக்கிரகங்களும் நமது பெரியோர்கள் கண்டு அறிந்து தேர்ந்து அனுபவித்து நமக்கு அறிமுகப்படுத்தி வைத்திருக்கின்றார்கள்.

வினைகள் தீரவேண்டுமானால், செய்கின்ற காரியங்கள் செம்மையாக நடைபெறவேண்டுமானால், விநாயக மூர்த்தத்தை வணங்கு. அழகும் வீரமும் ஞானமும் வேண்டுமானால் முருகப்பெருமானை வணங்கு. இவ்வுலகத்திலே எல்லாவிதமான இன்பங்களும் அடைய உன் மனம் விரும்பினால் திருமாலை வணங்கு. எல்லாச் சக்திகளையும் பெற்றுத் தீரனாக, தைரியவானாக விளங்க வேண்டுமானால் அம்பிகையை வணங்கு. கல்வியை விரும்விப்பெற விரும்புகிறாயா? சரஸ்வதியைப் போற்றி வணங்கு. செல்வத்தை விரும்பி யாசிக்கிறாயா? திருமகளை வணங்கிப் போற்று. முக்தியை விரும்பி நிற்கிறாயா? சிவபெருமானைத் துதித்து அருள் பெறு என்று நமது பக்திக்கு வழியமைத்து இஷ்ட சித்தியைப் பூர்த்தி செய்துகொள்ள மூர்த்தங்களும் ஆலயங்களும் அமைத்திருக்கிறார்கள்.

அரசாங்கம் ஒன்றேயாயினும் செயல்பட பல்வேறு டிபார்ட்மெண்ட் இருப்பதுபோல, நமக்கு அனுக்கிரகம் செய்யவல்ல மூர்த்தங்களை வழிகாட்டியிருக்கிறார்கள். பெரியவர்கள் அமைத்துக் காட்டிய ஆலய மூர்த்தங்களை அவர்கள் அமைத்த ஆகம விதிகளின்படி சாஸ்திரங்களை அனுசரித்து வழிபாடு நடத்தினால்தான் வழிபாட்டுக்குப் பலன் கிடைக்கும். மடங்களைப்பற்றி நான் கவலைப்படவில்லை, மடத்துக்கு வருமானம் இல்லையென்றால் கிராமம் கிராமமாக முகாம் போட்டு ஜனங்களுக்கு நல்லது கூறுவோம். மக்களுக்காகக் கடவுளைப் பிரார்த்திப்போம். மக்கள் மடத்தின் பூஜை தவறாமல் நடக்க உதவி செய்வார்கள்.

உள்ளூரில் இருக்கும் கோயிலில் பூஜை இல்லாமல், விளக்கு எரியாமல் இருக்கும்போது, 50 ரூபாய் டூரிஸ்ட் பஸ் டிக்கட் வாங்கி க்ஷேத்திராடனம் செய்தால் நிச்சயம் பயன் கிடைக்காது. பெற்றதாய் வயிற்றுப் பசிக்கு அழும்போது மகன் கும்பகோணத்தில் கோதானம் செய்தானும் என்று ஒரு பழமொழி இருக்கிறது. அதுபோல உள்ளூர்க் கோயில்களைப் பராமரிக்காமல் வெளியூர்க் கோயில்களைத் தரிசனம் செய்து புண்ணியம் சம்பாதிக்கலாம் என்று கருதாதீர்கள்.

ஆலயம் நமது உயிர், நாம் உடல். ஆலயம் காப்போம் என்று சொல்லும்போது நமது பண்பாடும், கலாச்சாரமும், வகுப்பு ஒற்றுமையும், தேச நலனும் கட்டுப்பாடும், மொழி வளர்ச்சியும் பிறருக்கு உதவும் மேலான குணங்களும் நம்மிடையே வளரும். அனைவரும் ஆலய நலனில் அக்கறை கொண்டு மேலான நலன்களை யெல்லாம் அடையப் பிரார்த்திக்கின்றேன்.

சீரார் சண்பைக் கவுணியர்தம்
    தெய்வமரபில் திகழ்விளக்கே
தெவிட்டாதுளத்தில் தித்திக்கும்
    தேனே அழியாச் செல்வமே
காரார் மிடற்றுப் பவளமலைக்
    கண்ணின் முளைத்த கற்பகமே
கரும்பே கனியே என் இரண்டு
    கண்ணே கண்ணிற் கருமணியே
ஏரார் பருவம் மூன்றில் உமை
    இனிய முலைப்பால் எடுத்தூட்டும்
இன்பக் குதலை மொழிக்குருந்தே
    என் ஆருயிருக் கொருதுணையே
பேரார் ஞான சம்பந்தப்
    பெருமானே, நின் திருப்புகழைப்
பேசுகின்றோர் மேன்மேலும்
    பெருஞ்செல்வத்தில் பிறங்குவரே

—திருவருட்பா.





திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை அருள்மிகு மாணிக்கவிநாயகர் உற்சவர் மண்டபத்தில், திருக்கோயில்' ஆசிரியர் திரு. **ந. ரா. முருகவேள்**, M.A., M.O.L, அவர்கள் எழுதித் தொகுத்துதவிய **"விநாயகர் பெருமை"** என்னும் நூல் வெளியீட்டு விழாவில், திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை, M.A., B.L., அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I. A. S., "முத்தமிழ்க் காவலர்" திரு கி. ஆ. பெ. விசுவநாதம், "கவிதாமணி" திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார், துணை ஆணையர் திரு. உ. ஆறுமுகம், B.A., B.L., நிர்வாக அதிகாரி திரு. கே. என். சொர்ணம் முதலிய பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தல்.

ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதசுவாமி திருக்கோயிலின் மொட்டைக் கோபுரத் திருப்பணியை, ஆணையர் திரு. **எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S.,** அவர்கள் அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தல்.

ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதசுவாமி திருக்கோயிலைச் சேர்ந்த துணைக்கோயிலாகிய சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலில் செய்யப்பெறும் பலவகைத் திருப்பணிகளுக்கு, ஆணையர் திரு. **எம். கே.** பாலசுப்பிரமணியம், I A S, திருப்டணியரசு, மதில்பணிமணி திரு. **டி. எம்.** நாராயணசாமி பிள்ளை, M.A., B.L., அவர்கள் தலைமையில், அடிக்கல்நாட்டித் தொடங்கி வைத்தல். உடன் இருப்பவர் ஸ்ரீரங்கம் உதவி ஆணையர்—நிர்வாக அதிகாரி திரு. **வி. கே. வேலுசாமி,** B.A., அவர்கள்.

வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.